Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 | கதிர் : 341 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி 21 ஆம் நாள் 07 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+16 | விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## காப்புறுதி என்ற பெயரில்

# ஒய்வூதியர்களின் பணத்தை கொள்ளையிட அரசு சூழ்ச்சி!

### அம்பலப்படுத்துகிறார் எதிர்க்கட்சித் தலைவர்



கொழும்பு, நவம்பர் 7

நாட்டில் உள்ள ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தை தன்னிச்சையாக கொள்ளையடிக்க அரசு முடிவு செய்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். ஓய்வூதியர்களின் பணத்தை அக்ரஹார காப்பீட்டில் வரவு வைக்கும் போர்வையில் இவ்வாறு சுரண்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, இந்தச் சுரண்டலை மேற்கொள்வதற்கு ஓய்வூதிய சமூகம் இரண்டு வாரங்களுக்குள் விருப்பமா? இல்லையா? என்பதற்கு பதிலளிக்கத் தயங்கினால் கண்டிப்பாக அரசு அந்தப் பணத்தை சுரண்டும் என அவர் குறிப்பிட்டார். 15 ➤

## வேகமெடுக்கும் காணி சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

புங்குடுதீவில் கடற்படையினரின் தேவைக்காக இரண்டு இடங்களில் காணி சுவீகரிப்புக்காக நில அளவை மேற்கொள்ளப்படவுள்ளது.

புங்குடுதீவு வல்லவன் பகுதியில் நாளை திங்கட்கிழமையும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 15 ➤



## நீரில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

பாடசாலைக்கு சிரமதானம் செய்யப்போவதாக கூறிவிட்டுச் சென்ற மாணவன், நண்பர்களுடன் கிணற்றில் நீந்திய போது அதில் 15 ➤

## சிமெந்து விலை மீண்டும் எகிறியது

கொழும்பு, நவ. 7

50 கிலோ நிறையுடைய சிமெந்துப் பைக்கெற்றின் விலையை 177 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் புதிய விலை ஆயிரத்து 275 ரூபாவாக மாற்றமடையவுள் 15 ➤

## நீதி அமைச்சர் அலி சப்ரியின் பதவி விலகலை ஏற்க மறுப்பு

கொழும்பு, நவ. 7

'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் பதவிக்கு ஞானசார தேரரை நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதியமைச்சர் அலி சப்ரி இரண்டு பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதியிடம் நேற்றுமுன்தினம் கையளித்துள்ளார். எனினும், அலி சப்ரியின் பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை 15 ➤

## விபத்தில் முதியவர் சாவு

தென்மராட்சி, நவ. 7

வீதியைக் கடக்க முற்பட்ட முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தைச் சேர்ந்த 15 ➤

### முச்சந்தி முரளி

"பெஞ்சன் எடுக்கிறவைய கூட இந்த அரசாங்கம் நிம்மதியா இருக்க விடாது போல..."



## மாரடைப்பால் சாரதி இடைநடுவில் சாவு!

### பயணிகள் பத்திரம்

தென்மராட்சி, நவ. 7

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோரை ஏற்றி வந்த ஹைஏஸ் வாகனச் சாரதிக்கு இடைநடுவில் மாரடைப்பு ஏற்பட்டு 15 ➤

## பட்டதாரிகள் வேலை நிறுத்தம்

### வடக்குச் சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 7

மத்திய மற்றும் மாகாண அரச சேவையில் பட்டதாரி அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 4 கோரிக்கைகளை முன்வைத்து, நாடு முழுவதும் நாளை திங்கட்கிழமை மேற்கொள்ளும் சுகவீன விடுப்புடன் கூடிய ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு வடக்கு மாகாண அரச சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. 15 ➤

## இளம் பெண் கடத்தல் தெல்லிப்பழையில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 7

ஹைஏஸ் வாகனத்தில் வந்தவர்களால் இளம் பெண் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் கூறுகின்றனர். தெல்லிப்பழை மருத்துவமனையில் பணிபுரியும் குறித்த இளம் பெண் தனது சகோதரனது மோட்டார் சைக்கிளில் மருத்துவமனைக்கு சென்றுகொண்டிருந்த 15 ➤

## 'ஒரே நாடு ஒரே சட்டம்' ஞானசாரரை ஏன் நியமித்தேன்?

### கோத்தா தன்னிலை விளக்கம்



கொழும்பு, நவ. 7

'ஒரே நாடு, ஒரே சட்டம்' எனும் வேலைத்திட்டம் பற்றி ஞானசார தேரர்தான் கடந்த ஐந்தாண்டுகளாக கதைத்துவந்தார். அதனால்தான் அது தொடர்பில் வேலைத்திட்டத்தை உருவாக்கித் தருமாறு அவர் தலைமையில் செயலணியை நிய மித்துள்ளேன். இவ்வாறு ஜனாதி 15 ➤

# சிங்கள- பௌத்த மயமாக்கலுக்கு தீயாக வேலை செய்யும் அங்கஜன்

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் சாடுகிறார்

**யாழ்ப்பாணம், நவ. 7**
**தமிழரின் பாரம்பரிய நிலங்களில் சிங்கள- பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதற்கு அங்கஜன் இராமநாதன் தீவிரமாக வேலை செய்கின்றார் என்று பா.கஜதீபன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-


கோத்தாபய அரசு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை இரண்டு மூன்று மடங்காக அதிகரித்து, மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குட்படுத்திய நிலையில் சிங்கள மக்களின் கடும் எதிர்ப்பை சமாளிப்பதற்கும் மக்களை திசை திருப்புவதற்கும் அரசு ,தனி பௌத்த- சிங்களம் என்ற கோட்பாட்டை கையிலெடுத்துள்ளது.

அதிலொரு பகுதியாகத்தான் தேசிய மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வடக்கில் முகாமிட்டு தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்கள- பௌத்த சின்னங்கள் உள்ளதாக அடையாளப்படுத்த முற்படுகின்றார். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தீவிரமாக வேலை செய்வது வெட்கக்கேடானது.

இந்த அரசின் முக்கிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாகூட சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு துணை போகக்கூடாது என்றுதான் இந்த விடயங்களில் பங்கெடுக்காமல் பின்னிற்கின்றார் என்று எண்ணுகின்றோம். ஆனால், அங்கஜன் இராமநாதன் எமது மக்களை முட்டாள்கள் என நினைத்து, இவ்வாறான செயல்களை செய்வதொன்றும் வேடிக்கையான விடயமல்ல. அவர் தனது வியாபாரத்துக்காக எமது மக்களை மட்டுமல்ல தமிழர்களின் அடையாளங்களைக் கூட மாற்றுவதற்கு துணைபோவார் என்பது சாதாரணமானது.

எனவே எமது மக்கள் தமது பூர்வீக நிலங்களை விட்டுக்கொடுக்கக் கூடாது காரைநகரில் துணிவுடன் செயற்பட்டது போன்று அனைத்து இடங்களிலும் மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும்- என்றுள்ளது. (ஒ-5)

# பாதித் தேங்காய் ஒரு நாளைக்கு போதுமாம்



கொழும்பு, நவ. 7
தேங்காயை சரியான முறையில் பயன்படுத்தினால் ஒரு நாளைக்கு ஒரு வீட்டுக்கு ஒரு பாதித் தேங்காய் போதுமானதாகும் என்று தென்னை ஆராய்ச்சி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அலஹப்பெரும தெரிவித்தார்.

தேங்காய்ப்பால் எடுக்கும் போது கையால் பிழிந்தால் 20 - 30 வீதம் அளவில் தேங்காய்ப் பால் கிடைத்தாலும், கிரைண்டர் ஊடாக அரைத்து எடுக்கும் போது 50 வீதத்துக்கும் அதிமான அளவு தேங்காய்ப்பாலை பெறமுடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு தேங்காய்ப் பாவனையில் 30 சதவீதம் வீணடிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வருடாந்த தேங்காய் உற்பத்தில் 70 வீதம் உள்நாட்டு பாவனைக்காகப் பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார். (ஒ-இ)

# மஹிந்த - விமல் இரகசியச் சந்திப்பு

கொழும்பு, நவ. 7
பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கும் இடையில் அவசர சந்திப்பு கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பில் அவர்கள் இருவரைத்தவிர வேறு யாரும் பங்கேற்கவில்லை.

பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் விமல் வீரவன்ச இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளதாகவும், அரசுக்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் இடையிலான நெருக்கடிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி தலைமையில், கூட்டணி கட்சித் தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடலையும், அதன் பின்னர் கட்சித் தலைவர்களுக்கும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் கலந்துரையாடலை நடத்துவதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் ஐந்தாம் ஆண்டு நிறைவு மாநாட்டில் விமல் வீரவன்ச கலந்துகொள்ளவில்லை என்பதும், அவரது கட்சியின் பிரதிநிதி மாத்திரம் கலந்துகொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# சதொசவில் பொருள்கள் கொள்வனவு நிபந்தனைகள் மீளப்பெறப்பட்டன

கொழும்பு, நவ. 7
சதொச நிறுவனத்தில் இருந்து அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது ஏனைய பொருள்களை கொள்வனவு செய்ய நுகர்வோருக்கு விதிக்கப்பட்டிருந்த நிபந்தனை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது.

சீனி மற்றும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது நடைமுறையில் இருந்த நிபந்தனை நீக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

நுகர்வோர் இனி எத்தனை பொருள்களை வேண்டுமானாலும் கொள்வனவு செய்ய முடியும் என்று கூறிய அமைச்சர், தான் எந்த வகையிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தை மீறவில்லை என்றும் கூறினார். குறிப்பிட்ட முறையில் சில கொள்வனவுகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கும் உரிமை அரசுக்கு உள்ளதாக அமைச்சர் குணவர்தன தெரிவித்தார். (ஒ-இ)

# எம்.பி.க்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி

கொழும்பு, நவ. 7
60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் தொற்றா நோய் நிலைமைகளைக் கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, மூன்றாவது கொரோனா தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியைச் செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணரத்ன இதனைத் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# ஜனநாயக வழியில் புரட்சிகரமான மாற்றம்

உருவாக்குவாராம் கோத்தாபய

இராணுவ நிர்வாகமும் எனக்குத் தெரியும். எனினும், அந்த வழிமுறையை கையாளமாட்டேன். மக்கள் அதனை எதிர்பார்க்கவில்லை. நான் ஜனாதிபதியானால் ஜனநாயகம் இல்லாது போய்விடும் என்று விமர்சித்தவர்கள்தான், இன்று இராணுவ நிர்வாகத்தை என்னிடம் கோருகின்றனர். ஜனநாயக வழியில் நிச்சயம் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவேன். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை திட்டத்தின் பிரகாரம் ஒரு இலட்சம் கிலோமீற்றர் காப்பெற் பாதை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பூர்த்தி செய்யப்பட்ட ஆயிரத்து 500 வீதிகளை ஒரே நாளில் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று என்னை விமர்சிக்கும் இரு தரப்பினர் உள்ளனர். அவர்களில் ஒரு தரப்பினர் கடந்த இரு வருடங்கள் தொடர்பில் போதிய தெளிவில்லாதவர்கள். கடந்த இரு வருடங்களிலும் சாதாரண நிலைமை இருக்கவில்லை. எனக்கு மட்டுமல்ல உலக நாட்டுத் தலைவர்களும் பெரும் சவால்களை எதிர்கொண்ட காலப் பகுதியே அது. புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும்போது சிலருக்கு வலிக்கின்றது. அதனால் அவர்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இவர்களே அந்த இரண்டாவது தரப்பினர்.

இன்று விவசாயிகள் எனக்கூறிக் கொள்ளும் சிலர் போராடிவருகின்றனர். எந்த அரசு விவசாயிகளை பாதுகாத்தது? நான் ஆட்சிக்குவரும் போது நெல்லை 25 ரூபாவுக்குக்கூட விற்பனை செய்யமுடியாத நிலைமை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்தது குறைந்தபட்சம் 40 ரூபாவை வழங்குமாறு விவசாயிகள் கோரினர். இந்நிலையில் நெல்லின் விலையை 50 ரூபாவாக நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன். இன்று 60 முதல் 80 ரூபாவரை நெல் விற்கப்படுகின்றது. இதன்மூலம் விவசாயிகள் நன்மையடைகின்றனர்.

அத்துடன், இரண்டு வருடங்கள் இலவசமாக இரசாயன உரம் வழங்கப்பட்டது. இயற்கை விவசாயத்தை நோக்கி நகர்வோம், சேதனப்பசளை உற்பத்தி செய்யப்படும் என சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நச்சுத்தன்மையற்ற உணவை மக்களுக்கு வழங்குவதே உணவு பாதுகாப்பாகும். அதனை நாம் செய்வோம். விவசாயிகளுக்கு கஷ்டத்தை கொடுக்க வேண்டும் என நான் எண்ணவில்லை. பலவந்தமாக சேதனப் பசளையை திணிப்பதற்கும் எனக்கு தேவை கிடையாது. ஆனால், நான் மக்களுக்கு உறுதியளித்த சரியான விடயத்தையே செய்கின்றேன்.

இராணுவ கோத்தாபயவைக் கோரினோம் என்கிறனர் சிலர். சேதனப் பசளையை பயன்படுத்துமாறு இராணுவ பாணியில் செய்ய வைக்க முடியும். ஆனால் மக்கள் அதனை எதிர்பார்க்கவில்லை. நான் ஆட்சிக்கு வந்தால் ஜனநாயகம் இல்லாமற் போய்விடும் என விமர்சித்தவர்களே, இன்று இராணுவக் கட்டுக்கோப்பான தலைமைத்துவம் பற்றி கதைக்கின்றனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதால் இன்றளவிலும் நாம் ஜெனிவா செல்கின்றோம். எனவே, அப்படிச் செய்ய வேண்டிய தேவை எமக்கு இல்லை. புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவேன்- என்றார். (ஒ-44)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுவிஸ் தூதுக் குழு சந்திப்பு

கொழும்பு, நவ. 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், சுவிற்ஸர்லாந்து உயர்மட்ட தூதுக் குழுவுக்குமிடையிலான சந்திப்பு, எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள்து.

சுவிற்ஸர்லாந்து வெளிவிவகார அமைச்சின் ஆசிய, பசுபிக் உதவிச் செயலர், இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்து தூதுவர் உள்ளிட்டவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். கொழும்பிலுள்ள, சுவிஸ் இல்லத்தில் மாலை 5.30 மணிக்கு இந்தச்சந்திப்பு இடம்பெறும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் கலந்துகொள்வார்கள்.

இதேவேளை- நாளை மறுதினம்இந்தியத் தூதுவருக்கும் கூட்டமைப்புக்குமிடையிலான சந்திப்பு இடம்பெறும். இதிலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், மாவை சேனாதிராசாவும் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-இ)

# ஆசியாவின் வறிய நாடாக இலங்கை நிச்சயம் மாறும்

## அரசின் நடவடிக்கைகளை சாடுகிறார் பிரியதர்ஷன யாப்பா



கொழும்பு, நவ.7

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. இலங்கை ஆசியாவில் உள்ள மிகவும் வறிய நாடு என்ற நிலைமைக்கு மாறுவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய அமைச்சரவை தோல்வியடைந்துள்ளது. அதனால், அமைச்சர் பதவி வழங்கினாலும் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை .

அரசாங்கம் செய்யும் எதுவும் மக்களுக்கு தெரியவதில்லை. அமைச்சர்கள் கூறும் விடயங்களில் கூட நம்பிக்கையில்லை. இப்படியான நிலைமையில் மாற்று சக்தி ஆட்சிக்கு வருவதைத் தவிர்க்க முடியாது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசின் இருப்பானது நிச்சயமற்றது. சமூகத்தின் இருப்பும் அதனை விட நிச்சய மற்றது, அமைச்சரவை தோல்வியடைந்துள்ளது.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. இலங்கை ஆசியாவில் உள்ள மிகவும் வறிய நாடு என்ற நிலைமைக்கு மாறுவதை தடுத்து நிறுத்த முடியாது. தற்போதைய அரசிடம் வேலைத் திட்டங்கள் இல்லை, நிலைப்பாடுகள் இல்லை, கொள்கைகளும் இல்லை. நிர்வாகம் செய்வதற்கான முறைகளும் இல்லை, அரசு எங்கு போகிறது என்பது எமக்கும் புரியவில்லை, மக்களுக்கும் புரியவில்லை - என்றார். (ஏ-இ)

# பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் கொரோனாப் பரவல் அதிகரிப்பு

## எச்சரிக்கிறார் மருத்துவ நிபுணர்



**கொழும்பு, நவ.7**

**பாடசாலை மாணவர்கள் உட்பட சிறுவர்களுக்கு மீண்டும் கொவிட் வைரஸ் தொற்று அதிகரித்துள்ளது என்று பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

தற்போது வரை கொரோனாத் தொற்றுக்குள்ளான பாடசாலை மாணவர்கள் உட்பட சிறுவர்கள் 16 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த நாள்களில் சிறுவர்கள் மத்தியில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. கொரோனாத் தொற்று இந்த வேகத்தில் சிறுவர்களிடையே பரவினால் ஜனவரி மாதமளவில் மீண்டும் பாடசாலைகளை மூட நேரிடலாம். அது மாத்திரமின்றி நாட்டை முடக்க நேரிடும். இதனால் பெற்றோர் பிள்ளைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலை கட்டமைப்பை தொடர்ந்து நடத்திச் செல்வதற்கு பெற்றோர் ஆதரவு வழங்க வேண்டும்.

அதேபோல் பெற்றோர், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது நல்லதல்ல. அவர்கள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தொற்றுப் பரவும். வீட்டில் உள்ள சிறுவர்களுக்கும் பரவும். பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவுடன் செயற்பட வேண்டும். குழந்தைகள் மற்றும் சிறுவர்களை அவசியமின்றி வெளியே கொண்டுசெல்லவேண்டாம் - என்றார். (ஏ-இ)

# அரசை விமர்சித்த டியூ. பெரமுன போர்க்கொடி

கொழும்பு, நவ.7

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவையும், அவரின் அமைச்சரவையையும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் டியூ. குணசேகர கடுமையாக விமர்சித்துள்ள நிலையில், அவர் மீது சரமாரியாக சொற்கணை தொடுத்துள்ளது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரமற்ற கைப்பாவை என்பதே எனது கருத்து. சுதந்திரத்துக்குப்பின்னர் உருவான முட்டாள்தனமான அமைச்சரவையே இது. மடத்தனமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்று டியூ. குணசேகர அரசு மீதும், ஜனாதிபதி மீதும் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பெரமுன கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே கருத்து வெளியிட்டுள்ளார்.

"டியூ. குணசேகர என்பவர் பலவீனமான அரசியல் கட்சித் தலைவர். கம்யூனிஸ்ட் கட்சியை அழித்தவர். கோப் குழுவின் தலைவராக இருந்து எதனையும் செய்யவில்லை. அவர் நல்லாட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர் என்று கூறியுள்ளார். (ஏ-இ)

# மக்களைத் திசைதிருப்ப சூழ்ச்சி செய்கிறது அரசு

## ஹரிணி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.7

தற்போதைய அரசின் புகழ் முன்னெப்போதும் இல்லாத வகையில் வேகமாக குறைந்து வருகின்றது என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப பல்வேறு சூழ்ச்சிகளை அரசு பயன்படுத்துகிறது. இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க மக்கள் ஆணையுடன் பதவிக்கு வந்த வேறு எந்த அரசும், இந்தளவு குறுகிய காலத்துக்குள் தனது பிரபலத்தை இழக்கவில்லை.

இரண்டு வருடங்கள் முடிவதற்குள் இந்த அரசின் புகழ் குறைந்துவிட்டது. பல்வேறு துறைகளில் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. எரியும் பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப பல்வேறு சூழ்ச்சிகளை, அரசுகள் கையாள்வதை கடந்த 73 ஆண்டுகளாகப் பார்க்கமுடிகிறது. தற்போதுள்ள அரசும், அதே தந்திரத்தையே பயன்படுத்துகிறது - என்றார். (ஏ-இ)

# பஸிலுக்கு எதிராக மனு

கொழும்பு, நவ.7

பஸில் ராஜபக்சவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தமை செல்லுபடியற்றது என உத்தரவிடக் கோரி, உலப்பனே சுமங்கள தேரர் உட்பட மூன்று பேர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இரட்டைக் குடியுரிமை கொண்ட பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்தமையை அடிப்படையாகக் கொண்டு இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# தொற்றுக்கு உள்ளாகும் கர்ப்பிணிகள் அதிகரிப்பு



கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்படும் கர்ப்பிணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது என்று குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணிகளின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்த நிலையில், தற்போது மீண்டும் அதிகரிப்பை காண முடிகின்றது.

நாட்டில், இதுவரை தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள், தடுப்பூசியை விரைவில் ஏற்றிக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் அதிகளவில் ஒன்று கூடும் இடங்களுக்குச் செல்வதை தவிர்த்து, சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்- என்றார். (ஏ-இ)

# ஆட்சியாளர் மாறினால் எதுவுமே நடந்துவிடாது!

## பெரமுன எம்.பி. விளக்கம்

கொழும்பு, நவ.7

தற்போதைய அரசின் நடவடிக்கைகள் சரியில்லை என்றால், ஆட்சி அதிகாரத்தை யாரிடம் ஒப்படைப்பது என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசிடம் ஆட்சி அதிகாரத்தை கையளித்த பின்னர், மக்கள் வரிசைகளில் நிற்பது முற்றாக இல்லாமற் போய்விடுமா? டொலர் தட்டுப்பாடு நீங்கி விடுமா, எரிபொருள் விலைகள் குறைந்து விடுமா?.

அரசு மாறியது, ஆட்சியாளர் மாறினர் என்பதற்காக நிலவும் நிலைமையில் மாற்றம் ஏற்படாது என்பதே உண்மையானது- என்றார். (ஏ-இ)

# இறப்பு வீதத்தை குறைக்கும் பைசரின் "பேக்ஸ்லோவிட்"

கொழும்பு, நவ.7

அமெரிக்காவின் பைசர் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக தயாரித்துள்ள மாத்திரை மூலம் உயிரிழப்பு மற்றும் தொற்று 89 சதவீதம் குறைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. பேக்ஸ்லோவிட் என்ற இந்த மாத்திரையின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளன என்று பைசர் நிறுவனம் அறிவித்துள்ளது. ஆயினும் இந்த மருந்துக்கு இதுவரை அமெரிக்காவின் மருத்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் அனுமதி வழங்கவில்லை.

அதேநேரம் பிரிட்டன் 2 இலட்சத்து 50 ஆயிரம் மாத்திரைகளைக் கொள்வனவு செய்வதற்கு தற்போது விண்ணப்பித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ஏ-இ)

# வெடித்துச் சிதறும் நிலையில் இலங்கைப் பொருளாதாரம்

## எச்சரிக்கின்றது நிக்கீ ஏஷியா

**கொழும்பு, ஒக்.7**

**இலங்கையின் பொருளாதாரம் வெடிக்கப்போகும் நேரக் குண்டைப் போன்றது என்று பிரபல சர்வதேச பொருளியல் சஞ்சிகைகளில் ஒன்றான நிக்கீ ஏஷியா தெரிவித்துள்ளது.**

இலங்கை மத்திய வங்கி கடந்த ஒக்ரோபர்மாதம் மட்டும் 130 பில்லியன் ரூபாவுக்கும் மேல் பணம் அச்சிட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையில் பண விநியோகம் 2.8 ட்ரில்லியன் ரூபாவாகும். இது பெரும் அதிகரிப்பாகக் கருதப்படுகின்றது.

அச்சிடப்படும் பணத்தின் பெரும்பகுதி அரச ஊழியர்களுக்கு சம்பளங்களை வழங்கவும், ஓய்வூதியம் செலுத்தவுமே செலவிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக தனியார் துறையில் சம்பளக் குறைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அரச நிறுவனங்களில் தொடர்ச்சியாக முழுச் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. வட்டி வீதத்தை பேணுவதற்காக அரசு தொடர்ச்சியாக பணத்தை அச்சிடுகின்றது என்று அந்தச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அதேவேளை, நிதிக் கட்டமைப்புக்களை ஸ்திரப்படுத்திக்கொள்ள அரசு பணம் அச்சிடுகின்றது என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

எனினும், அவ்வாறு மித மிஞ்சிய அளவில் பணம் அச்சிடுவது பணவீக்கத்தை உருவாக்கும் என மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ. ஜே. விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சி பற்றி எதிர்வு கூறல்கள் வெளியிடப்பட்டாலும், உண்மையில் ஒரு வீத நிகர வளர்ச்சியை மட்டுமே எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## அத்தியாவசியப் பொருள் இறக்குமதியில் சிக்கல்!



கொழும்பு, நவ.7

மக்கள் வங்கியை சீனா கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதால் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது என்று அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் வங்கியை சீனா மட்டும் கறுப்புப் பட்டியலிட்டுள்ள நிலையில், சர்வதேச நிறுவனங்கள் இலங்கையின் ஒட்டுமொத்த வங்கிக் கட்டமைப்பு குறித்து அவதானம் செலுத்தும். பிரதானமாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்களை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

இலகு தவணை முறையில் இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு பணம் செலுத்துவதற்கு முடியாத நிலை உருவாகியுள்ளது. ஆசிய நிறுவனங்கள் இலங்கையுடன் கொடுக்கல் வாங்கல் செய்ய அச்சம் வெளியிட்டுள்ளன.

மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவ்வாறு செய்தால் சர்வதேச நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வது இலகுவாக அமையும் - என்றார். (எ-இ)

## செங்கோல் சேதம்!



கொழும்பு, நவ.7

நாடாளுமன்ற செங்கோல் சிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது என்று நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமைதியின்மைகளின்போது, இந்த சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்புகின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

செங்கோலில் பெரும் சேதங்கள் இல்லை. செங்கோலில் உள்ள சேதங்களைச் சரி செய்வதற்கான இயலுமை உள்நாட்டில் இல்லை. சேதங்களைச் சரி செய்ய வேண்டுமானால் பிரிட்டனில் உள்ள அதன் தாய் நிறுவனத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## நல்லதொரு பட்ஜெட்டை சமர்ப்பிப்பாராம் பஸில்



கொழும்பு, நவ.7

மக்களுக்குப் பல நிவாரணங்களை வழங்கும் நல்லதொரு வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச முன்வைப்பார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசு ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வு காணப்படும்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக வேலை இழந்தவர்கள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் முன்வைப்பார் என நான் நம்புகிறேன்.

இப்போது நாடு முழுவதும் விவசாயிகள் 'போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், அரசியல் போராட்டங்கள் எனப் பல போராட்டங்கள் நடக்கின்றன. இது உண்மையில் மீண்டும் கொரோனா அலை ஏற்பட வழிவகுக்கும். சுகாதாரத்துறையால் கொரோனாக் கட்டுப்பாட்டுகள் விதிக்கப்பட்டிருக் கும் நேரத்தில், நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்தப்படுவதை ஏற்க முடியாது- என்றார். (எ-இ)

## தலையிடி கொடுப்பதற்கு தயாராகிறது எதிர்க்கட்சி

கொழும்பு, நவ.7

அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்ட மிட்டுள்ளது. இந்தப் போராட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் நடத்தப்படும் என்று தெரியவருகின்றது.

பொருள்கள் தொடர்ச்சியாக விலையேற்றப்படுவதைக் கண்டித்தும், விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கக் கோரியும், அதிபர்கள்-ஆசிரியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துமே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை, தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கும் இந்தப் போராட்டத்தில் கடும் எதிர்ப்பு வெளியிடப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)



கொழும்பு, நாகலகம் வீதி, நீர்ப்பம்பி நிலையம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளால் நேற்றுமுன்தினம் கண்காணிக்கப்பட்டது. கொழும்பு நகரில் மழை நீர் நிரம்புவதைத் தடுத்தல், ஏனைய காலங்களில் வடிகால்களில் நீர் குறைவதால் ஏற்படும் அசுத்த நிலைமையைத் தடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இந்தத் திட்டம் 2012ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்துக்காக 321 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்ட நிலையில், உலக வங்கி 213 மில்லியன் டொலரை இலகு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. (எ-இ)

## ஜனவரி மாதத்துக்குள் இலங்கைக்கு "கண்டம்"

கொழும்பு, நவ.7

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் இலங்கை கடும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் என்று கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேசப் பத்திரங்கள் உட்பட தவணைகளில் 1.5 பில்லியன் டொலரைத் திருப்பிச்செலுத்த வேண்டியுள்ளமையால் இந்த நிதி நெருக்கடி ஏற்படும் - என்றும் இந்தப் பணத்தைச் செலுத்துவதற்கான திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட காலத்துக்குள் பணத்தை செலுத்தாவிட்டால் இலங்கை திவாலாகும் அபாயம் உள்ளது. சர்வதேசக் கடன் தர நிர்ணய முகவர் நிலையங்கள், ஏற்கனவே இலங்கையை திவாலாகும் நிலைக்கு அருகில் பட்டியலிட்டுள்ளன என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

# மன்னாரில் கனமழை பெரும் வெள்ள இடர்!

## மாவட்டச் செயலர் கள ஆய்வு

**மன்னார், நவ. 7**

**மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ள இடர் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.**





மன்னார், மூர்வீதி, உப்புக்குளம், பள்ளிமுனை, சாந்திபுரம், சௌத்பார் பனங்கட்டு கொட்டு, எமில்நகர் உள்ளிட்ட கிராமங்கள் மிகையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. மழைநீர் தமது வீடுகளுக்குள் புகுந்த நிலையில் அந்தப் பகுதியில் வசிக்கும் பல குடும்பங்கள் தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளன. குறித்த பகுதிகள் மிகவும் தாழ்வான பிரதேசம் என்பதால் மழை வெள்ள நீரை வெளியேற்றுவதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் மற்றும் கிராம சேவையாளர் உள்ளிட்டவர்கள் கள ஆய்வை மேற்கொண்டனர். (ம-56)




# வடிகால்கள் அமைக்கப்படாததால் வடிந்தோட முடியாமல் வெள்ளம்!

## வர்த்தகர்கள் அதிருப்தி



முல்லைத்தீவு, நவ.7

முல்லைத்தீவு, உடையார்கட்டு நகரத்தை அண்டிய பகுதிகளில் வடிகால்கள் அமைக்கப்படாததன் காரணமாக மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது என்று அந்தப் பகுதி வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

உடையார்கட்டு மகா வித்தியாலயம், உடையார்கட்டு ஆரம்ப வித்தியாலயம் ஆகிய பகுதிகளில் கூடுதலாக வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள் என்பவற்றில் தேங்கும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்கு வர்த்தகர்கள் ஒன்றிணைந்து வடிகால்களை அமைத்தபோதும், அது வெற்றியளிக்கவில்லை. கடந்த 10 ஆண்டுகளாக இந்த நிலையே தொடர்கின்றது. நிலைமையைச் சீர்செய்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதிலும், எந்தப் பயனும் இல்லை - என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-13)

# சமுர்த்திப் பயனாளிகள் 57 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரம் கையளிப்பு

சாவகச்சேரி, நவ. 7

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 57 சமுர்த்திப் பயனாளிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன. விவசாயத்தில் ஈடுபடும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு இந்த நீரிறைக்கும் இயந்திரங்கள் ஆகியவை பிரதேச செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் மற்றும் யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு பயனாளர்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி1-9)

# திரவ உரம் வழங்கல்

சாவகச்சேரி, நவ. 7

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கான திரவ உரவகைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த உர வகைகள் நாளை மற்றும் நாளை மறுதினம், கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப்படவுள்ளன. அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (ம-ரி-19)

# விபத்தை ஏற்படுத்திவிட்டு ஓட்டோ தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், நவ. 7

குறுக்கு வீதியிலிருந்து பலாலி வீதிக்கு ஏறுவதற்காகச் சென்ற முச்சக்கர வண்டியொன்று விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பியோடியுள்ளது. பரமேஸ்வரா சந்திப்பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வந்த அந்த முச்சக்கரவண்டி, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்துடன் மோதி, ஆசிரியர் ஒருவரையும் மோதித்தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த ஆசிரியர் நோயாளர் காவுவண்டி மூலமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். யாழ்ப்பாணம் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

# கிளிநொச்சியில் பலத்த மழை; குளங்களின் நீர்மட்டம் உயர்வு

கிளிநொச்சி, நவ. 7

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வாரத்துக்குள் பலமான மழையை கிளிநொச்சி எதிர்கொண்டுள்ளது. இதனால் அந்த மாவட்டத்தின் பெரிய குளமான இரணைமடுக் குளம் உட்பட பல குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது. அதிலும் குறிப்பாக கனகாம்பிகைக்குளம் வான்பாய ஆரம்பித்துள்ளது. இதனால் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றும் - கனமழை தொடர்ந்தால் உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ம-113)

## தூர வையுங்கள் கோடரிக் காம்புகளை!

தன் இனத்துக்கே துரோகம் செய்பவர்களை கோடரிக் காம்பு என்று செல்வது வழக்கம். இப்படியான “கோடரிக் காம்பு”களாலேயே தமிழ் இனம் காலம்காலமாக முதுகில் குத்தப்பட்டது என்பதும் வரலாறு. எத்தனையோ அனுபவங்களின் பின்னரும் இந்தகைய “கோடரிக் காம்புகள்” திருந்துவதாக இல்லை.

யாழ்ப்பாணம் வந்திருந்த தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மூன்று நாள்கள் தங்கியிருந்து சென்றிருக்கிறார். காரைநகர் சென்றிருந்த அமைச்சர் அங்குள்ள காணி ஒன்றில் தொல்பொருள் சின்னம் ஒன்று இருக்கின்றது என்ற புதுப் புரளி ஒன்றையும் கிளப்பிச் சென்றிருக்கிறார்.


வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் புராதன வழிபாட்டு இடங்களும், பூர்வீக வாழிடங்களும் தொல்பொருள் திணைக்களத்தால் திட்டமிட்டுக் கையகப்படுத்தப்படுகின்றன. தமிழ் மக்களின் தொன்மையான ஆலயங்கள் பல அகழ்வாராய்ச்சிகள் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அகழ்வாராய்ச்சி செய்யும் இடங்களில் தென்படும் அனைத்தும் பௌத்த மதச் சின்னம் என்கிறது தொல்பொருள் திணைக்களம்.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம், முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயம் ,கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரம் எனத் தொடரும் தொல்பொருள் திணைக்களத்தின் வேட்டை, காரைநகர் வரையில் வந்துவிட்டது. இப்போது இராஜாங்க அமைச்சர் கிளப்பிவிட்டுச் சென்றுள்ள புரளி இலேசில் அடங்கிவிடப் போவதில்லை. அங்கும் இனித் தொல்பொருள் திணைக்களம் மெல்லக் கால் வைக்கும். சிறிது காலத்தின் பின்னர் அங்கு பௌத்த சின்னம் வெளிப்படும். தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் பறிபோகும். அந்தந்தப் பகுதி மக்கள் காட்டும் எதிர்ப்புகளும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் மக்களுக்கு வழங்கும் ஆதரவுமே இந்தத் திட்டமிட்ட பௌத்த மயமாக்கலைத் தடுத்து வைத்திருக்கின்றது.

தமிழ் மக்கள் தங்கள் இருப்புக்காகவும், எதிர்காலச் சந்ததிக்காகவும் போராடிக் கொண்டிருக்க, அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் சில அரசியல்வாதிகள் பதவி சுகத்துக்காகவும், சுயலாபத்துக்காகவும் தங்கள் இனத்தையே காட்டிக்கொடுக்க முயல்வது துரதிர்ஷ்டவசமானது. தமிழ் மக்களின் நலனுக்காகவே, அரசுடன் ஒட்டியிருக்கின்றோம் என்று கூறிக்கொள்ளும் இத்தகையோர், செயலில் அரசுக்கு “ஜால்ரா“ அடிப்பதையே வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றனர். தங்கள் சுயநலத்துக்காக இனத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்குபவர்கள் நிச்சயம் விரட்டியடிக்கப்பட வேண்டியவர்கள்.

தமிழ் மக்களுக்குப் பாதகமான விடயங்களைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தடுத்திருக்க வேண்டியவர்கள், தெற்கில் இருந்து வரும் அமைச்சருக்கு ஆலவட்டம் பிடித்துச் சென்றிருக்கின்றனர். ஆத்திரமுற்று கேள்வியெழுப்பிய மக்களுக்கு, "அமைச்சர் வந்தார், அவருடன் நாமும் சும்மா வந்தோம்" என்று மழுப்பியும் இருக்கிறார். அரசுடன் ஒட்டியிருக்கும் எம்.பி. தெற்கில் இருந்து அமைச்சர் ஒருவர் வருகின்றார் என்றவுடன், அமைச்சரைத் திருப்திப்படுத்த, அரசைத் திருப்திப்படுத்த பரிவாரங்களுடன் ஆலாய் பறக்கும் இவர்களுக்கு தெற்கில் இருந்து வருவோரின் நோக்கம் பற்றிய ஆராய்வும் இல்லை,தங்களுக்கு வாக்கிட்டு பதவியில் அமர்த்திய மக்களைப் பற்றிய சிந்தனையும் இல்லை.

மக்களின் வாக்குகளால் பதவிகளைப்பெற்று, மக்களுக்கே இரண்டகம் செய்வோரை இனங்கண்டு நீக்க வேண்டியது அவசியம். எமது இருப்பையும், உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்கு முதல் செய்ய வேண்டியது இவ்வாறானவர்களைத் தூரவைப்பதே என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.




### மன்னாரில்

# கொரோனாத் தொற்று சடுதியாக அதிகரிப்பு

**மன்னார், நவ. 7**



**மன்னாரில் சடுதியாக கொரோனாத் தொற்று அதிகரித்துவருகின்றது. இந்த மாதத்தின் 4ஆம் திகதி வரை 61பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் கடந்த மாதம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி நிலை இருந்தது. எனினும் கொரோனாக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர், இங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை இந்த மாதம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இடைத்தங்கல் நிலையங்கள் நோயாளர்களால் நிரம்ப ஆரம்பித்துள்ளன. இதன்படி இந்த மாதத்தின் முதல் 4 நாள்களில் 61 பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரை முதலாவது கொரோனாத் தடுப்பூசி 80ஆயிரத்து 850 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.அவர்களில் 73ஆயிரத்து 978 பேர் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் - என்றார். (ம-60)

## கோவிலுக்குச் செல்பவர்கள் விழிப்புணர்வுடன் செயற்படுக

கந்தசஷ்டி விரதம் ஆரம்பித்துள்ளதால் கோவிலுக்குச் செல்பவர்கள் கொரோனாத் தொற்றில் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் சுகாதார நடைமுறைகளை சரிவரப்பின்பற்றி உங்கள் சமயக் கிரியைகளை நிறைவேற்றுங்கள் என சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது

சுகாதார நடைமுறைகள் சரிவரப்பின்பற்றப்படுவதை உறுதிசெய்வது ஆலய நிர்வாகத்தினரின் பொறுப்பாகும். விரதம் இருப்பவர்களுக்கு சனநெரிசல் ஏற்படாதவாறு நேரத்தை ஒதுக்கீடுசெய்து முன்னறிவித்தல் வழங்குங்கள். சூரன்போர் போன்ற விசேட நிகழ்வுகளை நடத்துவதாயின் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் எழுத்துமூலம் முன்னனுமதி பெறப்படுதல் வேண்டும்.

அன்னதானம் வழங்குவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொரோனாப் பரவலுக்கு இடமளிக்கும் வகையில் செயற்படுபவர்கள் மீது தொடர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பணிமனை மேலும் தெரிவித்துள்ளது. (ம-159)

### கச்சாய் பகுதியில்

## கசிப்பு உற்பத்தி மூன்று பேர் கைது

சாவகச்சேரி, நவ. 7

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய்ப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதை யடுத்து அங்கு சுற்றி வளைப்பை மேற்கொண்டபோதே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ச- 9)

நவம்பர் 2021

## வடமாகாண மரநடுகை மாதம்



“ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நடுங்கள்.”

– கரோலஸ் இலினேயஸ்.



## புத்தாடைகள் வழங்கிவைப்பு

முள்ளியவளை, நவ.7

முள்ளியவளை, பூதன்வயல் கிராமத்தில் புத்தாடைகள் வழங்கப்பட்டுள்ளன. 'வனிதா ஜெயகாந்தன்' அறக்கட்டளையின் ஒழுங்குபடுத்தலில் இந்த புத்தாடைகள் வழங்கப்பட்டன. வனிதா ஜெயகாந்தன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் 60 பேருக்கு தீபாவளி தினத்தன்று புத்தாடைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1-19)



புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குள் தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரம் நலிவடைந்த 5 குடும்பங்களுக்கு சுவிற்ஸர்லாந்து அருள்மிகு ஸ்ரீகதிர்காம ஆலய நிர்வாகத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (ச-27)



## பிரிவுபசார நிகழ்வு

சாவகச்சேரி, நவ.7

தென்மராட்சிப் பிரதேச செயலக விவசாய அலகில், கடமையாற்றி, இடமாற்றம்பெற்ற அபிவிருத்தி அலுவலர்களுக்கு நேற்றுமுன்தினம் பிரிவுபசார நிகழ்வு இடம்பெற்றது.

திருமதி ச.மைதிலி, கரவெட்டி பிரதேச செயலகத்துக்கும், திருமதி வி.நிவேதிகா பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கும், த.செந்தில்ரூபன் காரைநகர் பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். (ச-9)




நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள வங்கிகளுள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோருக்கு அதிக கடன் தொகையை கொமர்ஷல் வங்கியே வழங்கியுள்ளது.

நாட்டின் உயிர்நாடியைப்போன்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோருக்கு சக்தியாகத் திகழ முடிந்ததுடன் அவர்களின் வெற்றியே எமது நோக்கமாகவும் உள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரக் கடன்

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது | Fitch Rating AA-(lka) | +94 112 353 353 | www.combank.lk

### பல்லவராயன்கட்டு - பாலாவி வரையான

# வீதிவேலைகள் இடைநிறுத்தம்!

### மழைக்காலத்தில் அசௌகரியம் ஏற்படுமென பூநகரி பிரதேசசபை உறுப்பினர் தெரிவிப்பு



கிளிநொச்சி, நவ. 7


கிளிநொச்சி, பல்லவராயன்கட்டுச்சந்தியில் இருந்து பாலாவி வரை நடைபெற்ற வீதி வேலைகள் இடைநிறுத்தப்பட்டதால், இந்த மழைக்காலத்தில் அந்தப் பகுதி மக்கள் பெரும் இடரை எதிர்நோக்க வேண்டிவரும் என்று பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் பல்லவராயன்கட்டுச்சந்தியில் இருந்து பாலாவி வரையான 17 கிலோ மீற்றர் வீதி வேலைகள் நடைபெற்று வந்த நிலையில், கடந்த ஒன்றரை மாதங்களாக குறித்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் சம்புவெளிப் பகுதியில் 14 மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அரைகுறையாக வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு, பாலாவி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

கடந்த ஆண்டு பெரும் மழையின்போது கரியாலைநாகபடுவான்குளம், பல்லவராயன்கட்டுக்குளம் என்பன குறித்த வீதியை மூடிப் பாய்ந்ததன் காரணமாக மேற்படி கிராமங்களின் மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டனர். வேரவில் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் காவுவண்டி, முழங்காவில் ஆதார மருத்துவமனைக்கோ அல்லது கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கோ நோயாளர்களைக் கொண்டுசெல்லமுடியாத அவலம் காணப்பட்டது.

தற்போது குறித்த வீதி வேலைகளும் அரைகுறையாகக் காணப்படுகின்ற நிலையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வெள்ள அபாயம் மிகுந்த பகுதியாக குறித்த வீதி காணப்படுகின்றது - என்றார். (ம-13)







ஓமந்தை

# ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையம் பிரதேச மருத்துவமனையாக தரமுயர்வு

**வவுனியா, நவ. 7**

**வவுனியா - ஓமந்தை ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையம் பிரதேச மருத்துவமனையாகத் தர முயர்த்தப்பட்டுள்ளது.**



ஓமந்தையின் பல்வேறு கிராமங்களை உள்ளடக்கிக் காணப்பட்ட ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையத்தை பிரதேச மருத்துவ மன்னயாகத் தரமுயர்த்துமாறு மருத்துவர்கள், கிராம மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கையை முன் வைத்து வந்தனர்.

அதற்கமைவாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.மகேந்திரன், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நிலக்சன் ஆகியோர் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் குறித்த விடயத்தை முன்வைத்துத் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் குறித்த கலந்துரையாடலில் ஆராய்ந்த சுகாதார சேவைகள் திணைக் களப் பணிப்பாளர் நாயகம், ஓமந்தை ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையத்தை பிரதேச மருத்து வமனையாகத் தரமுயர்த்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். (ம-18)

யாழ். குடாநாட்டில்

# மரக்கறி விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது எனத் நுகர்வோரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை மற்றும் சாவகச்சேரி போன்ற பிரதான சந்தைகளுக்கு மரக்கறி வகைகள் எடுத்துவந்தாலும் அவை உடனடியாக விற்று தீர்ந்து விடுவதுடன் மரக்கறிகளுக்குத் தட்டுப் பாடும் நிலவுகின்றது என தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# வாழ்வாதார உதவிகள்

புதுக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு கிராமத்தில் வசிக்கும் பொருண்மியம் நலிவடைந்த குடும்பத்துக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் குடத்தனை வடக்கு 'உதவும் உறவுகள்' அமைப்பின் ஒழுங்கமைப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

கனடா பீல் விளையாட்டுக் கழக நண்பர்களின் நிதி அனுசரணையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ரி1-19)

# கால்நடைகளை கட்டி வளர்க்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.7

கோப்பாய் மற்றும் நீர்வேலி தரவை வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதால் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புக்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேய்ச்சலுக்காக சிலர் தமது கால்நடைகளை அவிழ்த்து விடுவதால் அவை நெற்பயிர்களை மேய்கின்றன.

எனவே நெற்பயிர்களை அறுவடை செய்யும் வரை கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ச-17)

புதிய வழித்தடத்தில்

## முக்கொம்பனுக்கு பேருந்து சேவை!

கிளிநொச்சி, நவ. 7

கிளிநொச்சி, பூநகரி, முக்கொம்பன் மகா வித்தியாலய ஆசிரியர்களின் போக்குவரத்து வசதி கருதி இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துச்சேவையை நடத்தவுள்ளது.

அக்கராயனில் இருந்து ஸ்கந்தபுரம் - முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்ற பேருந்துச் சேவை ஸ்கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதி கடுமையாகச் சேதமடைந்தமையால் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக முக்கொம்பன் மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து எதிர்வரும் 8ஆம் திகதி காலை 5.45 மணிக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து பயணித்து, கைதடி, சாவகச்சேரி, பூநகரி, 10ஆம்கட்டை வழியாக முக்கொம்பன் கிராமத்தைச் சென்றடைந்து, மீளவும் முக்கொம்பனில் இருந்து 10ஆம் கட்டைச் சந்தி, பரந்தன், கிளிநொச்சி, திருமுறிகண்டி, அக்கராயன் வரை இந்தப் பேருந்து பயணிக்க உள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் வை.கிருஸ்ணகுமார் தெரிவித்தார்.

ஸ்கந்தபுரம் - முக்கொம்பன்வீதி திருத்தும் வரை தற்காலிக பேருந்துச் சேவை ஏற்பாடாக இது அமைந்துள்ளது என்றும் - முக்கொம்பன் ஆசிரியர்கள், மக்கள், மாணவர்கள் குறித்த பேருந்துச் சேவையை பயன்படுத்தி கிளிநொச்சி நகரத்துக்கு வர முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-13)

## மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

கொடிகாமம், நவ.7

நடந்து சென்றவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நுணாவில் பொலிஸ் நிலையம் அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச -159)

## சறுக்கி வீழ்ந்த பெண் காயம்

கொடிகாமம், நவ. 7

சறுக்கி வீழ்ந்த பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாச்சிமார் கோவிலடியை சேர்ந்த 55 வயதுடைய பெண்ணே இவ்வாறு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

(ச-159)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 06 . 1942

மறைவு 19 . 10 . 2020

### இராசையா கனகரத்தினம்

(V.R.K. மில் முன்னாள் உரிமையாளர்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்ட ராஜாவே!


உன்னைப் பிரிந்து நாம் - இங்கு
உளம் வருந்தும் வேளையிலும்
மீளாத்துயர் போக்க மீண்டும் வருவாயோ எம் உயிரே!
உந்தன் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்த்துளிகளை
மலராக்கி அர்ச்சித்து வேண்டிநிற்றோம்.

364, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(cs 40937) (2.6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19.09.1934

மறைவு 04.11.2021

### சின்னத்தம்பி இராசரத்தினம்

இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசரத்தினம் அவர்கள் கடந்த (04.11.2021) வியாழக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசுவலிங்கம் திருப்பதி தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் (குணம்) அன்புக் கணவரும், கனகமணி, காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இராசமணி, இராஜேஸ்வரி (சின்னமணி) ஆகி யோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி, தியாகராஜா, நடராஜா, கனகசபாபதி, விசாலாட்சி, செல்லம்மா மற்றும் கனகம்மா, செல்லம்மா ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
வட்டுவினி.

தகவல்
குடும்பத்தினர்

(CS 17949) (3.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



மண்ணில் 02.01.1948

விண்ணில் 19.10.2020

கடந்த 19.10.2020 அன்று இறைபதம் எய்திய
எமது குடும்பத் தலைவர்

### அமரர் வேலன் கிட்டிணன்

**திதி – திருதியை**

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு இன்று (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி

குடும்பத்தினர்

(CS 40940) (3.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சுன்னாகத்தில் இயங்கிவரும்

### விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லமாகிய வாழ்வக நிறுவனத்தின்

வாழ்நாள்த் தலைவரும் யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரியின் விரிவுரையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய **உயர்திரு ஆறுமுகம் ரவீந்திரன்** அவர்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையினால் வழங்கப்படும் உயரிய விருதான **"யாழ்விருதினை"** இவ்வாண்டு பெற்றுக்கொண்டமை யினை முன்னிட்டு வாழ்வகசமூகம் பெருமிதம் அடைவதுடன் அவரின் ஈடிணையில்லா பணி மேன்மேலும் சிறக்க வாழ்வக அன்னை **அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின்** பாதம் பணிந்து இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இவ்வுயரிய விருதினை எமது தலைவருக்கு வழங்கிகௌரவித்த யாழ்ப்பாணம் மாநகரசபை சமூகத்தினர் யாவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

வாழ்வகசமூகம்
வாழ்வகம்

(cr 5839 (2.6)

## நண்பியால் சிக்கிய பொலிஸ் அலுவலர்!

கொழும்பு, நவ.7

ஹெரோய்ன் போதைப் பொருளை விற்பனைக்காகப் பொதி செய்து கொண்டிருந்த பொலிஸ் அலுவலர் ஒருவரும், அவருடைய நண்பியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை, தங்காலைப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பிரதேசத்தில் உள்ள தங்கும் விடுதி ஒன்றில் மேற் கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் சிக்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண், தங்காலை தலல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதும், இவர் நீண்டகாலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடு படுபவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெண்ணின் தூண்டுதலின் பேரில் பொலிஸ் அலுவலரும் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்றும் விசாரணைகளில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ-இ)

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

### கேள்வி அறிவித்தல் - 2022

### நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன் கடை, கோழி இறைச்சிக்கடை,சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, கோழியிறைச்சிக்கடை, தோணிக்கல் மீன்சந்தை, சாளம்பைக்குளம் கடை நடாத்துதல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன் கடை, கோழி இறைச்சிக்கடை, சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, கோழியிறைச்சிக்கடை சாளம்பைக்குளம் கடை போன்றவற்றை 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ந் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 26.11.2021ம் திகதி நண்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 26.11.2021ம் திகதி பி.ப 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள்**

1. கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **"தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி.உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்காவீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும.
3. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற் காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
4. 26.11.2021ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.
5. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக்கோரிக்கையை நிராகரிக்கவும் எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு.
6. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும.
7. சந்தைச்சுற்றாடலிலிருந்து 500M சுற்று வட்டாரத்தில் மீன்,இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
8. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். மிகுதியை 8 மாத காலத்திற்கு சம பங்காக பிரித்து மாதாந்த கட்டுப்பணமாக செலுத்தல் வேண்டும்.
9. நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன் கடை, கோழி இறைச்சிக்கடை, சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக் கடை, மீன்கடை, தோணிக்கல் மீன்சந்தை என்பனவற்றிற்கு சபையினால் விதிக்கப்படும் வாடகையினை மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும்.
10. குத்தகைக்கு எடுப்பவர்கள் விற்பனையாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் மீன் மற்றும் கோழி கிலோ ஒன்றிற்கு ரூபா 8.00 அறவிடலாம்.
11. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை, மாதாந்த வாடகை என்பவற்றுடன் அரசாங்கத்தால் அவ்வவ்போது அறவிடப்படும் வரி என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.
12. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

| கடை விபரம் | ஒருவருடத்திற்குரிய குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகைக்கான குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 705030.70 | - | 25000.00 | 1000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 900239.86 | - | 25000.00 | 1000.00 |
| நெளுக்குளம் கோழிறைச்சிக் கடை | 602943.00 | - | 25000.00 | 1000.00 |
| சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 543979.70 | - | 25000.00 | 1000.00 |
| தோணிக்கல் மீன்சந்தை | 27738.04 | - | 25000.00 | 1000.00 |
| சாளம்பைக்குளம் மீன்கடை | 246235.00 | - | 25000.00 | 1000.00 |
| சாளம்பைக்குளம் கடை | - | 3300.00 | 36000.00 | 1000.00 |
| சாளம்பைக்குளம் கோழிறைச்சிக் கடை | - | 3300.00 | 36000.00 | 1000.00 |

தர்மலிங்கம் யோகராஜா,
தலைவர்
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை
03.11.2021

(CR 35824) 1-6

## வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம் (வெளிவாரியானது)

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை சங்க வேலை நாள்களில் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10 ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **தலைவர் வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி என்ற முகவரிக்கு 22.11.2021 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு** முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கவேண்டும்.

**1. பதவி பெயர் : முகாமையாளர் (ஆண்)**

**சம்பள குறியீட்டு இல :**

115 / 10 (கூ.வே. ஆணைக்குழு சு.நி.இ. 04/2018 இன்படி)

**சம்பள அளவு திட்டம் :**

$\frac{17605 - 21785}{198 \times 10 - 220 \times 10}$ (சுற்று நிருப இல 04/2018 இன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 11 ஆம் சம்பளத்திட்டம் தொடர்பாக துறைப் பதவியொன்றில் (03) மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12 ஆம் சம்பளத்திட்டம் தொடர்பான வியாபாரப் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமைகள்

**அல்லது**

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் / க.பொ.த உயர் தரம் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் தொடர்புபட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**பொதுவானது**

01. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

02. வயதெல்லை - 18 வயதிற்கு 45 வயதிற்கும் மேற்படாமல் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

03. விண்ணப்பதாரர் வலி கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலகத்துக்குள் வசிக்கும் ஒருவராக இருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டிய பிரதிகள்
    1. கல்வித்தகைமைச் சான்றிதழ்
    2. வதிவிட உறுதிச் சான்றிதழ்
    3. தேசிய அடையாள அட்டை பிரதி
    4. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
    5. நற்சான்றிதழ்
    6. ஏனைய தகைமைப் பிரதிகள்

**மேலதிக தொடர்புகளுக்கு : 076 711 1168**

தலைவர்
வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர்
விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி

06.11.2021

(CS 40960) (3.6)

## வீடு விலைக்குத் தேவை

நல்ல சூழலில் குறைந்த விலையில்
வீடு விலைக்குத் தேவை.
தொடர்பு: 077 078 3832
(cs 40973) (2x6)

## உடனடி வேலை வாய்ப்பு

சாவகச்சேரியில் இயங்கும் பிரபல றெஸ்ரோரன்றுக்கு பெண் உணவு பரிமாறுபவர். காசாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (Cha 678)(3.6)

தொடர்பு: 077 322 2700

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற்குணமுள்ள உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் விரும்பப்படவில்லை. மணமகளின் யாதகத்தை கீழ்காணும் இமெயில் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

vimasvinothan@gmail.com
(CS 40947) 1-6

## உடனடி வேலைவாய்ப்பு

17 வருடகாலமாக இயங்கி வரும்
எமது கம்பனியில் பல வகையான வேலை
வாய்ப்புகள் உள்ளன.
தரம்: 8 இலிருந்து A/L வரை
தகுதியுள்ளவர்கள் சமூகம் தரவும்
நேர்முகத்தேர்வு 8 ஆம், 9ஆம் திகதிகளில்
காலை: 9.00 மணி தொடக்கம்
பிற்பகல் 4.00 மணிவரை

தொடர்பு: 076 674 3807
077 828 1092
(cs 40965) (2.6)

## வேலையாட்கள் தேவை

**விற்பனை உதவியாளர் (ஆண்/பெண்)**
**பொதியிடல் (பெண்)**
நேர்முகத் தேர்வு :
9.00AM - 4.00 PM
இடம் : **அன்னை நாகா பூட்சிற்றி**
175, K.K.S. Road,
Jaffna.
(CS 17962) 1-6

## தவறவிடப்பட்டுள்ளது

சிறிதரன் நிறோஜன் என்பவருடைய
NP BDN - 3871 இலக்க வாகன பதிவு
சான்றிதழ் (புத்தகம், புத்தக மாற்றீட்டு படிவம்,
அடையாள அட்டை பிரதி) அடங்கிய Bag
யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறை பிராதன
வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.
இதை கண்டெடுத்தவர்கள்
077 362 3242, 077 901 0151
என்ற இலகத்துடன் தொடர்புகொள்ளவும்.
(cs.40963) (2.6)

## வீடு வாடகைக்கு

யாழ் வேம்படி வீதியில் 2 அறை,
2 குளியலறை, சமையலறை, கார்
தரிப்பிடத்துடன் கூடிய வீடு
வாடகைக்குண்டு
(ACO 17636)(3.6)

070 583 3348 / 077 127 9784

## திருமண சேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 91 விசாகம் cz95, சுவாதி, cz85 கார்த்திகை 7செவ்வாய் சூரியன் CZ 84 கேட்டை Pr உள்ள மணமகன்மார் தற்போது இலங்கை வந்துள்ளார்கள். நல்ல படித்த மணமகள்மார் தேவை. 83 Engineer, 86 எக்கவுண்டர், 85 குவான்ரி சேவியர், 87 bsc அரச உத்தியோகம், மணமகன் மாருக்கு. வேலை செய்யும் மணமகள்மார் தேவை.

Whats app - 0094 729106007
Viber - 00447 404954562

## வாகனம் விற்பனைக்கு

Toyota Hiace Super
GL - LH - 172 Dolphin Van
விற்பனைக்கு உண்டு.
கொழும்பு - 12
YOM - 2001, PB - 4 XXX
(ACO 17635)(3.6)

தொடர்பு: 077 741 7525

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் உள்ள
**உணவகத்திற்கு**
வேலைக்கு ஆள்கள் தேவை.

- Cashier
- **உதவியாளர் (சமையல்)**
  Basic Sallary (20000/=)
  பேசிதீர்மானிக்கப்படும்
- IC கொண்டு வரவும்

(cs 40936) (2.6)

077 063 3116

## LOFTY CONSTRUCTIONS (PVT) LTD

LOFTY constructions
(Reg.No): Pv00235519

நாட்டில் எப்பகுதியிலும் உங்கள் கனவு இல்லத்தை
உங்களது காணியிலேயே நிர்மானித்துத் தரப்படும்.


**எமது புதிய 3D வீடமைப்புகள்**




(CR 35832) 6

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தொடர்புக்கொள்ள: 074 100 59 11
Web: www.loftyconstructions.lk எமது இணையத்தளம்
உங்கள் வீட்டு நிர்மாணத்திட்டத்தை எமது அலுவலகத்திற்கு வந்து ஒரே நாளில் வடிவமைத்து 3D வடிவமைப்பை அத்தினமே பெற்றுக்கொள்ளலாம்...
Hot Line 0777 700 738
කාර්යාල අංක / Office No: 011 343 37 92
074 100 59 12
இல.631/A/1/2, வத்தளை.
Lofty constructions
YouTube கண்டுகளியுங்கள்...

## அவசர பணத்தேவையா?



அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த
நகைகள் அறுதியாக
போகின்றனவா?

எந்தவொரு வங்கியில் அடகு வைத்த நகைகளுக்கு
**பவுண் ஒன்றுக்கு ரூபா.23,000/= இற்கு மேல்**
**70 சத அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**
உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு **0767 888 222** இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்
ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 077 1201856 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 076 9914642 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாழைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |
| கிண்ணியா | 077 1201853 | களுவாஞ்சிகுடி | 077 1201864 |
| மஹியங்கனை | 077 1201862 | உடப்புவ | 077 1201851 |
| கல்பிட்டி | 076 1605803 | வேலணை | 076 9940273 |
| மஸ்கெலியா | 076 0909822 | | |

(ACO 17633) 6

## உடனடி வேலை வாய்ப்பு

மிருசுவிலில் உள்ள Tokyo Cement Company இற்கு கனரக வாகன சாரதி, வாகன உதவியாளர், ஆய்வு கூட உதவியாளர் போன்ற வேலைக்கு ஆட்கள் தேவை. (Cha 676)(3.6)

தொடர்பு: 077 160 7804

## வேலையாள்கள் தேவை

வவுனியா வைத்திய சாலைக்கு முன்பாக
இயங்கிக்கொண்டிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மற்றும் சிறு பிள்ளைகளுக்கான பொருள்கள்
விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு இருபாலாரும்
வேலைக்குத் தேவை.
வேலை நேரம்: காலை 6.00 இரவு 7.00
cs 40947 (2.6)

024 222 8686, 076 264 8766

## வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு தெருவில் இயங்கிக் கொண்டிருக்கும் சிறு பிள்ளைகளுக்கான ஆடைகள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை.
அனுபவம் அவசியமில்லை.
வேலை நேரம்: காலை 11.00 இரவு 9.00 மணிவரை
cs 40946 (2.6)

021 221 3323, 076 264 8766

## UNOPS

**வெற்றிட அறிவித்தல்கள்**

பதவி வகை : சாரதி
ஒப்பந்த வகை : தனிநபர் ஒப்பந்தகாரர் ஒப்பந்தம் (ICA), உள்ளூர், (LICA 2)
கடமை இடம் : மட்டக்களப்பு / முல்லைத்தீவு, இலங்கை
இறுதி திகதி : 2021 நவம்பர் 15


மேலதிக தகவல்களுக்கும், எவ்வாறு விண்ணப்பிப்பது போன்ற விபரங்களுக்கும் UNOPS Jobs இற்கு பிரவேசியுங்கள் (https://jobs.unops.org/Pages/ViewVacancy/VADetails.aspx?id=22790&media=print)

மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் 0112665146/ prabuddhik@unops.org ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

**தகுதியான பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்**
**விண்ணப்பங்கள் UNOPS Jobs இணையத்தளத்தின் ஊடாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**
(CR 35830) 6

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 16 . 09 . 1937



ஆண்டவன் அடியில் 06 . 11 . 2021

## குருசுமுத்து அடைக்கலம்

யாழ்ப்பாணம் நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து அடைக்கலம் நேற்று (06.11.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் குருசுமுத்து அன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும், ஆரோக்கியத்தின் அன்புக் கணவரும், இருதயநாதன் (தவறாஸ் - London) அமிர்தநாதன் (அன்ரன் London), அமலநாயகி (அமலா), அருள்நாயகி (பெமிலா - Germany) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வவா (London), றோகினி (London), ஜேசிங்கா, அருள்தாஸ் (Germany) ஆகியோரின் அன்பு மாமனாரும், வெனோ, அமரர் நேசமணி,திரேசம்மா. நாதன் (London), அருட்சகோதரி றொசிற்றா (தி.கு), பவளம், ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரனும். மிரோன், மிரோனா, விரோனா, றொஷானி, றெனி, லின்டா, மேரிஅனோஜா, டினேஷினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர்) கிருசாளினி, நிசாந்தினி, சகாணு, சாள்ஸ் இவர்களின் அன்பு பேரனும், நோறா, ஜோடன், ஜடன், ஹெய்லி, டெரின் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி நாளை (08.11.2021) திங்கட் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நவாலி புனித பேதுரு பாவிலி ஆலயத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்பு : அன்ரன் - 076 881 2071
கிருசாளினி - 077 037 8966

தகவல் :
குடும்பத்தினர்

(CS 40972) 3/6)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ 19.09.1981

மனம் நெகிழ 30.10.2019

## அமரர் பிரதீப் தர்சினி

திதி: திருதியை - 07.11.2021

ஆண்டு இரண்டு ஆனதம்மா
மாநிலத்தில் எமை நீ பிரிந்து
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு
உறவுகளைத் தவிக்க விட்டு
ஊமையாய் இமைகளை மூடின தேனம்மா
காலமெல்லாம் எமை அழவிட்டு
இறைவனை நாடிவிட்டீர்
உன்னை எண்ணித் தினம் தினம்
மனம் வெதும்புகின்றோம்
பார்க்கும் இடமெல்லாம்
உன் உருவம் தெரியுதம்மா
நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லையம்மா
நினை விழந்து செயலிழந்து
நிற்கதியாய் நிற்கின்றோம் அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நாகநாதன் வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(cr 5836) (2.6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 25.07.1932

மறைவு 05.11.2021

## கந்தையா பராசக்தி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 171/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பராசக்தி அவர்கள் நேற்று முன் தினம் (05.11.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான பண்டாரி தெய்வானைப்பிள்ளையின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை பொன்னம்மையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் நகுலாம்பிகை, சாந்தகுமாரி (சாந்தா), சிவபாக்கியம், கருணாமூர்த்தி, (கண்ணன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, இராதா கிருஷ்ணன் மற்றும் செபஸ்ரியான் குரூஸ் (தவம்), தயாவதி (ராணி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராஜா (அப்பையா), கனகசபை மற்றும் கனகாம்பிகை (செல்லக்கண்டு), வடிவழகி, புவனேஸ்வரி (புனிதம்), தர்மரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மைதிலி - ஜீவகன் (கனடா), ரஞ்சினி - கோபால், ராகினி - பிரகலாதன், மாலினி - சுபேஸ் (பிரான்ஸ்), செந்தில்நாதன் (செந்தா) - சுமதி (ஜேர்மனி), செந்தூரன் - ஆரணி (பிரான்ஸ்), சிந்துஜா, தேனுஜா, ஸ்ரீஅஜந்தன் - சர்மிலா, சோபனா - நவகீதன் (கனடா), தாருஷன் - கிரிஷா, டினோஷன், லின்ஷிகா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், சங்கரன், கௌதமி, கௌசல்யா, நதீசனா - திவாகரன், லிசாந், கிசோக், றொஷாந், கம்ஷனா, நிஷங்கன், அபிநயன், சந்தோஸ், சுருதி, மாதேஷ், மதுஷா, மாறன், நிதேஷ், அக்ஷரா, இனியா, அகரன், ஆத்மிகா ஆகியோரின் செல்லப்பூட்டியும் மானஷாவின் கொள்ளுப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே.இல: 076 321 5376
077 444 3250,
077 030 3780

தகவல்
குடும்பத்தினர்

(CS 40969) (3/6)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 . 08 . 1957 | 01 . 11 . 2021 |



## கார்த்திகேசு மனோகரன் (சுட்டி)

(அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் ஊழியர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மனோகரன் (சுட்டி) அவர்கள் கடந்த (01.11.2021) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் கார்த்திகேசு சரஸலட்சுமி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சின்னையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நேசராணி (பபா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிறேமசுதன் (பிறேமன் இலங்கை), சுசி (கனடா), சிறிகாந்தன் (சிறி - கனடா), ஆகியோரின் சகோதரரும், கௌரி (இலங்கை), குமார் (கனடா), மதினா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், யதுசன், றாதை, மேனகா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், கௌசல்யா, பிரசன்னா ஆகியோரின் மாமனாரும், பேரப்பிள்ளைகளின் பேரனும், ஜெபராணி, ஜெகநாதன் (இலங்கை), ஜெபநேசன், இந்திராணி (கனடா), செல்வராணி (நோர்வே), சாந் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை ரேமன் மலர்ச்சாலையில் கடந்த (03.11.2021) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று இலங்கை பெந்தகோஸ்தே சபை கெரவலப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நேசராணி (பபா) - மனைவி**
**077 025 9895**

(CS 17957) (3/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## பேரம்பலம் மகேஸ்வரி

நாரந்தனை வடக்கைச் சேர்ந்த பேரம்பலம் மகேஸ்வரி நேற்று (06.11.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் கண்மணிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா இராசேந்திரம் திலகவதியம்மா கந்தசாமிப்பிள்ளை அச்சுவினி ஏகாம்பரம் மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை இராசம்மா உலகநாதபிள்ளை சரஸ்வதியம்மா திலகவதியம்மா விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் புவனேஸ்வரி (சுவிற்சர்லாந்து- முன்னாள் ஆசிரியர், தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை) பரமேஸ்வரி (லண்டன்) காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் தாயாரும், யோகேஸ்வரியின் சிறிய தாயாரும், சிவானந்தகுமார் (சுவிற்சர்லாந்து) நிரஞ்சன் (லண்டன்), காலஞ்சென்ற கோபால கிருஸ்ணன் ஆகியோரின் மாமியாரும், நிலக்சன், பிரியன் (சுவிற்சர்லாந்து), நிருசா நிதுசன் ராகவன் (லண்டன்), காலஞ்சென்ற சிவனேஸ்வரன் மற்றும் சிவகாந்தன், சிவகணேசன், சிவானந்தன், சிவகாந்திமதி ஆகியோரின் பேர்த்தியும், கதிரவன் வருணிகா கவிராஜ் எழில்கண்ணன், பாரிநிலா, அபிசா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு நாரந்தனை வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**சிவகாந்தன் (கோயில் காந்தன்)**
**077 11 30553**

**நாரந்தனை வடக்கு,**
**ஊர்காவற்துறை.**

(CS 17967) 1-6

## தேவை

பில்கிளாக், பொதியிடல், உதவியாளர், மில் வேலையில் அனுபவம் உள்ளவர் என்பவற்றிற்கு பெண் ஊழியர் தேவை. **Tel:077 174 6101**

(CS 17964) (1/6)

## விற்பனைக்கு

பாவனையில் உள்ள தேங்காய் எண்ணெய் இயந்திரம் (மோட்டருடன் 20HP) விற்பனைக்கு உண்டு.

**T.P : 077 074 0351** யாழ்ப்பாணம்

(CS 17956) (3.6)

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் சகல வசதிகளையும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:

**0777 111 716, 076 451 1436**

(CS 17968) (1/6)

## வேலையாட்கள் தேவை

Designers (பகுதிநேரம், முழு நேரம்), Typist, Office Boy (வாகன ஓட்டுனர் உரிமம் அவசியம்), Receptionist போன்றவற்றிற்கு வேலையாட்கள் தேவை.

வேலைத்தளம் இணுவில். தொடர்பு: **070 640 5164**

(CS 17899) 1/6

## வாடகைக்கு விடப்படும்

இல 86, பலாலி வீதி திருநெல்வேலி வடக்கு திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் உள்ள சகல வசதிகளும் உள்ளடங்கிய வீட்டின் இரு அறைகள் மருத்துவ பீட மாணவர்களுக்கு வழங்கப்படும். (CS 17955)(3.6)

**தொடர்பு: 021 2228 281**

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## திரு. பிலேந்திரன் ஜேம்ஸ்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.08.1936 | 07.11.2005 |



அன்பான அப்பா
நீங்கள் காட்டிய பாதையில்
பயணிப்போம் எம் உயிருள்ள
வரை உங்களை மறவோம்.

**ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்**

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CS 17960 (1.6))

# PROJECT MANAGER BUILDING CONSTRUCTION

Civil Engineer having more than 3 years' experience in Building Construction required at a capacity of a Project Manager to take forward an ongoing project on contractual basis for 6 months.

Project site is at Iyakkachchi.

Accommodation, if required could be provided.

Ideal Candidate could be offered an attractive package.

Please forward your CV to : md@isfindustries.com

HERITAGE
Heritage Agri

**Heritage Agri Private Limited**
**3/4, Rockwood Place,**
**Colombo 07.**
**0772078455**

(CR 35834) 1-6

# வேலை வாய்ப்பு

## AIR TICKETING EXECUTIVE

- குறைந்த 3 வருட அனுபவம் தேவை
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சரளமாக பேசக்கூடிய ஆற்றல் தேவை.

## CASHIER

- குறைந்த 3 வருட அனுபவம் தேவை
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சரளமாக பேசக்கூடிய ஆற்றல் தேவை.

மேலும் எமது ஸ்தாபனத்தில் **AIR TICKETING** வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சிக்காலம் : 2 மாதம்
கட்டணம் : 30,000/-

(CS 40936) (2.6)

மேலதிக விபரங்களுக்கு: 0777881656 | sharmilatravels90@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பிவைக்கவும்

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**076 702 3565** (CS 40962) 1-6

## வேலைவாய்ப்பு

தொழில்நுட்ப அலுவலர் HND,NCT (Civil or QS) with 2 Years of Building Experience

தொடர்புகளுக்கு: (CS 17965) 1-6

**E-mail:vacancynsc@gmail.com**

## காணி விற்பனைக்கு

வேலணை கிழக்கு புளியங்கூடல் சந்தியின் அருகாமையில் (ஊர்காவற்றுறை வீதி) 6 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- தரகர் தேவையில்லை
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

(CR 5850) 1-6

**0769005038 0777222524**

## தேவை

யாழ் நகரில் இயங்கும்

**ROYAL GRAINTE CORNER**

நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களிற்கு ஆட்கள் தேவை.

**1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்** (Technical Officers)

**2. வேலைத்தள வேலையாட்கள்** (Workshop Workers)

(அலுமினியம் வேலைகள் / தச்சு வேலையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அனுபவம் அற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்).

வயது : 21-28 வயதிற்கு உட்பட்டவர்கள்

சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் (மோட்டார் சைக்கிள்)

யாழ் நகரை அண்மித்த பிரதேசத்தில் வசிப்பவர்கள்

**077 358 0547** (CS 17959) 1-6

## VACANCIES

பிரபல கல்லூரியின் புதிதாக திறக்கப்படவுள்ள நெல்லியடி கிளைக்கு

1. English Teacher
2. English Teacher for IELTS
3. Course Coordinator
4. Receptionist

Sent Cv's within one week


BRITISH COLLEGE

More Details. 0777-695605

email.- britishcollegekandy@gmail

Colombo - Kandy - Jaffna - Vavuniya 1, Vavuniya 2 - Kilinochchi


## மரண அறிவித்தல்



### பாலசிங்கம் விஜயகுமார்

மல்லாகம் சோடாக்கம்பனி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் விஜயகுமார் நேற்று (06.11.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் (அமரர்) இராசமணி ஆகியோரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற சந்திரகுமாரியின் பாசமிகு கணவரும், கவிதா, கஜன் (கனடா) சுமன் (கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் தந்தையும், தயானந்தன் (யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி), தர்மிகா (கனடா), சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராசா (திருச்செல்வம் மாஸ்டர்), மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மருமகனும், யோகராஜா (இளைப்பாறிய மருந்தாளர்), காலஞ்சென்ற சந்திரகாந்தி மற்றும் சிறிபாலன் (கனடா), சந்திரவதனா, மதிவதனா (இலண்டன்) ஆகியோரின் மைத்துனரும், அபிநயன், அபிசாலினி, மதுரா, பிரவீன், லோஜன் லக்ஷகி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சோடாக்கம்பனி ஒழுங்கை, மல்லாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 17971) 1-6

# 25 வயது யானை சுட்டுக்கொலை!



புத்தளம், கருவலகஸ்வெவ, கல்வில பூங்காவில் காயங்களுடன் மீட்கப்பட்ட காட்டு யானை ஒன்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது என்று கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதி காரிகள் தெரிவித்தனர்.

காட்டு யானையின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூன்று நாள்களுக்கு முன் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யானை காயங்களுடன் மீட்கப்பட்டது. 3 நாள்களாக யானைக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி யானை உயிரிழந்துள்ளது. உயிரிழந்த காட்டு யானை 25 வயதுடையது என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-இ)

## விபத்துக்களில் நால்வர் சாவு!

நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் சிக்கி நால்வர் உயிரிழந்துள்ளனர். திருகோணமலை, மொனராகலை, பண்டாரகம மற்றும் பொல்பித்திகம ஆகிய பிரதேசங்களில் இந்த விபத்துகள் நடந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை - முருகாபுரி பிரதேசத்தில் முச்சக்கரவண்டி மோதிய விபத்தில் 53 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மொனராகலை - வெல்லவாய வீதியின் கச்சேரி சந்தியில் பஸ் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். பண்டாரகம பகுதியில் முச்சக்கரவண்டி மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பொல்பித்திகம - கலுகல்ல பாலத்தின் அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் 34 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். (எ-இ)


## மணமகன் தேவை

யாழ் நகரில் நிரந்தரமாக வசிக்கும் 26 வயதும் 5 அடி உயரமான உயர் கௌரவ குடும்ப கிறிஸ்தவ சபையை சேர்ந்த நிரந்தர அரசாங்க தொழில் புரியும் மணமகளுக்கு பெற்றோர் அரசாங்க அல்லது வங்கியில்தொழில் புரியும் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த மணமகனை தேடுகின்றனர். (CS 17945)(3.6)

தொடர்பு: **077 005 5044 / 071 108 3497**

## தேவை

கொடிகாமம் மிருசுவிலில் இயங்கும் தளபாட விற்பனை நிலையத்திற்கு விற்பனை உத்தியோகத்தர்கள் / அறவீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் மாத வாடகை அடிப்படையில் பட்டா ரக வாகனங்களும் இணைத்துக்கொள்ளப்படு கின்றது.

ஆர்வமுள்ளோர் தொடர்புகொள்ளவும்.

**076 696 9938**
**077 170 1669**

விஜய என்டர்பிறைசஸ்
கண்டி வீதி, உசன், மிருசுவில். (CHA .679) (2.6)

## காணி விற்பனைக்கு உண்டு


மீசாலை டச்சு றோட் கேணியடி வீதி, கரும்பி மாவடி கந்தசாமி கோயில் அருகே 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (கிணறு, மின்சார வசதி உண்டு). தொடர்பு:

**077 198 5872**
**076 8514 280**
**Viber/Whatsapp:00447789174622**

(CS 17972) 1-6


## ஒன்பதாம் ஆண்டு கண்ணீர் காணிக்கை

பிறப்பு 19 . 01 . 1950



இறப்பு 07 . 11 . 2012

### சவரிமுத்து தோமஸ்

ஒவ்வொரு நொடியையும்
எமக்காகவே சிந்தித்த
எம் அன்பு அப்பாவே
எம் வாழ்வை சீராக்க - நீங்கள்
சிந்திய வியர்வை இன்றும்
எம் கண்களில் கண்ணீராய் வழிகின்றதே
எம் கடனை எப்படித் தீர்ப்போம் நாம்
உங்கள் கனவுகள் எல்லாம்
நனவாகி விட்டதப்பா
ஆண்டவன் அடியில் அமைதியாய்
(ஆனந்தமாய்) இளைப்பாறுங்கள்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன்மார்,**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 17963) 1-6


## வெல்டர் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழில் சாலை ஒன்றுக்கு வெல்டர் தேவை.
(வயது : 25-45)

தொடர்பு: **077 1300 190** (CS 17973) 1/6

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: **077 116 5752** (CR 5851) 1/6


## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)

### விலைக் கேள்விக்கான கோரல் செல்லையா கட்டிட புனரமைப்பு

1. கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க (தாய்ச்சங்க) பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடைகோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்வியினைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்வியாளர்கள், **பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்), யா/கொக்குவில் இந்துக் கல்லூரி** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து மேலதிக விபரங்களையும், கேள்வி பத்திரங்களையும் **10.11.2021 முதல் 24.11.2021** வரையான அலுவலக நாட்களில் **மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.1.00 மணி** வரையான காலப்பகுதியில் ரூபா.**1,000.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடிய உறையிடப்பட்ட விலைக்கேள்விப் பத்திரங்கள் **25.11.2021**ம் திகதியன்று **மு.ப.11.00** மணிக்கு முன்பதாக **தலைவர், பழைய மாணவர் தாய்ச்சங்க பெறுகைக்குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி. கொக்குவில்** எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விலைக்கேள்விகள், அவைகள் மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

| கேள்வி அடையாள இல. | வேலை விபரம் | தேவையான தரம் | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| KHC/OSA/CHELLIYA/ 01/2021 | செல்லையா கட்டிடம் புனரமைத்தல் | C8/C7 | 60 நாட்கள் | ரூபா. 40,000.00 | 22.02.2022 வரை |

**தலைவர்,**
பழைய மாணவர் தாய்ச்சங்க பெறுகைக்குழு,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.
077 - 6080926

(CR 5848) 1-6

### ஓய்வூதியர்களின்...

நெதிகம்வில ரஜமஹா விகாரையில் நேற்று வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ராஜபக்ச அரசு ஆட்சிக்கு வந்தவுடனே பணக்காரர்களுக்கு கோடிக்கணக்கான ரூபா வரிச்சலுகையை வழங்கி அரச வருவாயை முற்றிலுமாக இழந்தது. நாட்டுக்காக தங்கள் கடின உழைப்பையும் அறிவையும் அர்ப்பணித்து பல ஆண்டுகளாக சேவையாற்றி ஓய்வு பெற்ற மூத்த பிரஜைகளிடமிருந்து இந்த இழப்பை ஈடுகட்ட அரசு முயல்கின்றது. இந்த நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கின்றோம்.

அக்ரஹார காப்பீட்டை வலுப்படுத்துவது என்ற போர்வையின் பெயரில் சூசகமாக இலட்சக்கணக்கான ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தைக் குறைக்க வெட்கமற்று வஞ்சகமாக அரசு சூழ்ச்சி செய்கின்றது.

2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற 70 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து 600 ரூபா அறவிடுவதற்கும், 70 வயதுக்கு உட்பட்டவர்களிடமிருந்து 400 ரூபா அறவிடுவதற்கும் அரசு அண்மையில் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர் இரண்டு வாரங்களுக்குள் பணத்தைப் பெறுவதற்கு எதிர்ப்பு இருந்தால் அதனைத் தெரிவிக்க வேண்டும் என சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், நாட்டில் உள்ள எத்தனை ஓய்வு பெற்றவர்கள் இந்த சுற்றறிக்கையை படித்திருப்பார்கள்?

இது அரசு நடத்தும் வெட்கமற்ற கூட்டுக்கொள்ளை. முதுமையை கடந்து செல்லும் ஓய்வு பெற்றவர்களை பழிவாங்கும் அளவுக்கு அரசு வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

ஏழு மூளைகளைக் கொண்ட நிதியமைச்சர் நியமிக்கப்பட்டது நாட்டின் அப்பாவி மக்களின் பணத்தை இவ்வாறு கொள்ளையடிக்கவா?

ஓய்வுபெற்றவர்கள் இந்தக் குறைப்பு நடவடிக்கைக்கு எதிராக சம்பந்தப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் எதிர்ப்பை வெளிக்காட்ட முடியாவிட்டால் பணத்தை திரும்பப் பெறமுடியாத வகையில் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக நீதிமன்றை நாடவும் தயாராக இருக்கின்றோம்- என்றார். (ஒ-5)

### வேகமெடுக்கும்...

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தில் மணியம் தோட்ட வீதிக்கு அண்மையாகவும் கடற்படையினரின் தேவைக்காக காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

இந்தக் காணிகள் ஏற்கனவே சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கூட்டு எதிர்ப்பால் கைவிடப்பட்டது. எனவே மீளவும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க அணிதிரளுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதிக் கிளையின் செயலரும், வேலணைப் பிரதேசசபை உறுப்பினருமான க.நாவலன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-5)

### நீரில் மூழ்கி...

மூழ்கியுள்ளார். நண்பர்கள் மற்றும் அந்தப் பகுதி மக்களால் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

மூளாயைச் சேர்ந்த பிரபாகரன் ரஜீவன் (வயது - 18) என்ற மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் திக்கரைப் பகுதியிலுள்ள கிணற்றிலேயே நண்பர்களுடன் இணைந்து மேற்படி மாணவன் நேற்று பி.ப. 3 மணியளவில் நீந்தியுள்ளார். திடீரென அவர் மூழ்கத் தொடங்கியதும், நண்பர்கள் அயலில் உள்ளவர்களை அழைத்துள்ளனர். அவர்கள் மாணவனை மீட்டு மூளாய் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். (ஒ-27,50,125)

### விபத்தில்...

க.லோகநாதன் (வயது - 65) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள வீதியில், வர்த்தக நிலையத்துக்குச் சென்றுவிட்டு வீதியைக் கடக்க முற்பட்டபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் முதியவரை மோதியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த முதியவர் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதியான இளைஞன் இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட முதியவர் அங்கு உயிரிழந்துள்ளார். (ஒ-9,159)

### இளம் பெண்...

சந்தர்ப்பத்தில் சகோதரன் மீது தாக்குதல் நடத்திவிட்டு இளம்பெண்ணை கடத்திச் சென்றதாக முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10)

### ஒரே நாடு...

பதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'ஒரே நாடு, ஒரே சட்டம் எனும் வேலைத்திட்டம் பற்றி ஞானசார தேரர்தான் கடந்த ஐந்தாண்டுகளாக கதைத்துவந்தார். இது தொடர்பில் அவருடன் கலந்துரையாடினேன், ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பில் ஐந்தாண்டுகள் கதைக்கின்றீர்கள். அதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்கித் தருமாறு கோரினேன். அவ்வாறு வழங்கப்படும் திட்டம் நீதி அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும். குறைகள் இருந்தால் நிவர்த்தி செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். எனினும், இந்த நியமனத்தையும் சிலர் விமர்சிக்கின்றனர்' என்று கோத்தாபய மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-44)

### சிமெந்து...

ளது. அண்மையில் 50 கிலோ பைக்கெற்றின் விலை 98 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னரும் நாட்டில் தட்டுப்பாடு நிலவியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

### மாரடைப்பால்...

உயிரிழந்துள்ளார். மாரடைப்பு ஏற்பட்டதும் வாகனத்தை வீதியில் நிறுத்தியதால் பயணிகள் பாதிப்பின்றித் தப்பித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அண்மையாக கேரதீவுப் பகுதியில் இடம்பெற்றது. வவுனியா வீரபுரத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அன்ரன் ஜெயராஜ் (வயது - 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ஒ-9,159)

### நீதி அமைச்சர்...

என்று கூறப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சுப் பதவிகளிலிருந்தே விலகுவதாக அலி சப்ரி கடிதங்களை கையளித்திருந்தார். (ஒ-இ)

### பட்டதாரிகள்...

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

சம்பள முரண்பாடுகளை நீக்குதல், பொருத்தமான பதவியுயர்வு நடைமுறைகளை வழங்குதல், திறமை மற்றும் தராதரத்துக்கு ஏற்றவாறு கடமைகளை வழங்குதல், அனைத்து பட்டதாரி பயிலுநர் அலுவலர்களுக்கும் உடனடி நிரந்தர நியமனம் வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கம் மற்றும் பணிக்கு அமர்த்தப்பட்ட பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றால் நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கப்படும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு நாமும் ஆதரவு வழங்குகின்றோம். வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாளை திங்கட்கிழமை ஒன்றுபட்டு சுகவீன விடுப்புடன் கூடிய ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு பேராதரவை வழங்குமாறு அந்தச் சங்கத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-5)

## சப்புகஸ்கந்தவில் மீட்கப்பட்ட சடலம்
# நகைகளுக்காகக் கொலை? கூடச்சென்ற பெண் மாயம்

கொழும்பு, நவ.7

சப்புகஸ்கந்த, மாபியா வீதியில் பயணப் பொதியில் சடலமாக மீட்கப்பட்ட பெண் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை, தொடர்மாடிக் குடியிருப்பில் வசிக்கும் பாத்திமா மும்தாஸ் (வயது-42) என்ற இரு பிள்ளைகளின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது உடலை கணவரும், பிள்ளைகளும் அடையாளம் காட்டியுள்ளனர். இந்தப் பெண் கடந்த மாதம் காணாமற்போயிருந்தார் என்று குடும்பத்தினர் கூறுகின்றனர்.

அது தொடர்பில் பெண்ணின் கண வர், கடந்த மாதம் 28ஆம் திகதி ப்ளூமெண்டல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சப்புகஸ்கந்த, மாபியா வீதியில் உள்ள குப்பைமேட்டில் இருந்து நேற்றுமுன்தினம் துர்நாற்றம் வீசியதை அடுத்து, பொலிஸார் விசாரணையை மேற்கொண்ட போது, பயணப் பொதியில் மறைக் கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

சடலம் ராகம மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பெண்ணின் கணவரும், பிள்ளைகளும் சடலத்தை அடையாளம் காட்டியிருந்தனர்.


இந்தப் பெண் அடகு வைத்த நகைகளை மீட்பதற்காகவே வீட்டில் இருந்து வெளியேறிச் சென்றிந்தார் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர். முச்சக்கரவண்டி ஒன்றில் மற்றொரு பெண்ணுடன் இவர் சென்றிருந்தார் என்றும், அதன்பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. முச்சக்கர வண்டிச் சாரதி யையும், கூடச் சென்ற பெண்ணை யும் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்த முயன்றபோது, மட்டக்குளி, சுமித்புரவைச் சேர்ந்த அந்தப் பெண் வீட்டில் இருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெண் எவ்வாறு கொல்லப்பட்டார்?, கொலை எங்கு நடந்தது என்பது தொடர்பான விவரங்கள் இன்னமும் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, கொலை செய்யப்பட்ட பெண் வட்டிக்குப் பணம் கொடுப்பவர் என்று சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேநேரம், அவர் வீட்டில் இருந்து வெளியேறியபோது அணிந்திருந்த நகைகள் சடலத்தில் காணப்படவில்லை என்றும், அவற்றின் பெறுமதி சுமார் 8 லட்சம் ரூபா என்றும் கூறப்படு கின்றது. அதேவேளை, பெண்ணின் சடலம் மீட்கப்பட்டதும், சடலத்தை அடையாளம் காண்பதற்காக அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களின் உதவியை சப்புகஸ்கந்த பொலிஸார் கோரியிருந்தனர்.

அதையடுத்து காணாமற் போன பெண்களைத் தேடி சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையத்துக்கு மூன்று தரப்பினர் வந்துள்ளனர் என்றும், காணாமற் போயுள்ள அந்தப் பெண்கள் ஆடைத் தொழிற் சாலைகளில் பணியாற்றுபவர்கள் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## அரசுக்கெதிராக மீண்டும் நீதிமன்றை நாடினார் பேராயர் மல்கம்



கொழும்பு, நவ. 7

முத்துராஜவெல ஈர வலயத்திலுள்ள காணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டுவந்து ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை வலுவிழக்கச் செய்து எழுத்தாணை பிறப்பிக்குமாறு கோரி, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உயர் நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுத் தாக்கல் செய்துள்ளார். அமெரிக்காவுக்கு மின்நிலையப் பங்குகள் வழங்கல் தொடர்பிலும் பேராயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## நியூஸிலாந்து அணி அறிவிப்பு!

வெலிங்டன், நவ. 7
இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான நியூஸிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் இரு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான நியூஸிலாந்து அணியே நேற்று அறிவிக்கப்பட்டது.

நியூஸிலாந்து அணி விவரம்: வில்லியம்சன் (தலைவர்), ஹென்றி நிக்கொல்ஸ், ரோஸ்ரெய்லர், ப்ளன்டெல், டெவோன் கன்வே, ஜேமிசன், அஜஸ் பட்டேல், கிளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா, மிச்செல் சான்நெர், வில் சோமர் வில்லே, சவுத்தி, வில்யங், நீல் வாக்னர், லாதம். (ம)

**நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing**

உங்கள் இல்லங்கள், நிறுவனங்கள் சீமேந்திலான கட்டடங்கள், நீர்த்தாங்கிகள் மற்றும் குளியல் அறைகள்; கோவில் வில்லுமண்டபங்கள், பல்கனி மொட்டைமாடிகள், வெளிச்சுவர்கள், கோவில் கோபுர இணைப்புக்கள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவுகளை **10 வருட உத்திரவாதத்துடன்** நிறுத்தித்தருகிறோம்.

காரியாலய விலாசம் இல்லாத போலி விளம்பரங்களை கண்டு ஏமாறாதீர்

Finex : இன் ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம்

கூடிய விலைக் கழிவுடன் இரசாயனங்களை பெற்றுக்கொள்ளலாம். ஒரு சதுர அடிக்காக எம்மால் 130/- ரூபா அறவிடப்படுகிறது.

North and East Engineering
55, Stanly Road, Jaffna.
077 5244 177, 077 232 3000, 021 222 2363 (CS 40967) (3/6)

**பணிநிலை வேண்டுகை**

1. **கணினி தட்டெழுத்தாளர்** (Computer Typist)
2. **கணினி வடிவமைப்பாளர்** (Computer Designer)
3. **நேரச்சு இயந்திர இயக்குனர்** (Offset Machine Minder)
4. **நேரச்சு இயந்திர உதவியாளர்** (Offset Machine Helper)

**நேர்முகத் தேர்வு:**
08-12 11.2021 முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை நடைபெறும். சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

**கரிகணன்**
672 B, K.K.S Road, Jaffna.
021 222 2717
CR 5849) 1-6

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 480 4239 (cs 40943) 2 x6)

**வீடு வாடகைக்கு**

நல்லூர் பின் வீதியில் கோயிலுக்கு அருகாமையில் தனிவாசல் தனிக்குளியலறையுடன் கூடிய ஒருவர் அல்லது இருவர் தங்கக் கூடிய சிறிய அறைவாடகைக்கு உண்டு.
தொடர்பு: 070 336 0525 (CS 40938)(3.6)

**வேலையாள் தேவை**

தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் தேவை.
(cs.40971)(2.6) 077 400 5023

**காணி விற்க வாங்க**

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, கோண்டாவில், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் காணி விற்க இருந்தால் தொடர்பு கொள்ளவும்.
தரகுக்கட்டணமாக 2% வீதமே அறவிடப்படும்.
077 912 2789, 077 018 6171 (cs.40964f) (2.6)

**வேலை வாய்ப்பு**

தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை. தகைமை O/L, A/L
0775729724, 0755729715 (CS 40968) 1-6

**சிறுநீரகம் தேவை**

48 வயதுடைய $O^+$ குருதி வகையைச் சேர்ந்த பெண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு $O^+$ Group வகையை உடைய சிறுநீரகத்தை தானமாக வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
நிருசன்: 076 523 2502 (CR 35836) (3/6)

**தேவை**

A/L படித்த அலுவலக பெண் உதவியாளர் தேவை. கோண்டாவில் அண்டிய பகுதிகளில் வசிப்பவர் விரும்பத்தக்து.
077 480 4239 (cs 40943) (2 x6)

**IELTS New Batch**
Life Skill - A1
By.B.MURALI, BA (Eng), MEd,MSc (UK)
Fee: மாணவர்களுக்கான விசேட சலுகை
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd. 077 798 9830 (CS 40913) (1-6)

**Personal English Classes**

தனி வகுப்புக்கள் யாழ் நகரில்
Grade 7 - O/L, A/L, Graduates,
தொழில் புரிவோர்களுக்கான Grammar and Spoken English வகுப்புக்கள்
K.Ganesh (BA) 077 766 8725 (CS 35833)(3.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் அரியாலை பொன்னம்பலம் வீதிக்கு எதிராக. கண்டி வீதியிலிருந்து மூன்றாவதாக இருக்கும் சுற்றுமதில் கட்டிய. கிணற்றுடனும் சிறிய ஓர் அறை வீட்டுடனும் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 293 5509 (CS 40939)(3.6)

**வேலையாள் தேவை**

Flower Shop ஒன்றில் வேலைசெய்ய பெண் வேலையாள்கள் தேவை.
(cs.40970)(2.6) 077 400 5023

**பெண் வேலையாள்கள் தேவை**

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதிசெய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.
வயது எல்லை: 18 தொடக்கம் 30 வரை வேலை நேரம்: காலை 7.30 தொடக்கம்மாலை 5.30 வரை மாத வேதனமாக 17000/= தொடக்கம்25000/= வரை வழங்கப்படும்.
(cs.17943) (2.6) 074 049 0003

**கணக்காளர் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் தேவை.
யாழ் மாநகர எல்லைக்குள் உள்ள பெண்கள் விரும்பத்தக்கது. (CS 17953)(3.6)
தொடர்பு: 070 304 3633

# மரண அறிவித்தல்

## இந்திராணி தேவகிருஷ்ணா

**(இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, பம்பலபிட்டி இந்துக்கல்லூரி - கொழும்பு)**



தோற்றம் 04.02.1947 மறைவு 05.11.2021

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் 557, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி தேவகிருஷ்ணா அவர்கள் நேற்றுமுன்தினம் (05.11.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கம் - தங்கராஜம் தம்பதியினரின் அன்பு மகளும், இலகுப்பிள்ளை தேவகிருஷ்ணா (முன்னாள் மருந்தாளர் கன்னாதிட்டி கார்கில்ஸ் பூட்சிட்டி) அவர்களின் அன்பு மனைவியும், கிருஷ்ணப்பிரியா (முன்னாள் இந்தியன் வங்கி ஊழியர்) அவர்களின் அன்புத் தாயாரும், சுரேஷ் (சிரேஷ்ட மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு திணைக்களம் - வவுனியா) அவர்களின் மாமியும், காலஞ்சென்ற இரட்ணசிங்கம், தவமணி, இராஜசிங்கம் மற்றும் செல்வராணி (இளைப்பாறிய முகாமையாளர் - இலங்கை வங்கி), பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், பிரனீத், விஷ்வா (எவர்ஷைன் பாலர் பாடசாலை), அகன்யா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**021 222 1679**

(cs 17947) (2.6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 16


நல்லூர் மணி துருப்பிடித்துப்போக
நாகவிகாரை மணியசையும்.
ஒரு மெழுகுவர்த்திக்காக
புனித யாகப்பர் காத்துக்கிடக்க
ஆரியகுளத்தில் ஆயிரம் விளக்குகள் சுடரும்.
எம்மினத்தின் இளைய தலைமுறையே,
கண் திறக்காது கிடக்கின்றாய்.
பகைவன் உன் வேரையும் விழுதையும்
வெட்டி மொட்டை மரமாக்கி விட்டான்.

புதுவை இரத்தினதுரை

# சஞ்சீவி


மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 21 ஞாயிற்றுக்கிழமை (07.11.2021) சிகரம் : 72




நாம் ஏமாளிகளா?

06

எங்கே போனாள் உயிருள்ள பொம்மை?



08



# திண்ணைச் சந்திப்பு

நிலாந்தன்

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை உல்லாச விடுதியில் 7 கட்சிகள் கூடின.13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுப்பது அந்தச்சந்திப்பின் நோக்கமாக இருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதில் அழைக்கப்படவில்லை. தமிழரசுக் கட்சி அழைக்கப்பட்ட போதிலும் பங்குபற்றவில்லை. மனோ கணேசனும் ரவூப் ஹக்கீமும் சந்திப்புக்காக கொழும்பிலிருந்து வந்திருந்தார்கள்.

எனினும், எதிர்பார்த்தபடி ஒரு இறுதித்தீர்மானம் எடுக்கப்படவில்லை. தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு ஒரு தீர்மானத்தை எடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. இதுதொடர்பில் முடிவெடுப்பதற்கு தமிழரசுக்கட்சி கால அவகாசம் கேட்டபடியால் அந்தக்கட்சியையும் இணைத்துக் கொண்டு இறுதிமுடிவை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தியாவை நோக்கி எப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை முன்வைப்பது என்பது தொடர்பில் முடிவெடுப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதே சரி. இந்தச்சந்திப்பை ஒழுங்குபடுத்தியது ரெலோ இயக்கம். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவ்வியக்கத்துக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்தன. இதன் காரணமாக அந்த இயக்கத்தின் பேரம்பேசும் சக்தி அதிகரித்திருப்பதாகத் தோன்றுகிறது. அந்த இயக்கத்தின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தனது கட்சியின் உயர்ந்திருக்கும் பேரம்பேசும் சக்தியை சாத்தியமான வழிகளில் பிரயோகித்து தமிழ் அரசியலில் தமது கட்சியின் ஸ்தானத்தை மேலும் பலப்படுத்துவதற்காக உழைக்கும் ஒருவராகக் காணப்படுகிறார். ரெலோவின் முயற்சியால் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஐந்து கட்சிகள் ஏதோ ஒரு ஒருங்கிணைப்பின் கீழ் செயற்பட்டு வருகின்றன. ஜெனிவாக் கூட்டத்தொடரின்போது அவை ஒரு கூட்டுக் கடிதத்தையும் அனுப்பியிருந்தன. அதன் அடுத்தகட்டமாக இந்தியாவை நோக்கி இப்படி ஒரு கோரிக்கையை முன்வைப்பது என்று மேற்படி கட்சிகள் தீர்மானித்தன.

மேற்படி சந்திப்புக்கள் சிலவற்றில் மாவை சேனாதிராஜா பங்குபற்றியிருக்கிறார். அவர் பொதுவாக சந்திப்புகளுக்கு எதிரானவராகக் காணப்படவில்லை. ஆனால் முடிவெடுக்கும் தருணங்களில் அவர் சம்பந்தரையும் சுமந்திரனையும் மீறிச் சிந்திக்க முடியாதவராக காணப்படுகிறார். அதனால் கடந்த ஜெனிவாக் கூட்டத்தொடரின் போது கடிதம் அனுப்பும் விவகாரத்தில் தமிழரசுக்கட்சி கூட்டுக்குள் இருந்து பின்வாங்கியது. இப்போது கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கூட்டத்திலும் தமிழரசுக்கட்சி பங்குபற்றவில்லை. ஏனெனில் கூட்டமைப்புக்குள் உள்ள ஒப்பீட்டளவில் பெரிய கட்சி அது. மூத்த கட்சியும் அது. ஏனைய சிறிய கட்சிகளின் முயற்சிகளின் பின் செல்ல அது தயாரில்லை என்று தோன்றுகிறது. அதேசமயம் பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்புக்கு வெளியே இருக்கும் கட்சிகளோடு ஏன் ஒருவித ஒருங்கிணைப்பை நாடுகின்றன என்பது குறித்து தமிழரசுக் கட்சி தன்னை சுய விசாரணை செய்து கொள்வதாகவும் தெரியவில்லை.

கூட்டமைப்பு இப்பொழுது இதயத்தால் ஒன்றிணைந்த ஒரு கூட்டாக இல்லை. அது தேவை கருதிய ஒரு கூட்டாகத்தான் இருக்கிறது. அதன் தலைவரான சம்பந்தர் பௌதிக ரீதியாக நடமாட முடியாத ஒருவராக மாறிவிட்டார். நடைமுறையில் சுமந்திரன்தான் செயற்படும் தலைவராக இருக்கிறார். கூட்டமைப்பின் செயற்படு தலைவராக மட்டுமல்ல தமிழரசுக் கட்சியின் முடிவுகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒருவராகவும் சுமந்திரன் காணப்படுகிறார். எனவே மேற்படி கட்சிகள் ஒன்றுகூடி இந்தியாவுக்கு ஒரு கோரிக்கையை முன்வைப்பது என்ற விடயத்தில் சுமந்திரனைத் தவிர்த்தமை தந்திரோபாய ரீதியாகப் பொருத்தமானதா? சுமந்திரனை விலக்கிக்கொண்டு சம்பந்தரை அணுகியபொழுது சுமந்திரன் நிலைமைகளைக் குழப்பிவிட்டார் என்று மேற்படி கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன.

கடந்த சனிக்கிழமை சம்பந்தரை அவருடைய இல்லத்துக்குச் சென்று, கொழும்பில் இருக்கும் இந்தியத் தூதுவர் சந்தித்தார். தீபாவளிப் பண்டிகையை ஒட்டிய ஒரு சந்திப்பு என்று கூறப்பட்ட போதிலும்கூட மேற்படி ஐந்து கட்சிகளின் ஒருங்கிணைந்த முயற்சியை நோக்கி சம்பந்தரைத் தூண்டும் உள்நோக்கம் அந்தச் சந்திப்பில் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. எனினும் அதற்குப் பின்னரும் தமிழரசுக்கட்சி திண்ணையில் நடந்த சந்திப்பில் பங்குபற்றவில்லை. அந்தக்கட்சி தனக்கு கால அவகாசம் தேவை என்று கேட்டிருந்தது. அதன்படி அந்தக்கட்சியின் கருத்தையும் பெற்றுக்கொண்டு ஒன்றிணைந்த ஒரு கோரிக்கையை முன்வைக்கலாம் என்று கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதனிடையே, இந்தியத் தூதுவர் மறுபடியும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை வரும் செவ்வாய்க்கிழமை சந்திக்கிறார். மேலும், அமெரிக்காவின் அழைப்பை ஏற்று கூட்டமைப்பு அமெரிக்கா செல்லவிருப்பதாக ஒரு தகவல் உண்டு. மேற்படி சந்திப்புகளின் தொகுக்கப்பட்ட ஒரு சித்திரத்தை ஆராய்ந்தால் மிகத் தெளிவான சில விடைகள் கிடைக்கின்றன. முதலாவது, கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளை சம்பந்தப்பட்ட கட்சிகளே செய்யுமாக இருந்தால் அதற்கு ஒரு வரையறை உண்டு. தேர்தல் நோக்கங்களைக் கொண்ட கட்சிகள் தங்களுக்கிடையே ஒரு பலமான ஐக்கியத்தை ஏற்படுத்த முடியுமென்றால் அது எப்பொழுதோ ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான ஓர் ஐக்கியம் ஏற்படாத ஒரு பின்னணியில்தான் தமிழ்த்தேசியப் பரப்பில் மூன்று தரப்புகளைக் காண முடிகிறது. இந்நிலையில் கட்சிகளாக விரும்பி ஒரு



15




# வெள்ளம் வந்த பின் அணையா?

அ.நிக்ஸன்


## சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் தாயகம் கூறுபோடப்பட்ட பின் '13' அவசியமா?

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இலங்கை ஒற்றையாட்சி அரசினால் அபகரிக்கப்பட்ட காணிகள் பற்றிய விவரங்கள் உங்களிடம் இருக்கின்றதா? அவ்வப்போது நாடாளுமன்றத்திலும் மாகாணசபைகளிலும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் நிகழ்த்திய உரைகளிலும் மற்றும் சில பொது அமைப்புகளின் தகவல்களின் படியும் எத்தனை ஆயிரம் ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய முடியும். அத்துடன் எத்தனை புத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன? எத்தனை புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன ? என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் காணி அதிகாரங்கள் இருந்தாலும், வடமாகாணத்தில் செயற்பட்ட மாகாண சபை நிர்வாகத்தை மீறிக் காணிகள் அபகரிக்கப்பட்டதை இந்தக் கட்டுரையாளர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோது நிர்வாகம் செய்யத் தெரியாமல் பல விடயங்களை இழந்து விட்டதாகப் பல கதைகள் உலாவுகின்றன.

ஆனால் அந்தக் கதைகளைச் சொல்லிக் கொண்டு திரியும் பிரதிநிதிகள் யார்? இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பு 1948 இல் இருந்து எப்படிச் செயற்பட்டு வருகின்றது என்பதை அறியாதவர்கள் அல்லது தெரிந்தும் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பைப் புனிதப்படுத்தித் தமிழர்களுக்குக் கிடைத்த அதி



காரத்தையும் பயன்படுத்தத் தெரியாது என்று கூறி, 13 உங்களுக்குப் போதுமெனக் கூறுகின்ற புதுடில்லியைத் திருப்திப்படுத்தும் நபர்கள்தான் அந்தப் பிரதிநிதிகள்.

கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது ஆக 750 மலசல கூடங்களை மாத்திரமே தன்னால் கட்டிக் கொடுக்க முடிந்ததென சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அப்போது கூறியிருந்தார்.

உண்மையில் யேசுநாதர் மீண்டும் பிறந்து, வந்து வடக்கு அல்லது கிழக்கு மாகாண சபைகளில் முதலமைச்சராக இருந்தாலும், இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு தனது அதிகார மையத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணத்துக்கு ஆளுநராக இருப்பவர், யேசுநாதரையும் மிஞ்சிய சர்வ வல்லமை கொண்டவராகவே செயற்படுகிறார் என்பது தமிழ்த்தேசியக் கட்சிகளில் உள்ள சட்டமேதைகளுக்குத் தெரியாததல்ல. அதாவது ஜனாதிபதியால் நியமனம் பெறும் ஆளுநர் தமிழராக இருந்தாலும் அவர் ஜனாதிபதியால் இயக்கப்படும் கருவி மாத்திரமே.வடக்கு - கிழக்கில் உள்ள சிறிய ஒரு வீதியின் குழி ஒன்றைச் சீர்செய்யக் கல் ஒன்றைத் தூக்கிப் போட வேண்டுமானால் கூட, கொழும்பு கையசைக்க வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்தக் கட்டுரையாளருக்கு அப்போது வழங்கிய நேர் காணலில் கூறியிருந்தார். ஆகவே இதுதான் மாகாண சபை அதிகாரம் என்பது தேர்தல் அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் புரியும்.

எனவே தமிழரசுக் கட்சியோடு முரண்படாமல் விக்னேஸ்வரன் உரிய முறையில் செயற்பட்டிருந்தால், வடமாகாண சபையால் பல விடயங்களைச் சாதித்திருக்க முடியுமெனக் கூறுவோர் இந்திய- இலங்கை அரசுகளைப் பாதுகாக்கின்றனர் என்ற முடிவுக்கு வரலாம். விக்னேஸ்வரனின் அரசியல் கருத்துக்களில் குழப்பங்கள் இருப்பது வேறு.ஆனால் அவர் முதலமைச்சராகப் பதவி வகித்தபோது ஏதாவது இலாபத்தை எதிர்பார்த்து அது கிடைக்காத பலரும் தமது சுயநலத்துக்காக 'விக்னேஸ்வரன் நல்ல சந்தர்ப்பத்தைத் தவறிவிட்டுள்ளாரெனக்' கதை கட்டுவதன் ஊடே, இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு சுத்தம் செய்யப்படுகின்றது என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர்.

சிங்களக் குடியேற்றங்கள் பற்றியோ புத்த விகாரைகளை அமைத்து, தமிழர் மரபுரிமைகள் அழிக்கப்படுவது குறித்து ஜெனிவா மனித உரிமைச் சபை உள்ளிட்ட சர்வதேச அறிக்கைகள் எதிலும் இதுவரை சிறிய குறிப்புக்கூட இல்லை. ஏனெனில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு, தமிழ்த்தேசிய நிலப்பரப்பு துண்டாடப்பட்ட பின்னரே குறைந்தபட்ச 13 ஐக் கூடத் தீர்வாக வழங்க முடியும் என்ற இலங்கையின் நிலைப்பாடு அமெரிக்க , இந்திய அரசுகளுக்குத் தெரியாததல்ல.

வடமாகாண சபையோடு எந்தவொரு கலந்துரையாடலிலும் ஈடுபடாமல், முல்லைத்தீவில் படையினரின் ஒத்துழைப்புடன், அரச திணைக்களங்களினால் 80 ஆயிரத்துக்கும் அதிகமான ஹெக்ரேயர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் 2018 ஆம் ஆண்டு மே மாதம் கூறியிருந்தார். வடமாகாண சபையினால் அதிகாரபூர்வமாக நில அளவீடுகளைச் செய்யமுடியவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேராவினால், இலங்கை வர்த்தமானி அறிவித்தல் மூலம் 80 ஆயிரத்துக்கும் அதிகமான ஹெக்ரேயர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் ரவிகரன் அப்போது கூறியிருந்தார்.

இறுதிப் போர் நடந்த நந்திக்கடல் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் சேர்த்து 4141.67 ஹெக்ரேயர் காணிகள் மற்றும் நீர்ப்பரப்புக்களையும், நாயாறு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலுமாக 4464.35 ஹெக்ரேயர் காணிகள் மற்றும் நீர்ப்பரப்புக்களையும் , தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ், இலங்கை அரச வர்த்தமானி மூலம் நந்திக்கடல், நாயாறு ஆகிய பிரதேசங்கள் இயற்கை ஒதுக்கிடம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி மொத்தம் 8606.02 ஹெக்ரேயர்கள் இதற்குள் அடங்குவதாக ரவிகரன் குறிப்பிட்டிருந்தார்.

மணலாறு குடியேற்றம், மகாவலி 'எல்' வலயம் என்ற போர்வையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், இலங்கை இராணுவ முகாம் விஸ்தரிப்புகள், பௌத்த பிக்குகளின் மதத் திணிப்புக்கள், இலங்கைத் தொல்பொருள் திணைக்களம், இலங்கை வன வளத் துறை மற்றும் இலங்கை வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக 80ஆயிரம் ஹெக்ரேயர்களுக்கு மேல் காணிகள், நீர்நிலைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை வவுனியாவில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான காலம் முதல் இன்றுவரை ஆயிரத்து 775.93 ஏக்கர் காணிகள் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக வவுனியா மாவட்டச் செயலகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆனாலும் வவுனியா உள்ளிட்ட வன்னி பெருநிலப்பரப்பில் இலங்கைப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் பற்றிய சரியான புள்ளிவிவரங்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கூறியிருக்கிறார்.

பொதுக் காணிகளை இலங்கை அரச காணி என்று சொல்கின்றார்கள், மகாவலிக் காணி என்கிறார்கள், எல்.ஆர்.சீ நிலம் என்றுவேறு கூறுகின்றார்கள். இதைவிட வன பரிபாலன திணைக்களத்தின் காணி என்றும் சொல்கிறார்கள், வன ஜீவராசிகளுக்குரிய நிலம் எனவும் வகைப்படுத்துகின்றனர்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நகரமான புல்மோட்டையில் தென்னமரவாடிக்கு அண்மையாகவுள்ள பகுதியில் இரண்டு புதிய சிங்களக் குடியேற்றங்கள் சட்டவிரோதமான முறையில் உருவாக்கப்பட்டு வருகின்றமை தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் பெறப்பட்டதாக பேர்ள் அக்ஷன்(PEARL action) என்ற ஆய்வு நிறுவனம் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தது.புல்மோட்டைப் பிரதேசத்தை அண்மித்த பகுதியில் நடைபெற்று வரும் சிங்களக் குடியேற்றங்கள் குறித்தே அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

தென்னமராவடியிலிருந்து புல்மோட்டை செல்லும் வீதியில் புல்மோட்டை போஹகவெள (B=60) வீதியில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில், இரண்டு தமிழ்க் கிராமங்களை ஆக்கிரமித்து பௌத்த பிக்குகளின் ஆதரவுடனும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பாதுகாப்புடனும் வீடமைப்பு அதிகாரசபையால் வீடுகள் அமைக்கப்பட்டு , புதிய குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வரும் மாலனூர்(12 ஆம் கட்டை) மற்றும் ஏரமடு (10ஆம் கட்டை) ஆகிய தமிழ்க் கிராமங்களை ஆக்கிரமித்து, வீதியின் ஓரமாக பல சிங்களக் குடும்பங்கள் காடுகளை வெட்டி தற்காலிக வீடுகளை அமைத்து, குடியேறியுள்ளனர். இந்த நிலையில் அவர்களுக்கு வீடமைப்பு அதிகாரசபையால் பிரதேச செயலகத்தின் எந்தவிதமான அனுமதிகளுமின்றி வீட்டுத் திட்டங்களுக்கான நிதி வழங்கப்பட்டு, வீடுகளை அமைக்கும் வேலைகள் நடைபெற்றுள்ளன.

(05ஆம் பக்கம் பார்க்க)



# மாணத்தி

கருணை ரவி

1

'அவர் அவளைப் பார்த்தார். பூங்கொடிதான். அவளைக் கண்டதும் அப்படியே நின்றார். மூச்சு,சுவாசப்பையில் குமைந்தது. மூச்சு வேகமாகவும் மெதுவாகவும் மாறி மாறி சுவாசத்திலிருந்து வெளிவர நெஞ்சு அடைத்தது. தொண்டை கரகரத்தது அவருக்கு. சுவாச வழிகளில் ஏதோ மாறி மாறி திட்டிகளாய் சுவாசிப்பை தடுக்க, நொந்த நெஞ்சை கைகளால் தடவினார். அவரின் மூச்சு இப்படி சீர்குலைந்து போவதற்குக் காரணம் பூங்கொடியைக் கண்டதுதான்.

அவர் என்றோ ஒருநாள் அவளைக்காண்பேன் என்று நினைத்தார். ஆனால், இந்த இடத்தில், இந்தக் கோலத்தில், அவளைக் காண்பேன் என்று அவர் நினைக்கவில்லை. ஆயிரம் பக்தர்கள் ஒன்று கூட, ஒரு திருவிழா வேளையில், அல்லது ஒரு திருமண வீட்டில், அல்லது ஒரு சுவீப் டிக்கற் விழுந்த சந்தோசத்தில், ஒரு மங்களகரமான முகத்தோடு அவளைக் காண்பேன் என்ற அவரது கனவுகள் அவளைக் கண்டதும் நொருங்கின.

அவளின் முகமும் அவரின் முகத்துடன் ஒத்திருந்தது. சிரிப்பு தொலைந்து, நீர் அற்று வறண்ட நிலமாகிய அவளின் முகம், கிட்டத்தட்ட அவரின் முகம்மாதிரியே இருந்தது. அவள் கிளிநொச்சி முருகன் கோயிலுக்கு அருகிலிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டக் கொட்டகைக்குள் இருப்பதாக, நகைக்கடை முதலாளி நக்கீரன் சொன்னதும் அவர் அவளிடம் வந்தார். கொட்டகையின் நாற்புறங்களிலுமுள்ள சுவர்களில் குழந்தைகள், பெரியவர்கள், குமருகள், முதியவர்கள் எனப் பல வயதுடையவர்களின் படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. தொங்குகின்ற அத்தனைபேரும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். இந்த பல நூறு படங்களில் அவள் நிருபனுக்காக இருப்பதாக நக்கீரன் அவருக்கு சொன்னான்.

அவர் அவளைப் பத்துவருடங்களாகத் தேடினார். ஆனால், அவள் இப்படி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கொட்டகைக்குள் இருப்பாள் என்று அவர் நினைக்கவில்லை. அவளின் மெலிந்த தோற்றமும் நரைவிழுந்த கன்ன முடிகளும் அழுக்கேறிய சீலையையும் பார்த்தபோது, அவர் மூச்சுத்திணறினார். தண்ணீருக்குள் விழுந்தவர்களுக்குத்தான் மூச்சுத்திணறும். ஆனால், அவளைக் கண்டதும் தனக்கேன் மூச்சுத் திணறுகிறது என நினைத்தார்.

அவள் அவருக்குச் சொந்தமுமில்லை, அவரது பரம்பரையுமில்லை. அவள் யாரோ ஒருத்தி. அந்த ஒருத்தி ஒரு தனிமரமாகி இருப்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அவளுடன் கூட இருப்பவர்கள், ஒவ்வொருவருடனும் கதைத்தும், சிரித்தும், அழுதும், திட்டியும், எரிந்தும், முகங்களை சாந்தமாகவும் சிலர் விகாரமாகவும் வைத்திருக்கும்போது அவள், முகத்தில் எந்த உணர்வுகளுமற்று எதையோ பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவர்களில் சிலர் கூட்டமாகவும் சிலர் சோடிகளாகவும் கவலைகளை, நினைவு இடுக்குகளில் சொருகவிட்டு, கதைத்து சிரித்துக் கொண்டிருக்க அவள் மட்டும் ஒற்றை மரமாய், தனித்து விடப்பட்ட வளாக, அல்லது தீண்டப்படாதவளாக, அல்லது ஒருவருடனும் சேர விருப்பின்றி இருக்கின்றாள். அவள் தனிமையை விரும்புவதில்லை. தனிமை மனதில் சஞ்சலத்தை புதைத்து திணறுவதாக அவருக்கு ஒரு தடவை அவள் சொல்லியிருக்கின்றாள்.

அவளிடம் நிறையக் கதைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கதையிலும் கண்ணீர் இருக்கிறது. அவளின் எல்லாக்கதைகளும் அவருக்குத் தெரியும். அவளின் இறுதிக்கதையை நக்கீரன் அவருக்குச் சொன்னான். அவளின் கதைகளில் அவரும் ஒருவர். அவளின் கதைகளை மனதில் வைத்து, அவர் இவ்வளவு நாட்களும் அவளைத் தேடினார். அவர் காணும் போது அவள் சிரித்த முகத்துடன் மதாளித்த பார்வையுடன் களிப்பூட்டும் அழகோடு இருப்பாள் என இருந்த அவரது நினைவில் அவள் ஒரு சிலுவையை இறக்கிவிட்டாள்.

அவளின் கதையை அவர் சொல்லவேண்டும் என நினைத்தார். அவளின் எந்தக் கதையை முதலில் சொல்வது? என குழம்பினார்.

நித்தி, நிருபன், புறாட்டி, உத்தமன் (போராளி), கந்தவிக் கிழவன், கஞ்சாக்கனகு, வெற்றிலைக்கடைக்காரன், மரியதாஸ், பிலிப்பு, அந்தோனி, கனகம், வள்ளிநாயகி, கிளினர் தெய்வேந்திரம். பேதுரு...

இவர்களில் யார் கதையை முதலில் சொல்வதென யோசித்தார். இவர்கள் ஒவ்வொருவருடனும் பூங்கொடியின் கதைகள் பின்னியிருக்கின்றன. வயதின் மூப்பில் இருந்து கதையைத் தொடங்கவா? அவள் படமாய் கையில் வைத்திருக்கும் நிருபனின் கதையில் இருந்து தொடங்கவா? அல்லது போராளியின் கதையில் இருந்து தொடங்கவா? அல்லது மரியதாஸில் இருந்து தொடங்கவா? காமவெறியன் கஞ்சாக் கனகுவிடமிருந்து கதையைத் தொடங்கவா?

இவர்களில் இருவரின் கதைகளையே அவர் சொல்லப்போகிறார். அந்த இருவரின் கதைகளோடு ஏனையவர்கள் கலப்பார்கள். அவர் இரண்டாவதாகச் சொல்வது கஞ்சாக்கனகுவைத்தான். குறிப்பிட்டவர்களில் அவருக்குப் பிடிக்காதவர் இந்தக் கஞ்சாக்கனகுதான். அவர் முதலில் சொல்வது, அவருக்குத் தெரியாத ஒருவனை. அவள் அவருக்குச் சொன்ன நாயகன். **அவன்தான் புறாட்டி...**

காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. எந்த வியர்வையும் பூங்கொடியின் முகத்தில் முத்துக்களிட வில்லை. அவள் அந்த கடற்கரை மணலில் நடந்து சென்றாள். போத்தல் நிறைய தேநீருடன் ஒருகையில் இருந்து மற்றைய கைக்கு தேநீரை மாற்றிக் கொண்டு நடந்தாள். மஞ்சள் துணியில் பூப்போட்ட பாவாடை காற்றுக்கு முழங்கால்களுக்கு மேல் உயர உயர ஒருகையால் இழுத்து பாவாடையை முழங்கால்களுக்கு கீழே விட்டபடி நடந்தாள். அந்தக் கடற்கரையில் தான் ஒரு நாயகி என்றும் கடற்கரையிலுள்ள கண்கள் எல்லாம் தன்னைப் பார்ப்பதாகவும் அவள் எப்போதும் நினைப்பதுண்டு.

வலைகளை வள்ளத்திலிருந்து திரள்களாக இறக்கிவிட்டு அந்த வலைகளை சிக்கெடுத்துக்கொண்டிருந்தார் கந்தவிக்கிழவன். வலைகளில் எடுக்கப்படாமல் இருந்த சின்னச் சின்ன மீன்களை எடுத்து எறிந்தபடி வலைகளை சீராக்க, காகங்கள் அவரைச்சுற்றி இருந்தன. பூங்கொடி கனகத்தையும் வள்ளிநாயகியையும் கடந்து கந்தவிக் கிழவனிடம் போனாள். அவளை ஓரக்கண்ணால் பார்த்த வள்ளிநாயகி மூக்கைச்சிமிட்டி கனகத்துக்குச் சொன்னாள்

சஞ்சீவி தொடர் கதை

"பூங்கொடியின்ரை ஆட்டத்தைப் பார்... ஒவ் வொருநாளும் ஒவ்வொரு சட்டை, இந்தக்கரையிலை ஆரைப்பிடிக்கப்போறாவாம்"

"அவளை ஊர், கடை தெரு வெண்டு கிழவன் எங்கையாலும் கூட்டிக்கொண்டு போகுதே. கிடக்கிற உடுப்புகளைப் பொடிச்சி போடத் தானே வேணும்"

வள்ளிநாயகியின் கதைக்கு பதில்கதையாக கனகம் சொன்னாள். கனகம் யாரையும் நகைக்க விடமாட்டாள். என்ன கதையென் றாலும் அதை நியாயப்படுத்திக் கதைப்பாள்.

கனகமும் வள்ளிநாயகியும் சுறுசுறுப்பாக வலையில் இருக்கும் மீன்களை தெரிந்து கொண்டிருந்தாலும் கதையும் சுறுசுறுப்பாக இருக் கும். வள்ளிநாயகிக்கு ஊர்க்கதையென்றால் காணும். வெற்றிலையை வாய்க்குள் குதப்புவது போல கதைகளையும் குதப்புவாள். கனகம் எல்லாக்கதைகளுக்கும் நியாயம் கற்பிக்கமாட்டாள். வள்ளிநாயகி தவறாகச் சிலபேரை புரிந்து கொண்டால் மாத்திரம் நியாயப்பாடுகளைக் கதைப்பாள்.

பூங்கொடி கந்தவிக்கிழவனிடம் தேநீரைக் கொடுத்தாள். கிழவன் தான் அவளின் தகப்பன். அவரை அனைவரும் கந்தவிக்கிழவன் என்றே கூப்பிடுவார்கள். கந்தவி என்று எவரும் கூப்பிடுவதில்லை. அவருக்கு பூங்கொடி மட்டுமே ஒரே மகள். பூங்கொடி பிறந்தன்றே உடலில் நஞ்சேறி தாய் செத்துவிட்டாள்.

"நீ, உந்தக் குஞ்சை வைச்சு என்ன செய்யப்போறாய்? ஏதும் கலியாணத்தைச் செய்தாத் தானே அந்தப்பெட்டக்குஞ்சை வளக்கலாம்" கனகம் கிழவனிடம் இப்படி ஒருநாள் சொன்னாள்.

"போடி புடுக்கி... என்ரை புள்ளையை வளக்க எனக்குத் தெரியும். தாலி கட்டுறதெண்டா ஒருத்திக்குத்தான். மரியதாஸைப் போல ஆயிரத்தெட்டு வீட்டிலை பெண் வைக்கிறமாதிரி என்னை நினைக்காதை. இனி என்னோடை கலியாணம் அது இதெண்டு கதைச்சியோ..." பற்களை நொறுமிக் கொண்டு கண்டகண்ட தூசணங்களெல்லாம் பேசினார். அவரின் அந்தப் பேச்சோடு கனகம் மட்டுமல்ல எவரும் அவரின் மறுவாழ்வு பற்றிக் கதைப்பதில்லை. அவரின் வாயில் வரும் பேச்சும் நடத்தையும் எப்பவும் ஒரேமாதிரியே இருக்கும். அவர் தன்னந்தனியனாக இருந்து பூங்கொடியை ஒரு குமரியாக்கி விட்டார்.

கந்தவிக்கிழவன் பூங்கொடியிடம் தேநீரை வாங்கிக்கொண்டு நாரியை நிமிர்த்தினார். குனிந்து வலையை இழுத்து இழுத்து நாரி உளைந்து கொண்டிருந்தது. கோமணம் கவட்டை வெட்டி உப்புத் தண்ணிக்கு பொக்குளுக்குக் கீழே எரிந்து கொண்டிருந்தது. சுடுதேநீர் உடம்புக்குள் போனால் நாரிவலி எடுபடும் என நினைத்துக் கொண்டு வாய்க்குள் இருந்த வெற்றிலைக் கக்கலை கையில் எடுத்து தண்ணீருக்குள் எறிந்து, கையை குண்டியில் துடைத்தார். குண்டியில் இருந்த மண் கையில் பிரண்டது. கையைக் குனிந்து கெண்டங்காலில் துடைத்துக்கொண்டு எழும்ப கோமணம் இளகியது. தேநீர் போத்தலை கீழே வைத்து விட்டு பின்னுக்கு கையை வைத்து கோமணத்தை இறுக்கினார். நின்றபடி ஒரு மிடறு தேநீரை வாய்க்குள் உவிந்து வாயைக் கொப்பளித்து விட்டு வெள்ளை மணல் பார்த்து இருந்து, தேநீரைக் குடித்தார்.

பூங்கொடி குவித்த மீன்களில் பெரியதை கறிக்கு தவத்திக் கொண்டு நின்றாள். இரட்டைப்பின்னல் முன்னுக்கு ஆடிக்கொண்டிருந்தது. பின்னலுக்குள் அகப்படாத முடிகள் காற்றுக்கு கன்னத்தை உரசிக்கொண்டிருக்க, கன்னத்தை பிறங்கையால் உரஞ்சி காற்றுக்கு ஆடிய மயிர்களை பின்னுக்குத் தள்ளினாள்.


"தூள் மீனுகள் கொஞ்சத்தையும் அள்ளு. மாங்காய் வாங்கிக் கொண்டு வாறன். புளியாணம் வை" சொல்லிக்கொண்டு நிலத்தில் ஒரு கையை ஊன்றி எழும்பினார். மிச்சத் தேநீரை கோமணத்துக்கு ஊற்றினார். எரிவு பறந்தது.

> தாலி கட்டுறதெண்டா ஒருத்திக்குத்தான். மரியதாஸைப்போல ஆயிரத்தெட்டு வீட்டிலை பெண் வைக்கிறமாதிரி என்னை நினைக்காதை. அவரின் வாயில் வரும் பேச்சும் நடத்தையும் எப்பவும் ஒரே மாதிரியே இருக்கும். அவர் தன்னந்தனியனாக இருந்து பூங்கொடியை ஒரு குமரியாக்கி விட்டார்.



# சொற்சிலம்பம் போட்டி

56




அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ................................

........................................

கையொப்பம்:........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. எச்சரிக்கை நிறம் 2. உயர்ந்து வளரும் ஒரு மரம் 7. அதிகம் 8. அரசர் 10. சிரசு 11. கலவி 13. கோள் 16. மண்ணுக்கு முந்தியது 17. முதல்வன் 19. நசி 20. உதவி(யாளன்) 21. அதிக 22. நித்திரை 23. முழு 24. குத்துவது இப்படி 25. பாரதத்தில் பீஷ்மருக்கு இப்படி ஒரு சிறப்பு

## மேலிருந்து கீழ்

1. காதில் மாட்டுவது 2. ரகம் 3. மதங்களுடன் தொடர்புடைய பழைய கதைகள் 5. இரண்டாவதற்கு முந்தியது 6. கொத்துக்கள், சீப்புக்கள் சேர்ந்து வருவது 9. ரஷ்யாவை ஆண்ட மன்னர்கள் 11. தஞ்சமடைதல் 12. தொடர்பாடலில் முக்கிய இடத்தைப் பெற்ற ஒரு முறைமை 14. அடுத்தவருக்கு தெரியாமல் பேணப்படுவது 15. அரசர் 17. நீர்நிலைக்கு 18. கூறுக எல்லையில் கட்டுவது 19. மண்டி (எண்ணெய்) 20. ஒரு பூச்சி வகை 23. ஒரே அளவான

### சொற்சிலம்பம் போட்டி 55 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சாசுவதம் 5. பூமி 7. கத்திரி 8. பாகன் 9. சதி 10. சவரம் 12. தனகு 13. பதி 15. அகம் 16. அம்மி 17. முகடு 18. நவ 19. கல 20. சிலம்பு 22. தாம்பூலம் 23. கைதி

**மேலிருந்து கீழ்**

1. சாகசம் 2. சுத்தி 3. வதி 4. தரிசனம் 5. பூகம்பம் 6. மின் 8. பார 11. வகு 12. தகடு 14. திமில் 15. அகலம் 16. அவம் 17. முகதா 18. நலம் 20. சில 21. புகை

### சொற்சிலம்பம் போட்டி இல.56

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**05.11.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

### போட்டி இலக்கம் 55 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**நா.பாலசுப்பிரமணியம்**
226/73 அம்மன் வீதி, தோணிக்கல் வவுனியா

**2 ஆம் பரிசு**
**சா.ராதிகா**
நெல்லியடி, கரவெட்டி

**3 ஆம் பரிசு**
**ந.பாலகுமார்**
காரைநகர்

**4 ஆம் பரிசு**
**பொன்.கனகரத்தினம்**
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை

**5 ஆம் பரிசு**
**ஆ.பாலமதுஜா**
திருநாவலூர் புலோலி மேற்கு, பருத்தித்துறை

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

## 1505-1948 வரை

மூன்றாவது பெரிய மாகாணம் வடமராட்சி . இங்கு மூன்று தேவாலயங்கள் மட்டுமே உள்ளன.

கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் நிலம் இங்கு தாராளமாகக் காணப்படுகிறது. ஆடு, மாடு,கோழி, புறா,கௌதாரி என்பன இங்கு காணப்படுகின்றன. இங்கு ஒரு பணத்துக்கு ஒரு ஆடு வாங்கலாம்.முட்டையும் மலிவாகக் கிடைக்கிறது. கட்டைவேலித் தேவாலயம் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. இங்கு 600 மாணவர்களும் 1200 நற்செய்தியாளர்களும் உள்ளனர். மற்றைய தேவாலயம் உடுப்பிட்டியில் அமைந்துள்ளது.

இங்குள்ள மக்கள் குறைந்த சாதியினர். இவர்களுக்கு நிரந்தர வசிப்பிடம் இல்லை. இவர்கள் கடவுளுக்குப் பயப்படாதவர்கள். திருட்டுகளில் ஈடுபடுபவர்கள்.இங்கு 690 மாணவர்களும் 800-900 நற்செய்தியாளர்களும் உள்ளனர். இங்குள்ள சிறுவர்களுக்கு மணலில் எழுதிக் கல்வி புகட்டுகிறோம்.

பருத்தித்துறை இந்த மாகாணத்தின் ரம்மியமான பிரதேசம். இந்த இடம் போர்த்துக்கீசரால் மலைப்பிரதேசம் என (Paunta de Pedras) அழைக்கப்பட்டது. .இங்கு சிறிய பருத்திச்செடிகளில் பெருமளவு பருத்தி உற்பத்தியாகிறது.சிறிது காலத்துக்கு முன் நாங்கள் ஆங்கிலேயருடன் யுத்தம் புரிந்த போது இங்கு ஒரு துறைமுகம் உருவாக்கப்பட்டது. (ஆங்கிலேயருடன் எங்கே யுத்தம் புரிந்தார்கள் என்று தெரியவில்லை . ஆனால் அது இலங்கையில் இடம்பெறவில்லை.)

இங்கு போர்த்துக்கீசருடன் இடம்பெற்ற யுத்தத்தில் கப்டன் ஜோன் ஹொக்பேட்( Captain John Hoogfate) உட்பட எமது சிப்பாய்கள் பலரை நாங்கள் இழந்தோம். நாங்கள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்த போது இவ்விடத்தில் போர்த்துக்கீசருக்கும் எமக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் போர்த்துக்கீசக் குருமார் இங்கிருந்து படகு மூலம் மன்னாருக்குத் தப்பியோடினர். இங்குள்ள வீதிகள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

இங்குள்ள துறைமுகத்தில் வருடத்தில் ஏழு, எட்டு மாதங்கள் எதுவித பிரச்சினையுமின்றி கப்பல்களுக்கு நங்கூரம் பாய்ச்சலாம். மாரி காலத்தில் இங்கிருந்து கப்பல்களை எடுத்துச் செல்வது ஆபத்தானது. கடலில் கப்பல்கள் ஏதாவது தென்பட்டால் உயரத்தில் கொடி பறக்க விடப்பட வேண்டும் (கப்பல்களின் பாதையை காட்டுவதற்காக).

இங்குள்ள தேவாலயம் போர்த்துக்கீசருக்கும் எமக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பலத்த சேதமடைந்திருந்தது நாங்கள் அதைத் திருத்தியமைத்தோம். தேவாலய வாசலில் பெரிய புளியமரம் ஒன்று நிற்கிறது. இந்தப் புளியமர நிழல் வெக்கையிலிருந்து மக்களைப் பாதுகாக்கிறது. புளியம்பழம் பழுக்க முன்னர் பழங்களைப் பிடுங்குவதற்கு நாங்கள் அனுமதிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்தப்புளியமரத்தடிக்கு சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு வயிறு சம்பந்தமான நோய்கள் காய்ச்சல் போன்றன ஏற்படும் என்பதே இதற்குக் காரணம். இங்குள்ள மக்கள் ஏழைகள். சொறி, சிரங்கு, கொப்புளிப்பான், சின்னமுத்து போன்ற நோய்கள் இங்கு சாதாரணம். இங்குள்ள மக்கள் மீன்,கருவாடு, கிழங்கு என்பவற்றுடன் சிறிதளவு சோற்றையும் சேர்த்து உண்ணுகின்றனர். இங்கு 1000 மாணவர்களும் 3000 போதகர்களும் உள்ளனர்.

யாழ்ப்பாணப்பட்டினத்தின் கடைசி மாகாணம் பச்சிலைப்பள்ளி .இந்த இடம் மணற்பாங்கான பிரதேசம்.இருமாவட்டங்களை கிளிநொச்சி, முல்லைத்தீவாக இருக்கலாம்) பச்சிலைப்பள்ளி என்ற பெயரில் ஒல்லாந்தர் நிர்வாகம் செய்துள்ளனர்.இங்கு நான்கு தேவாலயங்களும் பல பாடசாலைகளும் உள்ளன.இங்குள்ள நெடிதுயர்ந்த பனைமரங்கள் வறியமக்களுக்கு உணவை வழங்குகின்றன. இங்கு யானைகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வூர்ப் பெண்கள் யானைகளைத் துரத்துவதற்கு சங்கை எடுத்து ஊதுகின்றனர். யானைகளிடம் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் எமது தேவாலயத்தைச் சுற்றி உயரமான மதில் அமைத்துள்ளோம். இங்கு 300 மாணவர்களும் 600 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.பச்சிலைப்பள்ளியில் இருந்து 2 மணி நேரத்தில் முகமாலையை அடைந்துவிடலாம். முகமாலையில் மரத்தினால் ஒரு தேவாலயத்தை அமைத்துள்ளோம்.

தர்மபுரம் தேவாலயம் இந்த மாகாணத்தின் பெரிய தேவாலயமாகக் காணப்படுகிறது. இங்கு 500 மாணவர்களும் 900 நற் செய்தியாளர்களும் உள்ளனர். முள்ளிப்பற்று தேவாலயம் இந்த மாகாணத்தின் கடைசித் தேவாலயமாக காணப்படுகிறது .இங்கு 215 மாணவர்களும் 350 நற்செய்தியாளர்களும் உள்ளனர். எமது பாதுகாப்பு கருதி இங்குள்ள



ஆற்றுக்கு அருகில் தேவாலயத்துடன் இணைந்ததாக ஒரு கோட்டையை அமைத்துள்ளோம். அடுத்ததாக நாங்கள் யாழ்ப்பாணத்தின் தீவுகளுக்குச் செல்வோம்.இங்கு ஆறு தீவுகள் காணப்படுகின்றன. ஊர்காவற்றுறை ,அல்லைப்பிட்டி, வேலணை போன்ற இடங்களில் மூன்று தேவாலயங்களை அமைத்துள்ளோம். இவற்றுள் ஊர்காவற்றுறை சென்.ஜோன்ஸ் தேவாலயம் பெரியது. இங்கு 800 மாணவர்களும் 200 நற்செய்தியாளர்களும் உள்ளனர். போர்த்துக்கீசரால் தீக்கிரையாக்கப்பட்ட தேவாலயத்தை புதுமெருகுடன் புனரமைத்து கற்தேவாலயமாக மாற்றியுள்ளோம்.

1658 இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக மரங்கள் வேருடன் பாறின, கூரைகள் பிடுங்கி எறியப்பட்டன. மக்கள் மரங்களின் மேல் ஏறி அமர்ந்திருந்தனர். இங்கு தரமான வெண்ணெய் உற்பத்தியாகிறது. அத்துடன் சாய வேரும் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.இங்கு மான்களும் வானம்பாடிகளும் காணப்படுகின்றன. காரைதீவையும்,ஊர்காவற்றுறையையும் ' HamNeheel' கோட்டை பிரிக்கிறது.வன்னியிலிருந்து கொண்டு வரும் யானைகளை நாங்கள் ஊர்காவற்றுறையில் இருந்து தமிழ் நாட்டுக்கும் வங்க தேசத்துக்கும் ஏற்றுமதி செய்கின்றோம். இங்கு 490 மாணவர்களும் 1000-1100 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

*(வரலாறு நீளும்)*



# நலம்பெற வேண்டும் நாமும் நாடும்!

○ வேலணையூர் சுரேஷ்

91 நலம்பெற வேண்டும் நாமும் நாடும்
நடைபெற வேண்டும் நன்மைகள் யாவும்
பலம்பெற வேண்டும்; புதிதென நாமும்
பாரிடை பூத்திட வேண்டும்! இந்த
நிலம்படும் துன்பம் நீங்கி நீத்து
நிம்மதி பெறுதல் வேண்டும்! வாழ்வில்
தளர்ந்திடாது எந்தத் தடையிலும் மீண்டு
தண்ணொளி வீச வாழுதல் வேண்டும்

92 நோயில்லா வாழ்வு வேண்டும் யாரும்
நுடங்கிடா திருத்தல் வேண்டும் எந்த
வாயில்லாச் சீவன் தானும், எளிதில்
வதைபடா வாழ்வு வேண்டும்
தாயில்லாப் பிள்ளை போல; இனம்
தனித்திடா நிலைமை வேண்டும் நாமும்
ஓய்வில்லா அன்பில் மூழ்கி மூழ்கி
ஒன்றென வாழ்தல் வேண்டும் வேண்டும்

93 குற்றம் குறைகள் காணுதல்; அதையே
குறியாய் வைத்து மோதுதல்! சும்மா
மற்றவர் வாழ்வில் மூக்கை நுழைத்தல்
மூக்குடை பட்டு உறவினைப் பகைத்தல்
ஒற்றை உறவும் ஒட்டா தவராய்
ஒருவரை ஒருவர் தின்னுமாற் போல
பெற்ற பிள்ளையே துரோகி ஆகும்
பெரிய பழிக்கு ஆளாய்ப் போனோம்

94 ரத்த உறவுகள் என்பவ ரெல்லாம்
அர்த்தம் மாறி முதற்பகை யாகி,
செத்த வீட்டுக்கும் இல்லா நிலையே
செகத்தில் இன்று உள்ள நிலையாம்!
மொத்தப் பகையும் வீட்டிற் குள்ளே
முழுதாக விழுங்கு மாற்போல் மோத;
தத்துக் கெட்ட சமூகம் திருந்த
தக்க காலம் வருமா? இல்ல!

95 உறவுகளுக்கு இடையில் இடைவெளி கூடி
உள்ள அன்பும் அனாதை யாகி
துறவிகள் போல ஒதுங்கிப் போனோம்
துட்டரைக் கண்டால் விலகலாம்; உடன்
பிறந்தவர் கூடவும் விலகுதல் முறையா?
பிறழ்வுகள் சமூகப் பிளவுகள் ஆச்சு
மரபுகள் தொலைத்த மனிதர் மீண்டு
மனிதராய் வாழும் காலத்தை வேண்டு

முற்றும்






# ஊர்ப்புதினம் 13

○ இராகவன்


"எந்தச் சேங்கனடா பாட்டுப் பாடினது? இண்டைக்கு அவன்ர கழுத்தை அறுக்காமல் விடமாட்டன்" எண்டு கொக்கத்தடியை அவங்கட பக்கம் திருப்பிக் கொண்டு இரண்டடி வேகமாய் முன்னுக்குப் போக எல்லாப் பெடியளும் கூவடிச்சுக் கொண்டு சிதறியோடுவாங்கள்.

அந்தாள் "சேங்கா! " எண்டு சொல்லேக்குள்ள 'சேயன்னாவுக்குச்' சரியான அழுத்தங் கொடுக்கிறதால அது கொஞ்சம் வித்தியாசமாய்த்தானிருக்கும். அதால அந்தாளோட தனகிற பெடியளெல்லாம் 'சேயன்னாவுக்கு' அதே அழுத்தங் குடுத்துச் "சேங்கன் அருணாசலம்" எண்டும் கத்துவாங்கள்.

அந்தாள் எதுவும் செய்யாமல் தன்ரபாட்டில போடும். ஆனால் கத்திறாக்களை வடிவாய் 'நோட்' பண்ணி வைச்சிட்டு எங்கையும் வசமாய்த் தனிச்சு அகப்படேக்குள்ள ஆளைப் பிடிச்சு "அண்டைக்கு என்னடா சொல்லிப் போட்டுப் போனனி? மவனே உனக்கிண்டைக்கு நடக்கிறதைப் பாரன்" எண்டு கையைப் பிடிச்சிடும். பிடிபட்டவன் அழத் தொடங்கிடுவான். கையை முறுக்கி முதுகில ஒரு குத்து. இல்லாட்டில் வயித்தில ஒரு நுள்ளு. அதைவிடச் சாரங்கட்டியிருந்தால் கழட்டிவிட்டுடும். காச்சட்டை போட்டிருந்தாலும் சில நேரங்கழட்டிவிட்டுடும். ஆளின்ரை 'மூட்'டைப் பொறுத்துப் பிடிபட்ட ஆளுக்கான பனிஸ்மென்ருகள் வேறுபடும். எண்டாலும் அவங்கள் திருந்தமாட்டாங் கள். நானொருக்காலும் அந்தாளோட தனகுறேல்ல.

ஏனெண்டால் நான் அம்மாவோட சிவத்தனமக்கை வீட்டை அடிக்கடி போறனான். மற்றது அருணாசலமும் ஆட்டுக்குக் குழையொடிக்கப் பின்னேரங்களில வீட்டை வாறது வழக்கம். நான் அந்தாளோட தனகினால் அம்மாவிட்ட வந்து சொல்லிப் போடும். உடன எனக்குச் சுத்தும் பித்தும் சுழரச் சுழர விழும் எண்ட பயத்தில அந்தாளோட எந்தச் சோலிக்கும் போறேல்ல. அந்தாளும் என்னை 'இவனொரு நல்ல பெடியன்' எண்டு அடிக்கடி சொல்லும்.

சிவத்தனமக்கை வீட்டைக் கடந்து போகேக்குள்ள ஒரு முடக்கு வரும். அதால திரும்பினால் நேர இருக்கிறது 'மூத்தார் வீடு'. அதை 'மூத்தாம்பியப்பா வீடு' எண்டும் சொல்லுறவை. அந்த வீட்டுக்குள்ள அந்தநேரம் அஞ்சாறு குடும்பங்கள் இருந்ததெண்டால் பாருங்கோவன். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனி வீடுகளிருந்தது. ஒரேயொரு கல்வீடு. மற்றதெல்லாம் மண்வீடுகள்தான். எல்லா வீட்டுக்கும் ஒரேயொரு பொது முத்தம். இராப் பகலாக ஆக்கள் நிறைஞ்சு அந்த வளவு ஒரே கலகலப்பாயிருக்கும். அந்த வீட்டிலயிருந்த துருவன், விதுரன் எண்டு இரண்டு பேரோட எனக்கு நல்ல பழக்கம். துருவனுக்கு என்னை விட



நாலைஞ்சு வயது கூட எண்டாலும் நான் துருவன் எண்டு தான் கூப்பிடுவன். விதுரனுக்கு என்னை விட மூண்டு, நாலு வயது குறைவு. விளையாடேக்குள்ள எல்லாருஞ் சேர்ந்து விளையாடுவம். இதுக்குள்ள பெடியள் எல்லாம் மும்முரமாய் இயக்கத்துக்குப் போன மூட்டத்தில துருவனும் இயக்கத்துக்குப் போட்டான். பிறகு கொஞ்சக் காலத்தால புலியுடுப்போட வீட்டை வந்தான். விதுரன் தமையனுக்கு முன்னாலயும் பின்னாலயும் திரிஞ்சான். என்னைக் கண்டுட்டுத் துருவன் சிரிச்சுத் தலையாட்டினான். நானும் பதிலுக்குச் சிரித்து தலையாட்டினன். என்ன கதைக்கிறதெண்டு தெரியேல்ல. 1991 எண்டு நினைக்கிறன். சுவ ரெல்லாம் கண்ணீர் அஞ்சலி ஒட்டி இருந்திச்சு. ஆரெண்டு பாத்தால் துருவன். ஆனையிறவுச் சண்டையில ஆள் வீரச்சாவு எண்டு பேப்பரில செய்தி வந்திருந்தது.

(தொடரும்)

# வெள்ளம் வந்த பின் அணையா?...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, கிழக்கு மாகாணம் ,மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்தியில் உள்ள மாந்தீவு பறவைகள் சரணாலயத்துக்குள் புதிதாக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகச் சென்ற வியாழக்கிழமை செய்திகள் வெளியாகியுள்ளன.


100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மாந்தீவு சரணாலயத்துக்குள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குச் சொந்தமான தொழுநோய் மருத்துவமனை மற்றும் முருகன் கோயில், கத்தோலிக்க தேவாலயம் உட்பட மதத் தலங்களும் அமைந்துள்ளன. காலம் காலமாக சுகாதார அமைச்சுக்குச் சொந்தமாக இருந்த மாந்தீவுப் பிரதேசம் எப்போது பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டது? என்பது எவருக்குமே தெரியாத நிலையில் அங்கு இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாரம்பரிய தமிழ்க் கிராமமான நொச்சிக்குளத்தில் இரவோடு இரவாக புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது. நொச்சிக்குளம் வவுனியா = திருகோணமலை வீதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீகக் கிராமமாகும். இந்தக்கிராமத்தை ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே அங்கு புத்தர் சிலை நிறுவப்பட்டதாக பிரதேச மக்கள் கூறியிருந்தனர். வவுனியா - திருகோணமலை எல்லையில் பொப்பசவேவா எனும் பெயரில் 800 சிங்களக் குடும்பங்களை குடியமர்த்துவதற்கான வீட்டுத் திட்ட வேலைகள் இந்த அரசாங்கத்திலும் முன்னெடுக்கப்படுகின்றன.

வவுனியாவில் உள்ள கொக்கச்சான்குளம் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசமாகும். 2017 ஆம் ஆண்டு இந்த இடத்தில் மூவாயிரத்து 500 குடும்பங்கள் குடியேற்றம் செய்யப்பட்டு, இந்த ஆண்டு நெடுங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கும் வேலைத் திட்டங்கள் இடம்பெறுகின்றன. கலாபோபஸ்பெர என்று சிங்களப் பெயரிடப்பட்டுள்ள கொக்கச்சான்குளத்தில் தற்போது தமிழர்கள் எவருமே இல்லை.

இவ்வாறான காணி அபகரிப்புகள், குடியேற்றங்கள் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்தன. ஆனால் 2009 ஆம் ஆண்டு போர் இல்லாதொழிக்கப்பட்ட நாளில் இருந்து இந்த ஆண்டு வரையான பன்னிரண்டு ஆண்டுகள் துரிதமாக இடம்பெற்ற சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ்ப் பண்பாட்டு மரபு அடையாளங்கள், கலாசாரங்கள் அனைத்தையும் மாற்றியமைக்கும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். நாவற்குழியில் விகாரை அமைக்கப்பட்டது முதல், இன்னும் பல சிங்களக் குடியேற்றங்கள், காணி அபகரிப்புகள் நிகழ்ந்தேவருகின்றன. ஆனால் இதுகுறித்த புள்ளிவிவரங்கள் எதுவுமே தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைமைகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே மக்கள் சிந்திக்கும் காலமிது. அகிம்சை வழியில் தமிழர்கள் ஒரு தேசமாக இணைந்து பலமடைவதன் மூலமே வடக்கு=கிழக்கு இணைந்த சுயாட்சியை நிறுவமுடியும். அதைவிட வேறு மாற்றுவழி கிடையாது என்பதே ஆய்வாளர்களின் கருத்து. 13 ஐ ஆரம்பப் புள்ளியாகக்கூட ஏற்க முடியாதென்பதற்கு 2009 இன் பின்னர் அவசர அவசரமாகவும் திட்டமிடப்பட் டும் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் சிறந்த உதாரணம். இதனை அமெரிக்க, இந்திய அரசுகளுக்குத் தமிழ் சட்டமேதைகளினால் சொல்ல முடியுமா? அதிகாரப் பகிர்வுக்கும் அதிகாரப் பங்கீட்டுக்குமான வேறுபாடுகள் தெரிந்தும், அமெரிக்க, இந்தியப் புவிசார் அரசியல் நலன்களை சரியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தாமல், அவர்கள் சொல்வதை மாத்திரம் கேட்டதன் விளைவுகள்தான் இவை என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.



# காலந்தோறும் நாம் ஏமாளிகளா?

ம.கிருஷாந்தி
*4 ஆம் வருடம்,*
*ஊடகத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

ரோம் நகரம் பற்றி எரிய மன்னன் பீடில் வாசித்த கதையாக, 'மெனிக்கே மஹே ஹித்தே' சிங்களப் பாடலை இந்த இக்கட்டான சூழமைவிலும் ரசித்து மகிழ்தல் என்பதென்னவோ சாதனைதான். வேதனை சாதாரண மக்களுக்குத்தானே. அரிசி, பருப்பு விலையைப் பற்றி கவனம் செலுத்த தான் ஆட்சிக்கு வரவில்லை என்று கோத்தாபய சொல்வாராயின், அவர் எந்தக் கூச்சமுமின்றி கலையை ரசிக்கட்டும்.

"10 யோக்கட் வாங்கினால்தான் ஒரு அங்கர்"
இப்பிடி கொஞ்சநாளைக்கு முதல் அங்கர் விற்பனை அமோகமா நடந்தது.

"உண்மையாய் வெளுக்கோணும் போல கிடக்கு. விக்குறவையள இல்ல. வாங்குறவையள. ஏனடாப்பா, கொரோனாப் பேரிடர் காலத்திலயும் அவன் மனச்சாட்சிய கட்டி வைச்சிட்டு அநியாய விலைக்கு தன்ர உற்பத்திகளை தந்தால் நீங்களும் போய் விழுந்தடிச்சு வாங்குறீங்கள். அவனும் பாருங்கோ உங்கட "வீக் பொய்ண்ட்லயே" கை வைச்சுட்டான். தட்டுப்பாடெண்டு சொல்லி ஒண்டு ரண்டு மாசம் பதுக்கி வைச்சிருந்து போட்டு, முந்தி அடிச்ச அதேவிலை பெட்டியில இருக்க விலையைக் கூட்டி வித்தாலும், நீங்களும் வாங்குறியள் எண்டால் அவங்களில பிழையில்லையே. உங்களிலதான் பிழை"

இப்படி மனசுக்குள் என்னைச் சுற்றிலும் உள்ள உங்களைப் பார்த்து திட்டித் தீர்த்துக் கொள்கிறேன்.

வார்த்தைகள் உங்களைச்சுட்டிருந்தால் மன்னியுங்கள் மக்காள்!

என்செய்ய, நிலைமை இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பிரசவிக்க வைத்துவிட்டது.

உலகத்தையே கொரோனா ஒரு உலுக்கு உலுக்கி புரட்டிப்போட்டுவிட்டது. அதிலும் இந்தக் குட்டித்தீவு சிக்கி சின்னாபின்னமாகிப் போய்க்கொண்டிருக்கிறது. கொரோனாப் பேரிடருடன் சர்வாதிகாரமும், முறையற்ற தலைமைத்துவமும் இணைந்துதான் இந்த வளமிக்க குட்டித்தீவை இவ்வாறு வலுவிழக்கச்செய்து கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறைகளால் வழக்கம் போல இம்முறையும் இடருக்குள் சிக்குண்டு தவிப்பது அப்பாவிப் பொதுமக்களே.

ரோம் நகரம் பற்றி எரிய மன்னன் பிடில் வாசித்த கதையாக, 'மெனிக்கே மஹே ஹித்தே' சிங்களப்பாடலை இந்த இக்கட்டான சூழமைவிலும் ரசித்து மகிழ்தல் என்பதென்னவோ சாதனைதான். வேதனை சாதாரண மக்களுக்குத்தானே. அரிசி, பருப்பு விலையைப் பற்றி கவனம் செலுத்த தான் ஆட்சிக்கு வரவில்லை என்று கோத்தாபய சொல்வாராயின், அவர் எந்தக் கூச்சமுமின்றி கலையை ரசிக்கட்டும். ஆனால் இந்த நாட்டின் மீட்பர் தானேயென்று இன்னமும் அவர் சொல்வாராயின், மக்கள் இவ்வளவு இடருன் போராடிக் கொண்டிருக்கையில் 'மெனிக்கே மஹே ஹித்தேவை' கேட்டு ரசிக்க மனம் வந்திருக்குமா?


கோத்தாபயவுக்கு வாக்களித்த 69 லட்சம் பெரும்பான்மையினரும் தங்களின் தெரிவை, யானை தன் தலையிலேயே மண்ணள்ளிப் போட்ட கதையுடன் ஒப்பிட்டு ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒப்பாரியை விடவும் தெளிவடைதலே இப்போது முக்கியம்.

சரி இப்போது பால்மா விடயத்துக்கு வருவோம். ஒரு நிறுவனத்தினுடைய ஒரு உற்பத்திப்பொருள், அதுவும் அத்தியாவசியமற்ற ஒன்று எங்களை இந்தளவு தூரம் ஆட்டிப்படைக்கும் அளவுக்கு நாங்கள் வலுவிழந்து போயிருக்கிறோம். அடிமையாகி விட்டோம் என்றுகூடச்சொல்லிக்கொள்ளலாம். இங்கு யாரும் விதி விலக்கு அல்ல. எல்லோருமே பால்மாவை வாங்குகின்றோம்.

இறக்குமதி வரிப்பிரச்சினையால் பால்மாவுக்குக் கட்டுப்பாடு. ஆனால் பத்து யோக்கட் வாங்கினால் ஒரு அங்கர் என்று விற்பவர்களுக்கு மட்டும் தட்டுப்பாட்டையும் தாண்டி அந்த அங்கர் பெட்டிகள் எப்படிக் கிடைத்தன? ஆக, பொருள் தாராளமாகவே இருப்பில் இருந்திருக்கிறது. ஆனாலும் அதனைப் பதுக்கி, பால்மாவுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தி, நிபந்தனைகளை விதித்து, அதிக விலைக்கு விற்கிறார்கள். எம்மை ஏமாளியாக்குகிறார்கள் என்பது நன்கு தெரிந்தும் கூட, அதனை வாங்கியிருக்கிறோம். எப்படிப்பட்ட நிலை இது?

பொருட்கள் மக்களின் தேவைகளுக்கானவை. அவை ஒவ்வொருவரினதும் தேவைக்கும் விருப்பங்களுக்குமானவை. எது எமக்குத் தேவை என்பதை நுகர்வோரே நிர்ணயிக்க வேண்டும், மாறாக உற்பத்தியாளர்களில்லை. ஆயினும் எமது விருப்பையும் அதன்பாலான எமது மோகத்தையும் அறிந்து விற்பனை தாரர்களின் ஒரு சில உற்பத்திகளை, விருப்பமில்லாவிட்டாலும் சேர்த்து வாங்க வைத்து, விலையை அதிகரித்து விற்பனை செய்தல் என இவர்களின் வியாபார கபட உத்திகளுக்குள் தெரிந்தே சிக்குண்டுதான் போகின்றோம். தற்போது கடைகளில் பால்மா தாராளமாகவே கிடைக்கிறது.

புதிய - அதிகரிக்கப்பட்ட-விலையில் விற்பனையாகும் பால்மாக்களை முண்டியடித்துக் கொண்டு வாங்குகிறோம். அவற்றில் அநேக பால்மா பைக்கற்றுகளில் முன்னைய விலை பொறிக்கப்பட்டும் கூட, எதற்காக அதிக விலை கொடுக்கிறோம் என்று நாம் சிந்திப்பதில்லை.



சரி ஒரு பொருளுக்கு பழக்கப்பட்டு விட்டால், இப்படி சிந்திக்கும் நிலையைக் கூட இழக்க வேண்டுமா? தற்சார்பு பொருளாதாரம் நாம் அறியாத ஒன்றா? மாற்று வழியை பயன்படுத்துவது எமக்கு புதிதான ஒன்றா?

விலங்கு வேளாண்மை தொடர்பில் ஏன் நாம் கவனம் செலுத்தவில்லை? விலங்கு வளர்ப்பை அதிகப்படுத்தி அதனூடாக எமது உற்பத்திகளை உருவாக்கி நாமும் பயன்படுத்தி சந்தைப்படுத்தலையும் மேற்கொள்ள ஏன் முடியாமலிருக்கிறது?

இந்தியாவிலே அதிகப்படியாக பசுப்பாலையே அருந்தும் வழக்கமிருக்கிறது. அவர்கள் இவ்வாறான பால்மாக்களை பயன்படுத்துவது மிகக்குறைவு. அந்த நடைமுறைக்கு நாமும் பழக்கப்பட்டால் பொருளாதார ரீதியிலும் எம்மை வளர்த்துக்கொள்ள முடிவதுடன் வெளிநாட்டு வணிகத்தை நம்பியிருக்க வேண்டிய அவசியமுமில்லை. அத்துடன் எவரினதும் வணிக ரீதியான ஆக்கிரமிப்புக்களுக்குள் அகப்பட வேண்டி வாய்ப்புக்களும் ஏற்படாது.

பதுக்கப்பட்டவைகள், அச்சிடப்பட்ட பழைய விலைகளை தாங்கி, புதிய அதிகரித்த விலையுடன் சந்தைப்படுத்தலுக்கு விடப்பட்டி ருக்கின்றன. குறைந்தது ஒரு மாதம் அந்த உற்பத்திகளை நாம் புறக்கணித்தால் கூட, குறித்த நிறுவனத்துக்கு தகுந்த பாடத்தை புகட்டும் இடத்தில் எம்மை நாமே வைக்க முடியும். நம்மை ஏமாளிகளாக்கும் வியாபார உத்திகளுக்கு சரியான பதிலடி வழங்கி அவர்களுக்கொரு பாடத்தை புகட்ட முடியும்.

ஆனால் அதற்கு நம்மில் யாரும் தயாரில்லை என்பதும் கசப்பான உண்மையே.

கொண்டாட்ட காலம் அல்லவே இது. கொரோனாக்காலம்.

பேரிடர் காலத்திலும் மனிதத்தைத் தொலைத்து வியாபாரத்தில் ஈடுபடும் அனைவரும் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள், அவர்களின் உற்பத்திகள் உட்பட. அதைவிட மிக முக்கியமானது, பால்மாவுக்குப் பதிலாக பசுப்பால் பயன்பாட்டினை மாற்றீடாக கொண்டுவருதல். பசுப்பாலினை விற்பனை செய்யும் நிறுவனங்கள், ஒரு முறையான விற்பனைச் சுற்றுவட்டத்தை கையாள வேண்டியது கட்டாயமானது. வீடு வீடாகச் சென்று பாலினை விற்பனை செய்பவர்கள் சரியான முறையில் காலதாமதமின்றி குறித்த விநியோகத்தை நேர்சீராக மேற்கொள்ளவேண்டும். அதன் பேறாகவே இந்த மாற்றீட்டுத் தொழிற்பாட்டில் வெற்றிகாண முடியும்.

இன்று நேரத்தை விட வேகமாக மனிதர்கள், சுழன்று கொண்டிருக்கையில், நேரத்தை தாமதமாக்கும் செயற்பாடுகளை எவரும் விரும்பமாட்டார்கள் . எனவே காலத்துக்கு ஏற்றாற்போல் உள்நாட்டு பால் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தி நடவடிக்கைகளையும், சந்தைப்படுத்தலையும் சரிவரச் செய்தல் வேண்டும். அதன்மூலமாக நாம் இலக்கை அடைய முடியும்.

எமது இலக்கு பாரதூரமானதாக இருந்தால் நாம் பன்மடங்கு அர்ப்பணிப்போடு தொழிற்பட வேண்டும். அவ்வாறு தொழிற்படும் பட்சம் இலக்கு எமக்கானதாகும்.

எத்தனையோ இழப்புக்களையும் ,வலிகளையும் அனுபவித்து கடந்து வந்த எமக்கு, பால்மாவுக்கு பதிலீடாக பசுப்பால் நுகர்வை பரவலடைய வைப்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல.

ஆனால் எம்மால் முடியுமா? என்ற தயக்கமே இப்போது நமக்கு முன்னுள்ள பெரும் தடை. முடியும் என்ற ஓர்மத்தோடு இறங்கினால் எல்லாமே சாத்தியமே.



# கார்த்திகை கண மழையும் வாழை அழிவை தடுத்தலும்

## விதானையார் வீட்டு முற்றம்



வடகோவை வரதராஜன்

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பது ஞாபகம்வர சைக்கிளை எடுத்துக்கொண்டு செல்லையா அண்ணர் வீட்டுக்குப் போனேன். பர்வதம் மாமிதான் வரவேற்றார். காலையிலே மஞ்சள் பூசி , குளித்து முழுகி, கோடாலி முடிச்சுக் கொண்டை போட்டிருந்தார் .

“செல்லையா அண்ணை இல்லையோ?”

“தோட்டம் போட்டார்”

“எந்தத் தோட்டம் ? யங்கப்பனோ ?”

“ஓமோம் அங்கைதான் “

“அப்ப நான் அங்கை போய்ச் சந்திக்கிறன்”

“தேத்தண்ணி குடிச்சிட்டு போகலாமே “

“ நான் வேறை ஒரு இடத்துக்கும் போக வேணும். அதுக்கிடையில் அண்ணையை ஒருக்காச் சந்திப்பம் எண்டு வந்தன் . நேரம் போட்டுது”

“நான் ‘டக்கெண்டு’ ஊத்திப் போடுவன் “

“மினக்கடேலாது .பேந்து ஒருநாளைக்கு குடிப்பம் “

“அப்ப நான் தோட்டத்துக்கு கொண்டுவாறன் “

நான் யங்கப்பன் தோட்டத்துக்கு சைக்கிளை விட்டேன் .வெள்ளம் வடிந்து , வண்டல் சேறு வழுக்கியது. செல்லையா அண்ணையின் வாழைகள் எல்லாம் முறிந்தும் அடியோடு புரண்டும் கிடந்தன .

செல்லையா அண்ணை நாடிக்கு கையை கொடுத்தபடி வரப்பில் குந்தி இருந்தார் .

என்னைக்கண்டதும்,

“வா ! வா ! நாசமறுந்த மழை செய்த வேலையைப் பார் “ என்று சுரத்தில்லாமல் வரவேற்றார் .

இதற்கிடையில் பர்வதம் மாமி இரண்டு சுடுநீர்ப் போத்தல்களில் தேநீர் கொண்டு வந்தார்

“என்ன ரெண்டு போத்தில்லை கொண்டு வாறீர் ?” என்றார் செல்லையர்.

“ஒண்டு உங்களுக்கு .மற்றது விதானையாருக்கு .உங்களுக்கு சீனி சொண்டிலை பாணியாய் ஒட்டவேணும் .விதானையாருக்கு சீனி அதிகம் பிடிக்காது “

“ உமக்கு உதெல்லாம் என்னண்டு தெரியும்?”

“எல்லாம் உங்கடை மருமோள் சொன்னதுதான் “

“ அப்ப கோயிலுக்கெண்டு போய் உதுதான் கதைக்கிறனீங்களே? சரி சரி .தம்பிக்கு தண்ணியை வாத்துக் குடும் .காத்து இப்பிடி அட்டூழியம் பண்ணிப்போட்டுதே “ என்று திருப்பவும் அங்கலாய்த்தார் செல்லையர்.

“ அண்ணை ! இப்படி நாடிக்கு கை குடுத்துக் கொண்டிருக்கிறத்தை விட்டிட்டு எழும்பி நடக்கிற அலுவலைப் பாருங்கோ “

“ அப்பிடிச் சொல்லுங்கோ விதானையார்” என்றார் பர்வதம் மாமி .

“ அண்ணை எழும்பி வாழைக்குத்தியளை எல்லாம் ‘சல்லரிஞ்சு’ போடுங்கோ. மூன்று மாதத்திலை எல்லாம் உக்கிப் போடும். வாழையிலையையும் முறிஞ்ச குலையளையும் வெட்டி ஒரு ஓரமாய் வையுங்கோ .ஆரும் ஆடுமாடுகளுக்கு கொண்டுபோய்ப் போடுவினம் .”

“ அதுதானே உப்பிடியே இருந்தால் சரியே? போனது போகட்டும் .இனி நடக்கிறதை எல்லோ பாக்கவேணும் “ என்று ஆமோதித்தார் பர்வதம் மாமி.

“ ச்சீ! என்னமாதிரி தார்பாஞ்ச குலைகள். அவவளவையும் மழை நாசமாக்கிப் போட்டுதே “

“இப்பகவலைப்பட்டுஎன்னபிரயோசனம்அண்ணை? வெள்ளம் வரமுன்னமெல்லோ அணை கட்டி இருக்கவேணும் “

“ நீ இப்ப என்ன சொல்லுறாய்? “

“ புயல் வரப்போகுது எண்டு அறிவித்தல் வந்ததும் நீங்கள் வாழையிலையளை வெட்டி, பாரத்தைக் குறைச்சு விட்டிருக்க வேணுமெல்லே .யாழ்ப்பாணத்துக்கு வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றாலை வாற மழை குறைவு அண்ணை . இப்படித் தாழமுக்கம் வந்து அதாலை வாற சூறாவளியாலை வாற மழைதான் எங்களுக்கு கிடைக்கிற மாரிமழை. ஒவ்வொரு வருசமும் நவம்பர் மாதத்திலை தாழமுக்கம் வரும். புயல் வரும். வாழையை முறிக்கும். இதுகளிலை இருந்து நாங்கள் பாடம் படிச்சு வெல்ல வேணும். நான் வாழைத்தோட்டம் செய்யேக்கை, தாழமுக்கம் உருவாகுது எண்டு றேடியோவிலை சொன்னதும்தான் தாமதம் கொக்கைத் தடியோடை தோட்டத்திலை நிப்பன். வாழை இலையளை வெட்டி மரத்தின்ரை பாரத்தைக் குறைப்பன் .”

“ இலையளை வெட்டினால் காய் பெருக்காதெல்லே “

“காய் பெருக்காதுதான் . ஆனால் எல்லாருக்கும் வாழையள் முறிஞ்சு , வாழைக் குலைக்குத் தட்டுப்பாடான காலத்திலை நான் இந்த நராங்கல் வாழைக்குலையை கிலோ 80 ரூபா படி விப்பன் . எல்லாரும் சூறாவளி அடிச்சு நட்டத்திலை இருக்கேக்கைதான் எனக்கு வாழையாலை வருமானம் வாறது. கொஞ்சம் முன் யோசனையுடன் கஷ்டப்பட வேணுமண்ணை . கஸ்டப்பட்டால்தான் காசு .”

“அப்ப என்ன செய்ய வேணுமெண்டுறாய்? “

“ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு வாழைத் தோட்டத்திலை மண்வெட்டி படப்படாது . குட்டி கிளப்பிறது , மட்டம் தடுக்கிறது, கொத்திறது, குழைதாக்கிறது எதுவுமே செய்யக்கூடாது. இவையளாலை வேர் அறுந்து , மரத்தின்ரை பிடிமானம் குறைஞ்சுபோம் . இவையள் எல்லாத்தையும் மார்கழித் தொடக்கதிலை அல்லது தை மாதத்திலைதான் செய்ய வேணும் . ‘தைக் கொத்து தாய்க் கொத்து’ எண்டு சொல்லுறதண்ணை .”

“நல்ல பழமொழீ எல்லாம் சொல்லுறீங்கள்” என்றா பர்வதம் மாமி

“ ஆறு கொத்து , நூறு இறைப்பு வாழை’ எண்டதைக் கேள்விப்பட்டிருக்கிறியளே ? இப்பிடி செய்தாத்தான் வாழை வாழையாய் இருக்கும் அண்ணை . வாழை சுகமான பயிர் எண்டு நினைக்கப்பிடாது.

‘வாழை வாழ வைக்கும்’ எண்ட பழமொழி சரி வரவேணுமெண்டால் , வாழைக்குள்ள ஒவ்வொரு நாளும் வேலை செய்ய வேணும் .”

“காத்தடிக்கேக்கை என்ன செய்ய வேணுமெண்டதைச் சொல்லன்” என்ற செல்லையா அண்ணை பர்வதம் மாமியைப் பார்த்து “நீர் போய்ச் சமையலைப் பாருமன்” என்றார். பர்வதம் மாமி “நானும் விதானையார் சொல்லுறதை நிண்டு கேட்பம்” என்றார்.

“காத்து அடிக்கப்போகுது எண்டு கேள்விப் பட்டதும் , எல்லா வாழைமரத்திலையும் கீழ இருக்கிற ஐந்து இலைகளையும் அடியோடை அறுத்து விடவேணும் . அடித் தண்டோடை இருக்கிற ஒவ்வொரு பெரிய வாழை இலையும் நாலு கிலோ வருமண்ணை . அதுகளை வெட்டி விட்டால் இப்போ 20 கிலோ குறைஞ்சிடும் .

குலை போட்ட வாழைமரத்திலை மேலை நாலு இலையை மாத்திரம் விட்டுட்டு மிச்சம் எல்லாத்தையும் அடியொட்ட வெட்டி விடவேணும் . மேலை இருக்கிற நாலு இலையளையும் கீழ் அரைவாசி இருக்கத்தக்கதாக மேல் அரைவாசியை வெட்டி விட வேண்டும். குலை போடாத வாழை எண்டால் கீழ் ஐந்து இலையளையும் அடியோடை வெட்டிப்போட்டு , மிச்ச இலையளை கீழ் பகுதி இருக்க அரைவாசியாய் மேலை வெட்டி விட வேணும் . இப்படி செய்தால் மரத்தின்ரை பாரம் நல்லாக் குறையும் .

அதோடை இலைகள் காத்தைத் தடுத்து அதோடை மல்லுக்கட்டாமல் இருக்கிறதாலை காத்து எதிர்க்காமல் கடந்து போகும் .

நல்ல பாரமான குலையளுக்கு ரெண்டு காட்டுத்தடியை எடுத்து எக்ஸ் (x)மாதிரி கட்டி மிண்டு குடுக்க வேணும் .

இப்பிடி செய்தால் உங்கடை வாழையள் எழுவது வீதம் தப்புமண்ணை “

“அடுத்தமுறை நீ சொன்ன மாதிரித்தான் செய்ய வேணும் “ என்றார் செல்லையா அண்ணை .


“ சரி நான் வேறை ஒரு இடம் போக வேணும் . வாறன் அண்ணை “ என்றவாறு சைக்கிளை எடுத்தேன் .

“ சரி நீ போட்டு வா .நான் உதிலை சின்னத்துரையிட்டை ஒருக்கா போட்டுவாறன்” என எழுந்தார் செல்லையா அண்ணார் .

இதைக் கேட்ட்தும் பர்வதம் மாமியின் கண்களில் அனல் பறந்தது .

“ அங்கை போட்டு , அந்த புளிச்சல் நாத்தத் தோடை , எனக்கு கிட்டவரவேண்டாம்” என்று அடிக் குரலில் உறுமினார் .

அந்தக் காதல் சிட்டுக்களின் கதைகள் என் காதில் விழாத மாதிரி சைக்கிளை ஊன்றி மிதித்தேன்.



**நவம்பர் மாதத்திலை தாழமுக்கம் வரும். புயல் வரும். வாழையை முறிக்கும். இதுகளிலை இருந்து நாங்கள் பாடம் படிக்க வெல்லே வேணும். நான் வாழைத்தோட்டம் செய்யேக்கை, தாழமுக்கம் உருவாகுது எண்டு றேடியோவிலை சொன்னதும்தான் தாமதம் கொக்கைத் தடியோடை தோட்டத்திலை நிப்பன்.**





# எங்கே போனாள் உயிருள்ள பொம்மை?

## திக்...திக் ..அவுஸ்ரேலியா தீபாவளியானது!!....

ம.தெய்வீகன்

அவுஸ்திரேலியாவை கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக உறையவைத்திருந்த மர்மம் துலங்கியிருக்கிறது. இந்தச் சம்பவத்தை "அவுஸ்திரேலிய தீபாவளி" என்று சொன்னால்கூட தவறில்லை.


**2021 ஒக்ரோபர் 16 ஆம் திகதி.**

மேற்கு அவுஸ்திரேலியாவின் ப்லோவ் ஹோல்ஸ்( Blowholes) பகுதியில் சூரிய அஸ்தமானம் பார்ப்பதற்காக பெற்றோருடன் சென்றிருந்த நான்கு வயதுச் சிறுமியான கிளியோ ஸ்மித்தை, அடுத்தநாள் எழுந்து பார்த்தபோது காணவில்லை. பதறியடித்துக்கொண்டு தாங்கள் தூங்கிய கூடாரத்தின் சுற்றுவட்டாரமெங்கும் தேடிய பெற்றோர், அலுத்துப்போய் பொலிஸிடம் முறையிட்டார்கள்.

### தேடல் தொடங்கியது

கூடாரத்தில் படுத்திருந்த சிறுமி, இரவில் எழுந்து தவறுதலாக எங்காவது சென்றிருப்பாள் என்று தேடத்தொடங்கிய பொலிஸாருக்கு, மதியமானபோதுதான் லேசாக வியர்க்கத் தொடங்கியது. விஷயம் கொஞ்சம் விபரீதமாகத் தெரிவதைப் புரிந்துகொண்டார்கள். உடனடியாக மேலதிக பொலிஸாரை அழைத்தார்கள். ட்ரோன்கள், ஹெலிகொப்டர்களின் உதவியோடு தேடுதலை நீட்டினார்கள். இரண்டாவது நாளும் தேடுதல் நீண்டபோது, சிறுமி தொலைந்த செய்தி கிட்டத்தட்ட அவுஸ்திரேலிய ஊடகங்கள் அனைத்தினதும் காதுகளில் எட்டிவிட்டது.

சிறுமியின் பெற்றோர் ஊடகங்களின் முன்னால் வந்து கண்ணீர் மல்கப் பேட்டி கொடுத்தார்கள். தங்களது மகள் கடைசியாக அணிந்திருந்த ஆடை நிறத்தையும் அவளது படத்தையும் காண்பித்து, எப்படியாவது கண்டுபிடித்துத் தருமாறு இறைஞ்சினார்கள். அவுஸ்திரேலிய ஊடகங்கள் அனைத்திலும் சிறுமி தலைப்புச்செய்தியானாள். புன்னகை வழியும் சிறுமியின் படங்கள் மேற்கு அவுஸ்திரேலியாவின் குச்சொழுங்கை குறுக்குப்பாதை என்று எல்லா இடங்களிலும் "காணவில்லை" என்ற ஒற்றைத்துயரத்தோடு தொங்கின.






### முன்னேற்றமில்லை

மக்கள் தமக்குத் தெரிந்த தகவல்கள் அனைத்தையும் பொலிஸிடம் ஒப்புவித்தார்கள். பொலிஸாரும் தடயவியல் நிபுணர்களும் இணைந்து கிளியோ ஸ்மித் பயன்படுத்திய பொருட்களை வைத்து வெற்றிலையில் மைபோட்டு தேடிக்கொண்டிருந்தார்களே தவிர, எந்த முன்னேற்றமும் தெரியவில்லை.

இரண்டு வாரங்கள் கடந்தன.

மேற்கு அவுஸ்திரேலியாவை மாத்திரமில்லாமல் சிறுமி கிளியோ ஸ்மித் மீண்டுவரவேண்டும் என்று பிரார்த்தித்த எல்லோருக்கும் பதற்றம் அதிகரித்துவிட்டது. ஏனெனில், கூடாரத்திலிருந்து தனியாக எங்காவது சென்று தவறியிருந்தால், இரண்டு வாரங்களுக்கு சிறுமி உணவின்றி தாக்குப்பிடித்திருப்பாளா என்ற சந்தேகம் ஒருபுறம் வலுத்தது. மறுபுறத்தில், யாராவது கடத்திச் சென்றிருந்தால், இரண்டு வாரங்களில், கடத்திய நோக்கத்தை நிறைவேற்றியிருப்பார்களோ என்று பெரும்பீதி நடுங்கவைத்தது. சிறுமி உயிரோடு மீள்வது கடினம் என்பது கிட்டத்தட்ட பலருக்குத் தெரிந்துவிட்டபோதும், வெளியில் சொல்லமுடியாதவர்களாக தேடுதலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். சிறுமியின் புன்னகை படர்ந்த புகைப்படங்களைப் பார்க்கப் பார்க்க மேலும் மேலும் துயர் சூழத் தொடங்கியது.



### பத்து லட்சம் டொலர் சன்மானம்

நாட்கள்தான் கடந்தனவே தவிர, சிறுமி பற்றிய சிறு தகவலைக்கூட யாராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. மேற்கு அவுஸ்திரேலிய பொலிஸை அவுஸ்திரேலிய சமூக வலைத்தள 'பிரிகேடியர்கள்' மற்றும் 'மேஜர் ஜெனரல்கள்' வறுத்தெடுத்தார்கள். "தொப்பியும் தொப்பையும்..ஆக்களைப் பாரு" என்று கிழித்தார்கள். பொலிஸை துவைத்தாவர்கள் அரசாங்கத்தை சும்மா விடுவார்களா? மேற்கு அவுஸ்திரேலிய முதல்வரையும் புடைக்கத் தொடங்கினார்கள்.

ஒக்ரோபர் 21 ஆம் திகதி காலை, ஊடகங்களின் முன்னால் வந்த மேற்கு அவுஸ்திரேலிய முதல்வர் "சிறுமி கிளியோ ஸ்மித் பற்றி தகவல் தருபவர்களுக்கு பத்து லட்சம் டொலர் சன்மானம் தரப்படும்" என்றார்.

### நடுநிசி வேட்டை



20121 நவம்பர் மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை நடுநிசி தாண்டி ஒரு மணி.

மேற்கு அவுஸ்திரேலியாவின் கர்னார்வன் (Carnarvon) பகுதியிலுள்ள வீட்டின் ஜன்னல்களையும் கதவினையும் உடைத்துக்கொண்டு பொலிஸார் உள்ளே பாய்ந்தனர். அங்கு பொம்மைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சிறுமியை பார்த்து, "உங்களது பெயர் என்ன?" என்று மெதுவாக கேட்டது பொலிஸ்.

"எனது பெயர் கிளியோ" என்று படங்களில் தெரிந்த அதே புன்னகையோடு பதிலளித்தாள் அந்தச் சிறுமி.


அவ்வளவுதான், அடுத்தநொடியே அந்த வீட்டிலிருந்த 36 வயது நபரை உடனடியாகவே விலங்கிட்டு, இழுத்துச்சென்றது பொலிஸ்.

சிறுமி தொலைந்த செய்தி போலவே, சிறுமி கிடைத்த செய்தியும் கடந்த ( நவம்பர் 4) புதன்கிழமை காலை அவுஸ்திரேலிய வானில் பட்டாசுகளாக வெடித்தது. முழுத் தேசமும் பெருமூச்சு விட்டது. ஆனந்தக் கண்ணீர் சிந்தியது.

சிறுமி கிளியோ ஸ்மித்தை உடனடியாக பெற்றோரிடம் சேர்ப்பித்து, அவர்களுடன் அவளை வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற பொலிஸார், சிறுமிக்கு உடல் ரீதியாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதிசெய்திருக்கிறார்கள். அவள் மருத்துவமனைக் கட்டிலில் ஐஸ்பழம் வைத்துக்கொண்டு புன்னகைக்கும் புகைப்படத்தையும் பெற்றோரின் அனுமதியுடன் வெளியிட்டு, அவளுக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் பொலிஸார் ஆறுதல் அளித்துள்ளார்கள்.

பதினெட்டு நாள்களுக்குப் பின்னர், கிளியோ தனது பெற்றோருடன் உறங்கினாள். மேற்கு அவுஸ்திரேலிய முதல்வர் கிளியோவின் வீட்டுக்குச் சென்று அவளுக்கு 'பாபி டோல் 'பரிசளித்திருக்கிறார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



# அல்ஜீரியா

ஆபிரிக்காவின் மிகப்பெரிய நாடாகவும், உலகின் 10வது மிகப்பெரிய நாடாகவும் அல்ஜீரியா உள்ளது.
அந்நாட்டின் பரப்பளவில் 5ல் 4 பங்கு பாலைவனமாக உள்ளது.
அல்ஜீரியாவின் மொத்தமுள்ள நிலப்பகுதியில், சுமார் 12 சதவீத இடத்தில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். நவம்பர் முதலாம் திகதி அல்ஜீரியாவில் தேசிய புரட்சி நாளாக கொண்டாடப்படுகிறது.
யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட 7 பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் அல்ஜீரியாவில் உள்ளன. 2019ஆம் ஆண்டில் மலேரியா இல்லாத நாடாக அல்ஜீரியா அறிவிக்கப்பட்டது. காற்பந்தில் சிறந்து விளங்கும் அல்ஜீரியா, ஆப்பிரிக்க கோப்பையை 2 முறை வென்றுள்ளது. அல்ஜீரிய மக்களில் 99 சதவீதம் பேர் முஸ்லிம்களாவர்.
எண்ணெய் வளமிக்க நாடான அல்ஜீரியா, மற்ற நாடுகளிடம் இருந்து கடன் வாங்காத நாடாக உள்ளது. அல்ஜீரிய மக்களுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.



## வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



## தீபாவளி பரவசம்

பட்பட படவென பட்டாசு!
சடசட சடவென சரவெடிதான்!
டமடம டமடம டம் டமால்!
கடகட கடகட வென வெடிச்சிரிப்பு!

பாம்பு வெடிகள் சீறுது பார்!
புஸ் வாணம் பூவாய் சிரிக்குது பார்!
பூவாய்ச் சிரிக்குது மத்தாப்பு!
பம்பரம்போலச் சக்கரங்கள்!

பாதுகாப்பு மிகத் தேவை!
பத்திரமாக வெடித்திடுவாய்!
வாளியில் நீரை நிரப்பிக்கொள்!
காலில் செருப்பைப் போட்டுக்கொள்!

தீபா வளிக்குப் புத்தாடை
தீபா அணிந்தாள் சித்தாடை!
நெற்றிச் சுட்டி ஜிமிக்கியுடன்
நெருங்கிச் சிரித்தாள் என் தங்கை!


தீபா வளிநாள் பரவசந்தான்!
ஜாமூன் லட்டு அதிரசந்தான்!
அல்வா முந்திரி பழக்கேக்கு!
ஆசைத்தம்பி பல கேட்பான்!

## பொது அறிவு

1. உலகில் மிகச் சிறிய முட்டையிடும் பறவை எது ?
தேன்சிட்டு
2. கறையான் அரிக்காத மரம் எது?
தேக்கு
3. இந்தியாவின் தேசிய விலங்கு எது?
புலி
4. நீந்தத் தெரியாத விலங்கு எது ?
ஒட்டகம்
5. மனித உடலில் வியர்க்காத பகுதி எது?
உதடு
6. பறக்கும் இயல்புள்ள முலையூட்டி எது?
வௌவால்
7. வானொலியை கண்டுபிடித்தவர் யார்?
மார்க்கோனி
8. இயற்கை ஒளி முதல் எது?
சூரியன்
9. மிகச் சிறிய இதயம் உடைய விலங்கு எது?
சிங்கம்
10. மிக வேகமாக வளரும் புல்லினம் எது?
மூங்கில்



**உ.ஆராதனா**, தரம்3
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை




## மங்குஸ்தான் மரம்

நான் தான் மங்குஸ்தான் மரம் பேசுகிறேன். எனது தாவரவியல் பெயர் கர்சினியா மங்கோஸ்டினா என்பதாகும். நான் குளுசியாசியே குடும்பத்தைச் சேர்ந்தவள். நான் மலைப் பகுதிகளில் அதிகம் விளைவேன். இந்தியா, மலேசியா, இந்தோனேஷியா, மியான்மர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் என்னை விரும்பி வளர்த்து பயன்கள் பல பெறுகிறார்கள்.
என் பழத்தில் உங்கள் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து சத்துக்களும் உண்டு.
உங்கள் உடல் சூட்டை தணித்து தேகத்தை சமநிலையில் வைத்திருக்க நான் உதவுவேன். என் பழத்திலும் உங்கள் நோய்களைத் தீர்க்கும் அரும்பெரும் குணங்கள் உண்டு. என் பழத்தின் தோற்றம் மாதுளம் பழம் போன்றே இருக்கும். என் பழத்தின் தோல் பகுதியை உடைத்தால் மூன்று அல்லது நான்கு சுளைகள் இருக்கும்.
விவசாயிகள் தென்னைக்கு ஊடுபயிராக என்னையும் நட்டு வளர்த்து வந்தால் பயன்கள் பல கொடுப்பேன்.

## சிறுவர் கைவண்ணம்





**ச.சஜிதன்,**
தரம்: 3,
மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்



**டி.துஷானா,**
தரம்: 6,
யாழ் / இந்து மகளிர் கல்லூரி




**A.நிதுசனா,**
தரம்: 5,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.




**வ.ஜானுஷா,**
தரம்: 4,
யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.



**J.L.நிஷாரா,**
தரம்: 5B,
ஏஞ்சல் இன்ரநெஷனல் பாடசாலை.



**பி.திவ்யாஞ்சலீன்,**
தரம்: 1D,
சென்.ஜோன்ஸ், பொஸ்கோ வித்தியாலயம்.



**யாஷிகா,**
தரம்: 1,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.



# பிடிப்பும் பீடிப்பும்

சிவபெருமான்

முகக்கவசம் அணிந்தபடி ஒரு போக்குவரத்துப் பொலிஸ்காரன் மருத்துவமனையில் மருத்துவரிடம் காட்டுவதற்காக காத்திருக்கிறான். அங்குள்ள பெண் மருத்துவரிடம் தொற்றுநோய் விடுதியிலிருந்து ஒரு நோயாளியின் நோய் விபரக் கோவையை ஒரு உதவியாளன் கொடுக்கும் போது அந்த பெண் மருத்துவர், அதனை மேசையில் வைக்கும்படி சைகை காட்டுகிறார். அந்த பெண் மருத்துவர் அக்கோப்பினைத் தான் தனது கையால் திறக்காது அங்கு நின்ற ஒரு தாதியிடம் நோய் விபரக் கோவையைத் திறந்து பக்கங்களைப் புரட்டுமாறு கேட்கிறார். அந்த மருத்துவர் தனக்கு மட்டும் கொரோனா தொற்றிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்.
இந்த சம்பவத்தைக் கண்ட போக்குவரத்துப் பொலிஸ் கொரோனாத் தொற்று தொடர்பாக அதிகம் பயப்படுகிறான் குழம்புகிறான் மருத்துவர் செய்வது பிழை என்று எண்ணுகிறான். நேர்மையாக வாழ்வதா அல்லது மற்றவர் போல் எப்படியும் வாழலாம் என்று வாழ்வதா என மனச்சஞ்சலம் அடைந்தான். அவனுக்கு நேர்மை என்றால் என்னவென்று அல்லாட்டம் தொடங்கியது. நேர்மையாக வாழ்ந்ததன் விளைவுகள் அவனை துன்புறுத்தின.
மேலுள்ள நிகழ்வு இத்துடன் நிற்க.
அந்தப் போக்குவரத்துப் பொலிஸ்காரனும் இன்னுமொரு பொலிஸ்காரனும் வீதியில் நிற்கின்றனர். ஊரடங்கால் வீதியெங்கெணும் வெறிச்சோடிப் போய்க் கிடக்கிறது. ஆங்காங்கே அனுமதியோடு ஆட்கள் போய்வருகின்றனர். இந்தப் பொலிஸ்காரன் இலஞ்சம் வாங்கக்கூடாது என்ற சத்தியத்தோடு இருந்தவன். அதனால் உளநலம் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை பெறுமளவிற்கு அவர் வந்திருந்தான். இன்று அவன் மற்றவனைப்போல வாழ வெறிச்சோடிப்போன அந்த வீதியில் முதன் முதலாக இலஞ்சம் வாங்குவது என்ற புதிய முயற்சியோடு காத்திருக்கிறான் எனினும் மனம் குழம்பிக்கொண்டிருக்கிறது. மற்றப் பொலிஸ்காரன் இந்தப் பொலிஸ்காரனை ஆச்சரியத்தோடு பார்க்கிறான். இவ்வளவு காலமும் இலஞ்சம் வாங்காததால் பெரும் இன்னல்களை எதிர்கொண்டவன் இன்று புதிய முடிவோடு நிற்பதனால் மற்றப் பொலிஸ்காரனுக்கு இவன் ஆச்சரியம். இந்தப் பொலிஸ்காரன் வீதியில் போய் வரும் ஆட்களிடம் குறிப்பாக யாரிடம் லஞ்சம் பெறவேண்டும் என்பது ஏற்கனவே மற்றப் பொலிஸ்காரர்கள் இலஞ்சம் வாங்கிய முறையிலிருந்து நன்கு விளங்கி வைத்திருந்தான். அதன்படி எம் டி 90 மோட்டார் சைக்கிளில் வருபவர்கள், மரவள்ளிக்கிழங்கு, வாழைக்குலை மற்றும் மரக்கறிகொண்டு செல்வோர் மற்றும் சாரம், வேட்டி கட்டியவர்கள் சிவப்பு, கறுப்பு உடுப்பு போட்ட இளைஞர்கள் தூரத்தே பொலிசைக் கண்டு பயப்படுபவர்கள், மேசன் வேலை, தச்சுவேலை ஆயுதங்களுடன் வருபவர்கள், தலைக்கவசம் அணியாதவர்கள் என்போர் இதனுள் அடங்குவதோடு இப்போது முகக் கவசம் அணியாதவர்களும் என பட்டியல் நீண்டது.
அந்தப் பொலிஸ்காரனும் மற்றப்பொலிஸ்காரனும் சட்டத்தை நிலைநாட்டுவதற்காகவும், இலஞ்சத்தை வாங்குவதற்காகவும் பொருத்தமான தகுதியான ஆட்களை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.
நடுத்தர வயது குடும்பப் பெண் சட்டத்தின் பெயரில் வீதித் தடைபகுதியில் மறிக்கப்படுகிறாள். அவள் கிளினிக் கொப்பியை காட்ட செல்ல அனுமதிக்கப்படுகிறாள். அதன் பின்னர் பத்துப்பேர் அவ்வழியால் சென்றனர். அவர்களில் மூன்று பேர் கிளினிக் கொப்பி காட்டினர். இரண்டு பேர் போக்குவரத்துப் பாஸ் காட்டினர், மருத்துவத் தாதி, மருத்துவர், பாண் வாகனக்காரன். மரக்கறி வாகனக்காரன், ஒரு பப்பாசிப்பழம் விற்பவர் போன்றோர் போயினர். இந்தப் பப்பாசிப்பழம் விற்பவர் நல்ல வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார்.
இலஞ்சம் வாங்குவதற்கு ஏற்ற எவரும் இன்னமும் வரவில்லை. ஒரு அம்புலன்ஸ் வண்டி வேகமாகச் செல்கிறது. அந்த வெள்ளை வேட்டிப் பப்பாசிப்பழம் விற்பவரும் மறு திசைக்குச் திரும்பிச் செல்கிறார். பொலிஸ் உயர் அதிகாரிகளின் வாகனம் வருகிறது. இருவரும் சலூட் அடிக்கின்றனர்.
முதல் முதல் கையூட்டுப் பெறும் அந்தக் கைங்கரியம் இந்தப் பிரதான வீதியில் சாத்தியமாகாதது மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட அந்த பொலிஸ் அதிகாரிக்கு மேலும் மனப்பதற்றத்தை அதிகரித்தது. தான் காலையில் எடுக்க வேண்டிய குளிசையை மறந்து விட்டதையும் அத்தருணத்தில் அவன் உணர்ந்தான். இருவரும் அவ்விடத்தைவிட்டு விலகி ஊரின் உள் ஒழுங்கையினுள் இறங்கினர் அங்கு அவர்களுக்கு அதிர்ஷ்டம் காத்திருந்தது. முகக் கவசத்தை கீழே இழுத்துத் தாடையில் விட்டபடி சைக்கிளில் வந்த ஒருவர் பொலிஸ்காரரைக் கண்டதும் முகக்கவசத்தை மேலே இழுத்து விட்டபடி ஃசைக்கிளால் இறங்கினர். அந்தப் பொலிஸ்காரன்
"எங்களைக் கண்டதும் ஏன் மாஸ்க் ஐ மேலே இழுத்துவிட்டது? "
"அல்லாட்டி நீங்கள் பிடிச்சுப் போடுவீங்கள்"
"ஏன் மாஸ்க் போடுறது? " "பொலிஸ் உம் பி.எச்.ஐஉம் பிடிக்காம இருக்க" "ஊசி போட்டதா?", "இல்லை ஐயா", "ஏன் போடயில்லை?", வெட்கப்படுகிறார், "ஏன் போடயில்லை?", "மலட்டுத்தன்மை வருமையா!"
அந்தப் பொலிஸ்காரன் மற்றவனிடம் தண்டம் அறவிடும் புத்தகத்தில் எழுதும்படி சொல்ல மற்றவர் எழுதுவது போல் பாவனை பண்ணுகிறான். அந்தச் சைக்கிளில் வந்த நபர் அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடினார். இறுதியில் அந்தச் சைக்கிள்காரன் வைத்திருந்த 235.50 சதத்தில் இருநூறு ரூபாயைத் தன் வாழ்நாளில் முதல் முறையாகத் தனது குடும்ப நலனிற்காகவும் நாட்டின் நலனிற்காகவும் (அந்தச் சைக்கிள்காரன் இனிமாஸ்க் அணியாதுவரமாட்டான்) இலஞ்சமாகப் பெற்ற பொழுது வானில் உள்ள சூரியனை முகில்கள் மறைத்து மிகவும் குளிர்மையான ஒரு சூழல் தோற்றுவிக்கப்பட்டு மழை கூட வரும் போல் எங்கும் பசுமையும், குளிர்மையும் தெரிந்தது.
செய்திப் பத்திரிகை ஒன்றைக் கையில் வைத்தபடி முகக்கவசம் அணிந்து வந்து கொண்டிருந்த ஒருவரை அந்த பொலிஸ்காரன் மறித்து ஊரடங்கு நேரத்தில் வெளியில் செல்லக்கூடாது என்று பேசினான். மற்றப் பொலிஸ்காரனுக்குப் பத்திரிகைச் செய்தி அறிய விருப்பமாக இருந்தது. அதனால் பத்திரிகையைத் திறந்து முகப்புச் செய்தியைக் காட்டி வாசிக்கும்படி கூறினான். அந்த நேரத்தில் துரதிர்ஷ்டவசமாகப் பப்பாசிப்பழம் விற்பனை செய்பவன் ஒரு பப்பாசிப்பழம் கூட விற்பனை செய்யாத நிலையில் அந்த ஒழுங்கையால் கடந்து சென்றதை அந்தப் பொலிஸ்காரன் கவனித்தான். பத்திரிகைச் செய்தியில் தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வீதியோர வியாபாரத்திற்கு வந்தவர்களில் ஏழு பேருக்குக் கொரோனா தொற்று என்றும் அதில் ஒருவர் மர்மமாகத் தப்பியோடி விட்டார் என்ற செய்தியும் வாசிக்கப்பட்டது. பத்திரிகைக்காரன் போய்விட்டான்.
முகக்கவசம் அணியாது வந்த ஒரு குமர்ப் பிள்ளையை

சஞ்சீவி
சிறுகதை

மற்றப் பொலிஸ்காரன் மறித்து ஓரமாக நிறுத்தி ஊரடங்கின் சிறப்புப் பற்றியும், சட்டத்தின் ஒழுங்கு பற்றியும் பேசத் தொடங்கி அவளது பெயர், குடும்ப விபரம், காதல் விபரம் எனப் பலவிடயங்கள் அவளிடம் வினவினான். அவன் அவளுடனேயே நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு காசு பெரிதில்லை அவளது கன்னிக் கதைதான் பெரிதாக இருந்தது. அவள் உள்ளூரப் பயந்து நடுங்குவது கூட அவனுக்குத் தெரியாது. அவளது இளமைப் பொலிவுமட்டுமே தெரிந்தது. அவளது கைத்தொலைபேசி இலக்கத்தைத் தரும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தான். அவள் கொடுக்கவில்லை எனவே உரையாடல் தொடர்ந்தது.
கறுப்பு உயரமான வயிற்றுப்பகுதி உள் வளைந்த மொட்டைத் தலையுடன் 70 வயதுக்கு மேற்பட்ட மண்நிறச் சாரம் மடித்துக் கட்டிய தோளில் ஊத்தைத் துவாய் போட்டு அதன்மேல் கோடரி கொழுவிய அத்தோடு அதிசயிக்கும்படி முகத்தில் முகக் கவசத்திற்குப் பதிலாகச் சொப்பிங் பாக்கைக் (Shoppign bag) கட்டிய ஒருவர் வழிமறிக்கப்பட்டார். மற்றப் பொலிஸ்காரனுக்கு ஸ்கூட்டியில் வந்த பிள்ளையுடன் கவனமிருக்க இலஞ்சப் பொலிஸ்காரன் (இனி இவரை அப்படி அழைப்போம்.) அந்தக் கோடரிக்காரனைப் பார்த்து ஏதோ வினவ கோடரிக்காரன் முகத்திலணிந்த சொப்பிங் பாக்கை கழற்றி அந்தப் பொலிஸ்காரனுக்கு அருகில் வந்து உரத்துப் பதில் சொல்லி முடிவில் ஒரு இருமலும் இரும இரண்டு பொலிஸ்காரரும் இளம் பெண்ணும் தூர விலகி இடைவெளி காட்டினர்.
அவ்விரு பொலிஸ்காரரும் கோடரிக்காரனை அவ்விடத்தை விட்டு அகலுமாறு கடுமையாகப் பேசினர் அவன் எந்த விதப் பயமும் இன்றி அவ்விடத்தை விட்டுத் தனது வழமையான கெந்தல் நடையோடு சென்றான்.
மற்றப் பொலிஸ்காரன் தன்னிடம் மேலதிகமாக இருந்த முகக்கவசத்தை அந்த இளம் பெண்ணிடம் கொடுத்தான். அவள் வாங்கவில்லை. ஏனெனில் அந்தப் பொலிஸ்காரனின் குரல் தடிமன் கலந்ததாக இருந்தது. தனது அதிகாரத் தோரணையைக் கைவிட்டு மிகவும் கீழிறங்கி கெஞ்சும் குரலில் தொலைபேசி இலக்கத்தைத் தரும்படி கெஞ்சினான். அத்தருணம் பார்த்து அவனது தொலைபேசி மணி ஒலித்தது. அவனது குடும்பத்தார் யாரோ தொலைபேசியில் பேசி இருக்கவேணும். அதன் பின்னர் அவன் மிகப் பதற்றமாகக் காணப்பட்டான். நிச்சயமாக அவனது குடும்பத்தில் ஏதோ பிரச்சினை. அவனுக்கு முகமெல்லாம் வியர்த்திருந்தது. உடனடியாக அந்தக் குமர்ப் பெண்ணைப் போகும் படி கட்டளையிட்டான்.
அவள் பறந்து சென்று மறைந்தாள். அவனுக்கு ஆறுதல் தேவைப்படுவது போல் இருந்தது. இலஞ்சப் பொலிஸ்காரன் இவனது பதற்றத்தைக் கவனித்திருந்தான். ஆனால் அது பற்றி ஒன்றும் அவன் கேட்கவில்லை. மாறாக அந்தப் பப்பாசிப்பழம் விற்பவர் மீண்டும் அவ்வழியால் வருவது அவன் கண்ணில் பட்டது. சந்தேகத்தின் பெயரில் மறித்து அந்த வெள்ளை வேட்டிப் பப்பாசிப் பழக்காரனைப் பார்த்தான். பப்பாசிப்பழக்காரன் பதற்றமின்றி நின்றான். ஆனால் இன்னமும் ஒரு பப்பாசிபழம் கூட விற்காதது இலஞ்சப் பொலிஸ்காரனுக்குச் சந்தேகத்தை வரவழைத்தது. பப்பாசிப்பழப் பெட்டி பரிபூரணமாகச் சோதனை செய்யப்பட்டது. அதனுள்ளே திருமண அழைப்பிதழ்கள் பெயரிடப்பட்டு நிறைய இருந்தன. அங்குமிங்கும் சுற்றியதற்கான காரணம் புரிந்தது. அவர் மிகவும் சண்டை பிடித்தும் கெஞ்சியும் கூடப் பார்த்தார் முடியவில்லை. 2000 ரூபா அந்தப் பொலிசுக்குத் தேறியது.
மற்றப் பொலிஸ்காரன் அவர்களது மோட்டார் சைக்கிளில் தலையைக் குனிந்தபடி குந்திக் கொண்டிருந்தான். அத்தோடு இந்த இடத்தை விட்டுப் போகலாம் என்று இலஞ்சப் பொலிஸ்காரனிடம் கேட்டான். இலஞ்சப் பொலிஸ்காரன் தனக்காகக் கொஞ்சம் பொறுக்கும்படி கூறினான். மற்றப் பொலிஸ்காரன் தனக்குச் சாராயம் குடிக்கவேண்டும் போல இருக்கிறது என்றும் கூறினான். ஆனால் அவர்களுக்கே அது தட்டுப்பாடான காலம்.
தென்பகுதியைச் சார்ந்த ஒரு வீதியோர வியாபாரி ஒரு ஓட்டோவில் உள் ஒழுங்கையால் வந்து மிதக்கிறார். பொலிஸிடம் மாட்டிக் கொள்கிறார். ஓட்டோக்காரன் போக்குவரத்துப் பாஸ் வைத்திருக்கிறான். தென்பகுதி வீதியோர வியாபாரி தடிமன் குரலில் பேசினான். மற்றப் பொலிஸ்காரன் திடீரெனத் தன்னைச் சுதாகரித்துப் பத்திரிகைச் செய்தியில் தப்பியோடிய தென்பகுதி வியாபாரியைக் குறிப்பிட்டு

> இவ்வளவு காலமும் இலஞ்சம் வாங்காததால் பெரும் இன்னல்களை எதிர்கொண்டவன் இன்று புதிய முடிவோடு நிற்பதனால் மற்றப் பொலிஸ்காரனுக்கு இவன் ஆச்சரியம். இந்தப் பொலிஸ்காரன் வீதியில் போய் வரும் ஆட்களிடம் குறிப்பாக யாரிடம் லஞ்சம் பெறவேண்டும் என்பது ஏற்கனவே மற்றப் பொலிஸ்காரர்கள் இலஞ்சம் வாங்கிய முறையிலிருந்து நன்கு விளங்கி வைத்திருந்தான்.

(மறுபக்கம் பார்க்க)

**திடீரென "ஐயா" இரண்டு பொலிசாரும் திரும்பிப் பார்க்கின்றனர். பாதிச் சோடாப் போத்தில்காரன் தனது இரண்டு கைகளிலும் சோடாப் போத்தல்கள் நிரம்பிய கள்ளு டன் பொலிசாரைப் பார்த்துச் சிரித்தபடி நின்றிருந்தான். "ஐயா உங்களுக்கு கள்ளு கொண்டந்திட்டன். இனி உங்களுக்கு ஒரு கவலையும் இல்லை."**

இவர்களை பி.எச்.ஐ க்கு அறிவித்துப் பிடித்துக் கொடுக்கலாம் என்று சொன்னான். அந்தத் தென்பகுதி வியாபாரி பொக்கற்றில் கைவைத்து இழுத்தபோது வந்த ஒரு தொகைக் காசில் 1000ரூபாத் தாள்கள் , 500ரூபாத் தாள்கள், 100ரூபாத் தாள்கள் தெரிந்தன. அப்படியே அந்தக் காசை வாங்கிவிட்டு அவர்களைப் போகவிட்டான். மற்றப் பொலிஸ்காரன் இவனைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினான். பழையபடி தனது தொலைபேசி அழைப்புப் பிரச்சினையால் மனம் சோர்ந்து காணப்பட்டான். இலஞ்சப் பொலிஸ்காரன் கடைசியாய்ப் பெற்ற மொத்ததொகை 8050 ரூபா மற்றப் பொலிஸ்காரன் தென்பகுதி வியாபாரியிடம் வாங்கிய காசில் கொரோனா கிருமி இருக்குமென்று எச்சரிக்கின்றான். இலஞ்சப் பொலிஸ்காரன் மற்றவனை ஆறுதல்படுத்துவதற்காக இந்த எல்லாக் காசையுமே இரவு உடுப்பு மினுக்கும் அயன் பொக்ஸால் (மின்னழுத்தி) அயன் பண்ணினால் எல்லாகக் கிருமியும் செத்துவிடும் என்று கூறினான். எனினும் மற்றப் பொலிஸ்காரனின் மனநிலையில் மாற்றம் இல்லை.

எனவே இரு பொலிஸாரும் பனங்கூடல் கொண்ட தோட்டங்கள் செய்கின்ற ஒரு கிராமப் பகுதியில் சென்று நிற்கின்றனர். எங்கேயோ கொடுத்த நிவாரணப் பொருட்களைக் கொண்டு வீதியால் வந்த மிகவும் கஸ்டப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் திரும்பிச் செல்ல முயன்ற போது இலஞ்சப் பொலிஸ்காரன் அவர்களைப் பயப்படாது போகுமாறு கூறினான். பற்றைகள் நிரம்பிய பகுதியின் ஒற்றையடிப் பாதையால் திடுமென வீதியில் ஏறிய ஒருவர் இரு பொலிஸார் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டார். 50 வயது மதிக்கத்தக்க செம்பாட்டு மண்ணின் படுகை கலந்த உடுப்பும், உடற்தோற்றமும் கொண்டவராக அவர் இருந்தார். மடித்துக் கட்டியசாரத்தின் கீழ்ப் பகுதியில் ஏதோ ஒன்று பொருமலாக வெளித் தள்ளியபடி இருந்தது. இலஞ்சப் பொலிஸ்காரன் சந்தேகத்தின் பேரில் அவரை அருகே அழைத்தான். சாரத்துக்குள் இருப்பதைக் கேட்டான். அந்த ஒருவரோ வளைந்து, நெளிந்து வெட்கப்பட்டு இறுதியில் பயந்தபடி சாரத்துள் இருந்த இரண்டு லீற்றர் சோடாப் போத்தலின் அரைவாசியாக வெட்டிய கீழ்ப்பகுதியை எடுத்துக் காட்டினான்.

இலஞ்சப் பொலிஸ்: "இது என்ன....?"

"குடிக்கிற குடிக்கிற" என்று அந்த அரைப் பகுதியை குடித்துக் காட்டுவது போல் அவர் பாவனை பண்ணினார். பின்னர் ஒரு பனை மரத்தைக் காட்டி அங்கு கட்டியிருந்த முட்டிகளைச் சுட்டிக் காட்டினார். இலஞ்சப் பொலிஸ்காரனுக்குத் தெளிவாக விளங்கிவிட்டது. குறைந்த பட்சம் மற்ற பொலிஸ்காரனின் தொலைபேசி உரையாடலால் வந்த கவலையை மனப்பதற்றத்தைக் கள்ளுக்குடிப்பதன் மூலமாவது நிவர்த்தி செய்யலாம் என்றெண்ணினான். வந்தவரைக் கைதுசெய்து சிறையில் அடைக்கப் போவதாகக் கூறி வெருட்டி நிலத்தில் இருக்கும் படிகட்டளையிட்டான்.

இலஞ்சப் பொலிஸ்காரன், மற்றப் பொலிஸ்காரனின் அருகில் சென்று இரகசியமான குரலில் இந்தப் பாதிச்சோடாப் போத்தல்காரனை பின் தொடர்ந்து போய்க் கள்ளுக் குடிக்கும் இடத்தைக் கண்டுபிடித்துத் தாமும் குடிக்கலாம் என்று கேட்ட போது மற்றப் பொலிஸ்காரன் அதற்கு மறுத்துவிட்டான். இலஞ்சப் பொலிஸ்காரன் சற்று நேரம் யோசித்த படிநின்றான். அங்கு அமைதி நிலவியது. அந்தப் பாதிச்சோடாப் போத்தல்காரன் இரண்டு பொலிஸ்காரரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இலஞ்சப் பொலிஸ்காரன் மற்றவனிடம் இரகசிய குரலில் கூறியது என்னெவென்று விளங்கிவிட்டது.

இலஞ்சப் பொலிஸ்காரன் கடுமையாக யோசித்தான். பின்னர் திரும்பவும் மற்றப் பொலிஸ்காரனிடம் இரகசியமான குரலில் இலஞ்சமாகப் பெற்ற காசு இன்று தாராளமாக இருக்கின்றதென்றும், இருவரும் பகிர்ந்துஎடுக்கலாம் என்றும், ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை என்றும் கூறினான். அதற்கு மற்றப் பொலிஸ்காரன் இந்த காசு தனக்கு வேண்டாம் என்று கூறினான். அதைக் கேட்டதும், இலஞ்சப் பொலிஸ்காரன் மிகவும் குழம்பினான். அவனுக்கு இயல்பாக இருக்கும் மன அழுத்தம் திரும்பவும் அதிகரிக்கத் தொடங்கியது. இந்த விடயம் தொடர்பாக அதிகம் கற்பனை பண்ணிக் குழம்பினான்.

பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவனாக மற்றப் பொலிஸ்காரனிடம் முன்னர் குமர்ப் பிள்ளையுடன் கதைத்துக் கொண்டிருந்த போது வந்த தொலைபேசி உரையாடலால் அவன் பதற்றப்பட்டுக் கவலையோடு சோர்ந்து போனதற்கான காரணத்தைக் கேட்க மற்றப் பொலிஸ்காரன் சற்று மெளனமாக இருந்தான். மற்ற பொலிஸ்காரன் சிறிது நேரமெளனத்தின் பின்னர் இலஞ்சப் பொலிஸ்காரனை நிமிர்ந்து உற்றுப் பார்த்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. அது கோபம் போலவும், அழுகை போலவும் இருந்தது. ஒருமுறை தனது பல்லை நெருமினான். பின்னர் தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தான். பாதிசோடாப் போத்தல்காரனும் கீழே இருந்த படி மற்ற பொலிஸ்காரன் அழுவதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். மற்றப் பொலிஸ்காரன் தான் அழுவதைப் பாதிச் சோடாப் போத்தல்காரன் பார்ப்பதை உணர்ந்து அவனை நோக்கி அடிப்பதற்காகப் போனபோது இலஞ்சப் பொலிஸ்காரன் வேகமாக அதைத் தடுத்து நிறுத்தி அவனது பிரச்சினையை மீண்டும் கேட்டான். அப்பொழுது தான் அந்த உண்மை வெளியில் வந்தது.

தன்னைக் காதலித்துக் கொண்டிருந்த ஒருத்தி வேறு ஒருத்தனைத் திருமணம் செய்துபோய்விட்டாள் என்ற செய்தி, இங்கு ஒரு குமர்ப்பிள்ளையுடன் தொலைபேசி இலக்கம் கேட்டுக் குலாவிக் கொண்டிருந்த தருணத்தில் அவனது உறவினர் ஒருவரால் தொலைபேசி மூலம் கூறப்பட்டிருந்தது.

பாதிச்சோடாப் போத்தல்காரன் மற்றப் பொலிஸ்காரன் அடிக்க வந்த்தையிட்டுப் பதற்றப்படவில்லை. மாறாக அவனது பரிதாபநிலையைக்கண்டு "ஐயா நீங்கள் என்னோட வாங்கோ உங்களுக்குக் கள்ளு வாங்கித் தரலாம். இல்லாட்டில் நீங்கள் சொல்ற இடத்தில கொண்டு வந்துதாறன் இப்ப என்னோட வாங்கோ" என்றான். இரண்டு பொலிஸ்காரர்களும் தங்கள் கடமைநேரம் முடிந்தபடியாலும் சட்டத்திற்கு தெரியாமல் கள்ளு குடிப்பதற்காகவும் அவனோடு பனங்கூடலை நோக்கி நடந்து செல்கின்றனர். தூரத்தே களவாகக் கள்ளுக்கொடுப்பவனும் கள்ளுக் குடிப்பவர்களும் தெரிகின்றனர்.

அவர்கள் எல்லோரும் பொலிஸ்காரர் வருவதைக் கண்டுவிட்டு தட்டுத் தடுமாறி திசைகெட்டு வழிமாறி ஓடுகின்றனர். பாதிச் சோடாப் போத்தல்காரன் "ஓடாதேங்கோ, ஓடாதேங்கோ இவை உங்களைப் பிடிக்கவரேல்ல. அவையும் எடுக்கத்தான் வருகினம்". தூரத்தே ஓடுகிற ஒருவன் பாதிச் சோடாப் போத்தல்காரனைப் பார்த்து "தேசத்துரோகி...! காட்டிக் குடுக்குறியா நாயே....!!" எல்லோரும் ஓடிவிட்டனர். அவ்விடத்தில் முட்டிகள் உடைந்திருந்தன. கள்ளு மணம் வீசியது. பிளாஸ்டிக் போத்தலில் இருந்தவற்றைக் கொண்டு சென்றுவிட்டனர். கள்ளுப் போத்தல்களுடன் ஓடியவர் எங்காவது ஒன்று, இரண்டு போத்தல்களைக் கீழேபோட்டிருக்கலாம் என்று தேடிக்கொண்டு பனங்கூடலின் கீழேயுள்ள சம்புப் புற்களினூடாக நடந்து சென்று கொண்டிருந்த போது சற்றுத் தொலைவில் சம்புப் புல்லு மறைவிலிருந்து திடீரென எழுந்து கையில் இரண்டு கள்ளுப் போத்தல்கள் சகிதம் ஒருவன் தப்பி ஓடுகிறான். அவனிடம் உரத்தகுரலில் கெஞ்சிக்கேட்டபடி பாதிசோடாப் போத்தல்காரன் பின்தொடர்ந்து வேகமாக ஓடுகிறான். பாதிசோடாப் போத்தல்காரன் "டேய் இரண்டு போத்தல் கள்ளு தாருங்கோடா.ரெண்டு ஐயாமாரும் சரியான கவலையாய் இருக்கினம். தாடா..தாடா.." என்று கூறியபடி ஓடோடென்று ஓடிமறைந்து விடுகிறான். இப்பொழுது இரண்டு பொலிஸ்காரரும் பனங்கூடலின் சம்புப்புல் வெளியின் கீழ் தனித்து நிற்கின்றனர். வந்ததிசையும் சற்று மாறிவிட்டது.

பார்க்கின்றனர், நடக்கின்றனர். தூரத்தே மிகப் பாழடைந்த, ஒரு அளவான வீடு தெரிகிறது, ஆனால் அது ஆட்களே இல்லாத வீடுபோல் தெரிந்தது. அயலில் வேறு வீடுகளும் இல்லை, அந்த வீட்டின் சிதைந்து போன படலையைத் திறந்து உள்ளே செல்கின்றனர். அங்கு சிமெந்துத் திண்ணையில் 80 வயதுக்கும் மேற்பட்ட வெண்தலைமுடியுடன் கூடிய ஒரு மூதாட்டி படுத்திருக்கிறாள். அருகே ஒரு ஊன்றுகோல் கிடக்கின்றது. பக்கத்தில் ஒரு சில்வர் டம்ளர் இருக்கின்றது. பழுதடைந்த முகக்கவசம் இருக்கிறது. அந்த வீட்டைப் பார்த்தால் ஒருகாலத்தில் அளவான சிறப்புகளோடு வாழ்ந்த வீடுபோல் தெரிகிறது. இலஞ்சப் பொலிஸ்காரன் சற்று தூரத்தே நின்று அந்த மூதாட்டியைப் பார்த்து "அம்மா" என்றழைக்க அந்த மூதாட்டி மெதுவாக எழுந்து அந்தப் பொலிஸ்காரர்களைப் பார்த்தாள். அந்த முகக் கவசத்தை எடுத்து அணிந்தாள். வீட்டின் ஓரத்தில் இருந்த மிகவும் மெலிந்து வயிறொட்டிப் போன நாய் ஒன்று அகோரமாக குரைத்துக் கொண்டிருந்தது. அந்த மூதாட்டி எதுவுமே பேசாதிருந்தாள். அந்த இரு பொலிஸாருக்கும் அங்குள்ள சூழல் நன்கு விளங்கிவிட்டது.

மற்றப் பொலிஸ்காரன் "வீட்டுல வேற ஆக்கள் இல்லையா?" வீட்டுக்குள் இருந்து ஒருகுரல் கேட்டது. "அம்மா" இரு பொலிஸாரும் சத்தம் வரும் திசையை நோக்கிச் சற்று நடந்து உள்ளே பார்த்தனர். கிழிந்து போன ஓலைப்பாயின் மேல் உடம்பில் உடுப்புகள் எதுவும் இல்லாதது போலத் தான் தெரிகிறது. நீளமாக தாடி வளர்ந்த நாற்பது, ஐம்பதுவயது மதிக்கத்தக்க ஒருவன் படுத்திருக்கிறான். அந்த மூதாட்டியிடம் படுத்தி ருப்பவர் யார் என்று கேட்டனர்.

"என்ர மகன் அவனுக்கு மூளைக் கோளாறு." இலஞ்சப் பொலிஸ்காரன் சப்பாத்துக் காலுடன் படுத்திருப்பவர் அருகே போய் பார்க்கிறான்.



அருகில் ஒரு சில்வர் டம்ளர் இருக்கிறது. அதனுள் தேயிலை அடிக்கட்டைகளும், இஞ்சித் துண்டுகளும் இருக்கின்றன. அவனது வாயில் சீனித்துகள்கள் பிரண்டிருக்கின்றன. வாயருகில் எறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தன, அதனை அவன் கையால் தட்டிக்கொண்டிருந்தான். படுத்திருப்பவன் இலஞ்சப் பொலிஸ்காரனைப் பார்த்துக் கையை நீட்டி ஏதோ கேட்கிறான். இலஞ்சப் பொலிஸ்காரனுக்கு அவன் ஏதாவது சாப்பிடத்தான் கேட்கிறான் என்பது தெளிவாக விளங்கிவிட்டது. மூளை குழம்பியி ருந்தா லும் உடல் தனக்குரிய தேவையைத் தெளிவாகக்கேட்கிறது.

இலஞ்சப் பொலிஸ்காரன் மூதாட்டியிடம் ஏதோ கேட்கிறான். மூதாட்டி அவனது கண்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சொல்லாலோ, உடலாலோ பதிலளிக்கவில்லை. அந்த இரண்டு பொலிஸ்காரர்களும் இவர்கள் சில நாட்கள் சாப்பிடவில்லை என்பதை விளங்கிக்கொள்கின்றனர். இலஞ்சப் பொலிஸ்காரனுக்கு பதட்டம் அதிகரித்தது. மற்றப் பொலிஸ்காரனுக்கு தனது வாழ்க்கைத் தோல்வி காரணமாக இவர்கள் மீது இரக்கம் காட்ட முடியாதிருந்தது. இலஞ்சப் பொலிஸ்காரன் மனமுருகிவிட்டான். இலஞ்சம் வாங்கிய எல்லாக் காசையும் எடுத்து மூதாட்டியிடம் கொடுக்கிறான். மூதாட்டி வாங்கவில்லை மிகுந்த அன்போடும், காருண்யத்தோடும் அந்த மூதாட்டியின் கண்களை உற்று நோக்கினான், வெண்முடிக்கும் முகக்கவசத்திற்கும் இடையில் அந்த கண்கள் துல்லியமாக தெரிந்தன. அந்தப் பார்வையில் அவனது தாய், அவனது தாயின் தாய் அவனது மனப்பிறழ்வு கொண்ட ஒரு சகோதரன், அவனது மனைவி, மனைவியின் தாய், கதையில் வாசித்த ஆபிரிக்கக் கிழவி, படத்தில் பார்த்த வெள்ளைக்கார வயோதிப மாது எல்லோரினதும் ஒருவித கலப்பு அங்கே தெரிந்தது. கண்ணில் தெரிந்த இந்த காட்சிகளெல்லாம் தனது மனப்பிறழ்வால் ஏற்படும் மனப்பிரமையோவென ஒரு கணம் திண்டாடினான், பின் சுதாகரித்தான். அந்த இலஞ்சப் பொலிஸ்காரனின் கண்களுக்குள்ளால் காருண்யம், அந்த மூதாட்டியின் கண்களை அடைந்த பொழுது அந்த மூதாட்டி அந்த காசை வாங்க கையை நீட்ட இலஞ்சப் பொலிஸ்காரன் திடீரெனக் கொடுக்காது கையைப் பின்னெடுத்தான். அந்த வீட்டின் குசினிக்குப் போனபோது திறந்த சீனிப்பேணியில் எறும்பு மொய்த்துக்கொண்டிருந்தது. தணலாக இருந்த அந்த அடுப்பை மூட்டி இலஞ்சம் வாங்கிய எல்லாக் காசுகளையும் சூடாக்கி எடுத்து வந்து, சுடு ஆறிய பின் மூதாட்டியின் கையில் முழுக்காசையும் மொத்தமாகக் கொடுத்தான். எங்கும் வெளிச்சமாகி மனம் தளர்வடைவதை அவன் உணர்ந்தான். எல்லாமே நல்லவைகளாகத்தெரிந்தன. அகோரமாக குரைத்த நாய் வாலை ஆட்டுவது போல் தெரிந்தது. அப்போது அந்த மூதாட்டி ஆயிரம் ரூபாவை மட்டும் எடுத்து விட்டு மிகுதியை திரும்பக் கொடுத்தாள். முழுவதையும் வாங்க மறுத்துவிட்டாள். மிகுதிக் காசுகளை திண்ணையின் ஓரத்தில் வைத்து அதன் மேல் ஒரு கல்லை வைக்கிறான். அவன் சுதந்திரம் அடைந்தான், குளிசை தேவைப்படவில்லை. திடீரென "ஐயா" இரண்டு பொலிஸாரும் திரும்பிப் பார்க்கின்றனர். பாதிச் சோடாப் போத்தில்காரன் தனது இரண்டு கைகளிலும் சோடாப் போத்தல்கள் நிரம்பிய கள்ளுடன் பொலிஸாரைப் பார்த்துச் சிரித்தபடி நின்றிருந்தான். "ஐயா உங்களுக்கு கள்ளுகொண்டந்திட்டன். இனி உங்களுக்கு ஒரு கவலையும் இல்லை."

இரண்டு பொலிஸ்காரரும் அவனருகே சென்று அதில் இலஞ்சம் விட்டொழிந்த பொலிஸ்காரன் தனக்கினி பாவங்கள் இல்லை என்று கூறி தனது பொக்கற்றைத் தட்டுகிறான். பொக்கற்றில் ஒரு தாள் காசு தட்டுப்பட்ட உணர்வு வருகிறது. தவறுதலாக 50 ரூபாய் நோட்டு இருப்பதைக் கண்டு அதை ஒரு மட்டத்தேளை தூக்கி எறிவதுபோல எடுத்து வேகமாக் தூரே வீசினான். பாதிசோடாப் போத்தில்காரன் ஐயா காசை ஏன் எறியிறீங்கள்? இலஞ்சம் விட்டொழிந்த பொலிஸ்காரன் மிகுந்த அமைதியோடு இருந்தான். பாதிச் சோடாப் போத்தல்காரன் கள்ளைப் பொலிஸாரிடம் கொடுக்க அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். தங்களை அருகில் உள்ள கிராமசேவகர் ..ட்டுக்கு வழிகாட்டுமாறு இலஞ் சத்தை வ..டெொழிந்த பொலிஸ்காரன் கேட்கிறான். பாதிச்சோடாப் போத்தல்காரன் தனது கையிலிருந்த இரண்டு கள்ளுப் போத்தல்களை ஒரு பற்றைக்குள் மறைத்து வைத்து விட்டுக் காற்றில் பறந்து செல்லும் 50 ரூபாய் நோட்டைத் தான் எடுக்கட்டுமா என்று பொலிஸ்காரனைக் கேட்க அதற்குப் பொலிஸ்காரன் உனது விருப்பம் என்று குறிப்பிட்டான். அந்த மூவரும் நடந்து போய்க் கொண்டு இருந்தனர். மூதாட்டி இருந்த திண்ணை ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த தாள் காசுகள் காற்றுக்கு கல்லிலிருந்து விலகிக் கீழேவிழுந்து அங்கு மிங்கும் காற்றின் திசைக்கு அடிபட்டுப் போய்க் கொண்டிருந்தன. அவற்றில் சில நோட்டுகள் இரண்டு கள்ளுப்போத்தல்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒதுங்கின. ■

# பழிக்குப் பழி!

## நடுவீதியில் வெட்டிச் சரிக்கப்பட்ட பாம் ரவி

○ மயூ





புதுச்சேரி, வாணரப்பேட்டை.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வீதிகளில் வழமைபோன்று மக்கள் நடமாட்டம் இல்லை. வீதியில் மோட்டார் சைக்கிளில் இருவர் சாதாரணமாகப் பயணித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னே சற்றுத் தூரத்தில் இன்னும் சில மோட்டார் சைக்கிள்கள் வந்து கொண்டிருந்தன.

எதிர்பாராத கணமொன்றில்,பின்னே வந்த மோட்டார் சைக்கிள்களின் வேகம் அதிகரித்தது. முன்னே பயணித்த இருவரையும் நெருங்கின அந்த மோட்டார் சைக்கிள்கள். திடீரென பெரும் வெடியோசை கேட்க, அந்த இடம் அல்லோல கல்லோலமானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீதும், பின்தொடர்ந்து வந்த 5 பேர் கொண்ட கும்பல் நாட்டு வெடிகுண்டை வீசியிருந்தது. மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் வீதியில் கிடந்து துடித்துக் கொண்டிருக்க, மற்றையவர் காயத்துடன் வீதியில் தப்பியோட ஆரம்பித்தார். ஆனால் அந்தக் கும்பல் அவ்வளவு சுலபத்தில் தப்பவிடுவதாக இல்லை. வீதியில் துரத்திச் சென்று சுற்றிவளைத்த கும்பல், சரமாரியாக அந்த நபர்களை வெட்டி வீழ்த்தியது.

இந்தத் திகில் சம்பவங்கள் கண்மூடித் திறக்கும் நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்டன. மக்கள் அச்சத்தில் சிதறி ஓட ,அந்த இடம் வெறிச்சோடியது. சற்றுநேரத்தில் அந்த இடம் பொலிஸ் சைரன் ஒலிகளால் நிறைந்தது. அந்த இடைவெளிக்குள், படுகொலைகளைச் செய்தவர்கள் தப்பியோடியிருந்தனர்.

வீதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்தவர்கள் அங்கேயே துடித்து இறந்திருந்தனர். பொலிஸார் உடல்களை மீட்டு விசாரணைகளை ஆரம்பித்தனர். கொலை செய்யப்பட்டவர்கள் வாணரப்பேட்டையில் உள்ள தாவீதுபேட்டையைச் சேர்ந்த சதீஷ் என்கின்ற பாம் ரவியும், அவரது நண்பரான பரிடா அந்தோனியும் தான் என்பதைப் பொலிஸார் கண்டறிந்தனர்.

✦✦✦✦✦

புதுச்சேரி, வாணரப்பேட்டையில் உள்ள தாவீதுபேட்டைச் சேர்ந்தவர் சதீஷ் என்கின்ற பாம் ரவி. 33 வயதான இவர் மீது 6 கொலை வழக்குகள் இருக்கின்றன. அதைவிட கொலை முயற்சி, கடத்தல் என்று பல குற்ற வழக்குகளும் நீதிமன்றங்களில் இருக்கின்றன. சிறையில் இருந்த இவர் சில மாதங்களுக்கு முன்னர்தான் பிணையில் வெளியே வந்திருந்தார்.

நடு வீதியில் நடந்த இந்த இரட்டைக் கொலைகள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தினர். விசாரணைகளின் அடிப்படையில் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்த விடயங்கள் சினிமாவை விஞ்சியதாக இருந்தன.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு திப்லான் என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார். திருமணத்துக்குப் பின்னர் திருந்தி வாழ முயன்ற திப்லானை, பாம் ரவியும், அவரின் நண்பர்களும் கடத்திச் சென்று அடித்துக் கொலை செய்தனர் என்று கூறப்படுகின்றது. அந்தக் கொலை வழக்கில் பாம் ரவி குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

திப்லானின் கொலைக்குப் பழிவாங்கும் வகையில், அவரது நண்பர்களால் பாம் ரவி குறிவைக்கப்பட்டிருந்தார். திப்லானின் நண்பர்கள், அவரது கல்லறையில் அவருக்குப் பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடியதுடன், கொலை செய்தவரைப் பழிக்குப் பழி வாங்குவோம் என்று உறுதிமொழி ஏற்ற காட்சிகள் அடங்கிய காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகி அப்போது பரபரப்பை ஏற்படுத்தியது. இப்போது பாம் ரவி, திப்லானின் நண்பர்களாலேயே கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருக்கிறார். இதில் இன்னும் ஒரு அதிர்ச்சித் தகவல் என்னவெனில், இந்தக் கொலை சிறைச்சாலைக்குள் இருந்தவர்களால் திட்டமிடப்பட்டு, அரங்கேற்றப்பட்டிருக்கின்றது என்பதுதான்.

✦✦✦✦✦

திப்லானின் நண்பர்களின் ஒருவர் வினோத். கொள்ளைச் சம்பவம் தொடர்பில் இப்போது வினோத் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டபோது, வினோத்திடம் நாட்டு வெடிகுண்டு, கத்தி என்பன இருந்துள்ளன. பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்த வினோத், பாம் ரவியால் தனக்கு ஆபத்து இருப்பதாகவும், பாதுகாப்புக்காக வெடிகுண்டு வைத்திருந்ததாகவும் கூறியிருந்தார்.


இரட்டைக் கொலைகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸாரின் சந்தேக வட்டத்துக்குள் உடனடியாகவே வினோத் வந்திருந்தார். பாம் ரவி வெடிகுண்டு வீசப்பட்டும், வெட்டப்பட்டும் கொலை செய்யப்பட்டிருந்தமையே அதற்குக் காரணம். வினோத்தை தமது காவலுக்கு எடுத்த பொலிஸார், முறையாக விசாரித்ததில் அவர் அனைத்தையும் கக்க ஆரம்பித்திருக்கிறார்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும், பாம் ரவியைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்பதில் வினோத் குறியாகவிருந்தார். சிறையில் இருந்த சக கைதிகளின் உதவியுடன் திட்டம் தீட்டப்பட்டது. தொலைபேசியில் உரையாடி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாம் ரவி அரசியலுக்குள் நுழைவதற்கான முயற்சிகளை ஆரம்பித்திருந்ததால், அவசர அவசரமாகத் தீர்த்துக்கட்ட முடிவெடுக்கப்பட்டது. ஒருவேளை பாம் ரவி அரசியலுக்குள் நுழைந்து விட்டால் அவரை நெருங்குவது கடினம் என்று திப்லானின் நண்பர்கள் நினைத்திருக்கலாம்.

உள்ளூர் ஆட்கள் தவிர்க்கப்பட்டு, தமிழகத்தில் இருந்து ஆட்கள் கொண்டுவரப்பட்டனர். தமிழக ஆட்களுக்கு உதவியாகச் சில உள்ளூர் ஆட்களும் பின்னர் சேர்க்கப்பட்டனர். பாம் ரவியின் நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டன. கொலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நாளும் தெரிவு செய்யப்பட்டது.

✦✦✦✦✦







2021 செப்ரெம்பர் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை.

நண்பரையும் ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார் பாம் ரவி. கொலைத் திட்டத்துடன் அந்தக் கும்பல் அவர்களைப் பின்தொடர்ந்தது. தேர்வு செய்த இடம் வந்தவுடன், தங்களிடம் இருந்த நாட்டு வெடிகுண்டை பாம் ரவியின் மீது வீசியது அந்தக் கும்பல். அந்த வெடிகுண்டை வீசியது, உள்ளூரில் பிடித்த ஆட்கள். அது தவறி, பாம் ரவியின் நண்பரின் தலையில் வீழ்ந்து வெடிக்க, அவர் படுகாயமடைந்து வீதியில் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்தார்.

மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்த பாம் ரவி, எழுந்து தப்பியோட ஆரம்பித்தார். ஆனால் அந்தக் கும்பல் விடவில்லை. வீதியில் வாள்களுடன் துரத்திச் சென்று சரமாரியாக அவரை வெட்டியது. தப்பியோட முடியாது வீதியில் சரிந்து துடித்து அடங்கினார் பாம் ரவி. அந்தக் கும்பல் சாவகாசமாக அங்கிருந்து தப்பியோடியது.

இப்போது வினோத் சிறைச்சாலையில் இருந்து பொலிஸ் காவலுக்கு எடுக்கப்பட்டிருக்கிறார். இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்தை அடுத்து பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். சிறைச்சாலைக்குள் இருந்து திட்டம் தீட்டப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாகவும் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

காரைக்கால் மாவட்டத்தில், பா.ம.க. மாவட்ட செயலாளர் தேவமணி என்பவர் 6 பேர் கொண்ட கூலிப் படையால் சாலையில் துரத்திச் சென்று வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அந்தக் கொலை நடந்த மறுநாளே புதுச்சேரியில் நடந்த இந்த இரட்டைக் கொலை மக்களிடையே அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. ■

## அரங்கேறும் அஸ்தமனம்

ஜோசுவா செல்வராசா

தாமரை தடத்திலே இவள்
தடத்தினை பதித்திட
தாழம்பூ போல மணம் என்
தவத்தினை தாக்குது..!

தேங்கிய நீரிலே இவள்
தேகம் தளைத்திட
தேவதைதானோ எனமனம்
தேடிப் பார்த்திட...!

கரைபுரண்ட நதியோ கன்னியிவள்
கக்கம்வந்து கனியுது
வாடைக் காற்றோ வஞ்சியிவள்
வாசம் வாங்கி போகுது...

அள்ளி முடிந்த அவள் அங்கமோ
ஆற்றுப்படுக்கையில் அவிழ்ந்திட
முகை விரியுதே பெண்
முந்தானை முடிச்சவிழ்ந்திட

அவ்வி அரும்போ அணங்கவள்
அங்கம் அணைத்திட
ஆடவர்தானோ என பெண்
அங்கம் அணங்கிட...!

சிதறல் துளியாய் அவள்
சினுங்கல் சீறிப்பாயுது
மோக மேகமோ என்னுள்
மோட்சம் காணுது!

அரங்கேறட்டும் அஸ்தமனம் பின்
அல்லியவளை அள்ளியணைத்து
அந்தரங்கம் காண்கிறேன்அவள்
அந்தகாரம் துளைத்து...!





விளை நிலத்தை சீர் செய்யும்
விவசாய வீரனிவன்
பாரோடு போராடி படும் பாட்டைப் பாராயோ
வெப்பத்தால் வந்த தேகம்
வேதனை தான் கண்ட மிச்சம்
உள்ளாடைக்கும் உச்ச வரியதனால்
கச்சை தான் தஞ்சமென மிஞ்சியது

**எஸ்.கோதீஷ்**

பத்து வயதினிலே மானத்தைக் காத்திட
அணிந்த கோலத்தை நான் மறவேன்
செத்துப் பிழைத்திட எண்பது வயதினில்
அணிந்திடக் கேவலம் என்று நினைப்பேனா?
நித்தம் பஞ்சத்தால் வாடி வதங்கிடாமல்
புத்தம் புதுமலராய் மண்ணை நம்பு
பித்துப் பிடிக்காமல் உன் கையை நம்பியே
வாழ்ந்திட்டால் இப்புவி உன்னை வாழ்த்தும்

**சி.சிவானந்தராசா**, பண்டத்தரிப்பு

# 55 இற்கான மௌன மொழி கவிதைகள்

அன்று பொன் விளைந்த பூமியிது
ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது
இன்று விடுவிக்கப்பட்டது தான் புதிர் நிறைந்த புற்காடாய்
காடதனை களனியாக்க கஸ்ரப்படும் கந்தப்பு
இருந்ததை எல்லாம் இழந்து இழப்பதற்கு எதுவுமின்றி
மிச்சமானது கச்சை மட்டும் தான்
கணவனின் கடின உழைப்பு தனைக் கண்டு
கண் கலங்கி நிற்கும் வள்ளியம்மை

**வி.பி.சிவேஸ்**, தண்ணீரூற்று

**பரிசு பெறும் கவிதை**

உச்சி வெய்யில் எரிக்கையிலே
எரிந்து தணிந்த விறகினைப் போல்
உலக மக்கள் உயிர் காக்க
தன் உயிரைத் துச்சமாக எண்ணி
துணியின்றி துண்டுடனே
நிற்கின்றது ஒரு காளை
அதன் பசி தீர்த்திடவே கருமேகம்
ஒன்று துணை நிற்குதம்மா

**கபினயா நடேசன்**
கோப்பாய்

விதைகள் விதைத்த தருணம் கூட
காதல் செடிகள் தழைத்து அன்று
துண்டுத் துணியினை அணிந்தால் கூட
நிறைவினைத் தந்தது மனங்கள் கூட

வண்ண ஆடைகள் உடுத்த தருணம்
குறையினைத் தந்தது மனங்கள் வருந்த
களனிகள் கூறும் கதைகள் இன்றும்
உணர்த்தும் பழமையின் சிறப்பை

**ந.விதுஷன்**, பருத்தித்துறை

வீழும் வயதிலே
விவசாய தொழிலாளியாய்
கோவண மணிந்த
கருங்காலி போன்ற மேனியனே!
மனையாள் மருகிருந்து தவ
இழந்தீரோ?........ உறவுகளை வாழ
பாரினை சீராக்கி
நீரினை விடும் பயணமா?

**வரன்**, பண்டத்தரிப்பு

தரணியை உழுது வளமாக்கி
தாரத்துடன் இணைந்து– உழைக்கும்
விவசாயி வாழ்வு
வியர்வையில் குளித்தாலும்
சேற்றில் புதையுண்டாலும்
சோற்றில் கைவைப்போம் என்ற
நம்பிக்கை
உழுது பயிரிட எம் அரசு
உரத்தையும் பறித்தால்
ஊன் இன்றி உண்டி சுருங்கிட
உயிர் மாய்க்கும் இவர்களின்
விதி இது தானோ!

**விமலதர்சினி மத்தியதாஸ்**
நவாலி

காலம் கடந்து போனாலும்
கால் வலி தொடர்ந்தாலும்
உழைப்புக் கைவிடாதென்று
ஊனத்தையும் மறந்த முயற்சி
புதுமைகள் புகுந்த போதும்
பழமையை மறவாமல் போற்றுவதும்
இவர்களின் அந்நியோன்னியமும்
இன்றைய சந்ததிக்குச் செய்தி

**க.நாகராசா**
சாவகச்சேரி

உழைப்பு எனும் கடலில்
களைப்பு என்ற உணர்வில்
தன் கணவர் ஆழ்ந்ததில்
தன் பசி போக்காது
வந்தவளும் தனக்கு உடை
இல்லையென்றாலும்
தன் மனையாளுக்கு
சந்தோசம் வேண்டும் என்றவனும்
பல்லாண்டு காலம் வாழ்வார்களா!

**லி.ஐஸ்வர்யா**, மானிப்பாய்

மண்ணை நனைக்க
மழை தான் மறக்குமோ
என்ன நினைச்சு
சோறு கொண்டு வந்தவளே
தல நரைச்ச காலத்திலும்
விளையாத என் உசிரு
தளிர் விட்டு படரும் நேரம்
உன நினைச்சு
சத்தமில்லாமல் கரையுதடி
என் மனசு

**ஜெ.ஜெயமதுரா**
சாவகச்சேரி.

வறுமையின் கொடுமை மேனியிலே
முதுமையில் உடல் சோந்தாலும்
வேர்வை சிந்தி உழைக்க வேண்டுமே
எப்படி உழைத்தும் மிச்சமில்லையே
ஒற்றைக் காலில் ஏன் நிற்கின்றீர்?

**தனா**, நெல்லியூர்



**நாற்றதனை விதைப்பதற்கு**
**சேற்றை இவன் மிதிப்பதாலே**
**சோற்றை நாமும் புசிக்கிறோம்**
**எம் பசியைப்போக்கும்**
**உழவை என்றும் போற்றுவோம்**

கனிவிழி.கா
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

உலகுக்கே உணவளிக்கும் அரிய சிவனே
காடு வெட்டி பாடுபட்டு ஏர் பூட்டி
வானம் பார்த்து பயிர் செய்யும்
ஏழை விவசாயி நீ
உன் பசிதனை பாரி அவள் கஞ்சியினால்
போக்குகிறாள்
பசளை இன்றி விவசாயம் பொய்த்தாலும்
நம்பிக்கை எனும் கோல் ஊன்றி
நீ சேற்றில் கால் வைத்தால் தான்
நாம் சோற்றில் கைவைக்க முடியும்

**கும்பவாழியான்**, உடுப்பிட்டி

ஏர் தினம் பிடித்தும் எம்
வாழ்வில் ஏற்றம்
என்பதில்லை!
பசுமைகள் பல படைத்தும் எம்
வாழ்வில் பசுமையை
பார்த்ததேயில்லை!
உழைப்புக்கேற்ற
விளைச்சலுமில்லை!
விலையை நிர்ணயிக்க
உரிமையுமில்லை!
பயிர் செய்ய நிலமுமில்லை!
உயிரோடு இருக்க
மனமுமில்லை!

**ஏ.பி.அன்பரசன்**
யா/வரணி மத்திய கல்லூரி(A/L)

பாத்திரு காரிகையே
கழுத்தில் கயிரோட நிலத்துக்கு உரம் போட்டு
கண்ணீரை அடகு வைச்சு பயிரை விதைச்சு
கானல் நீரால வயல இறைச்சு
காகிதக் கப்பலா குடியே மூழ்கிப் போனாலும்
பெருமூச்சை காற்றின் முதுகில் ஏற்றி அனுப்பி
நான் உண்டி கொடுப்பன்
எங்கட கம்பியூட்டர் இளசுகளுக்கு.......

ச.வைஷாலினி, நல்லூர்

வெயிலின் கடுமை வாட்டுவதால்
வெற்று நிலத்தில் கால் புதைத்து
புதிதான வாழ்வினை நோவதோ?
பெற்ற பிள்ளைகள் மறந்திடினும்
மற்றவர் பிறர் விலகிடினும்
கோலும் துணையும் உறுதி தரும்
வானம் மழை பொழிந்திடும்
வற்றிய அன்பு துளிர்த்திடும்.

**சிவரம்யா**
யாழ்ப்பாணம்

**56**

**கவிதைக்கு பரிசு 1000/=**

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**

**12.11.2021**

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.



இலக்கிலே

○ ஆர்.பிரகாஷ்

# போர்முனை!

சர்வதேச நாடுகள் ஒவ்வொன்றும் இன்னொரு நாட்டினுடைய அணுவாயுத இருப்பை, ஆயுத பலத்தை, போர்த் தளபாடங்களை மதிப்பீடு செய்வது புதிதல்ல. இது காலங்காலமாக நடப்பதுதான். ஆனால், கடந்த வாரம் நடைபெற்று முடிந்துள்ள ஒரு துரித மதிப்பீடும் அதன் பின்னரான காரணங்களும் மூன்றாம் உலகப் போருக்கான போர்முனையாக இருந்துவிடுமோ என்று அச்சம் கொள்கின்றது சர்வதேச சமூகம். அதுதான் அமெரிக்கா - சீனா விவகாரம். அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு ட்ரம்பின் ஆட்சிக் காலத்தில் பெருவிரிசல் கண்டது.

வடகொரியாவை ஆதரிக்கும் சீனத்தின் மனநிலை, தாய்வான் மீதான ஆக்கிரமிப்பு, தென்சீனக் கடற்பரப்பில் சீனா அதிகரித்துவரும் இராணுவ நடவடிக்கை என்பன காரணமாக ஏற்பட்ட இந்த மனக்கசப்புக்களால் இரு நாட்டின் உறவு நிலையும் நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது. இதனால்தான் அமெரிக்காவும் சீனாவும் பரஸ்பரம் வரிவிதிப்புக்களை பல மடங்குகளாக்கி பெரும் வர்த்தகப் போரை நடத்திக் கொண்டிருந்தன.

ட்ரம்பின் ஆட்சியில் உலகப் பொருளாதாரத்தை ஆட்டம்காணச் செய்யும் அளவுக்கு அமெரிக்கா- சீனா இடையிலான இந்த வர்த்தகப் போர் இடம்பெற்றது. ஆனால், அது பைடனின் ஆட்சியிலும் தொடர்கின்றது என்பதுதான் இங்கே உண்மை. இன்னும் சொல்லப்போனால் அமெரிக்கா - சீனா இடையிலான உறவுநிலை இன்னும் மோசமாகுவதற்கு வாய்ப்புக்கள் பிரகாசமாக இருக்கின்றனவே தவிர அது தணிவதற்கோ அல்லது குறைவதற்கோ கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் வெளிச்சம் இல்லை. சீனாவிடம் கடந்த ஆண்டு 200 அணுவாயுதங்கள் இருந்தன.



அடுத்த 5 ஆண்டுகளில் இந்தத் தொகையை 700ஆக அதிகரிப்பதற்குத் சீனா திட்டமிடுகின்றது. 2030 ஆம் ஆண்டுக்குள் ஆயிரமாக அதிகரிக்கப் போகின்றது என்று மதிப்பீட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது அமெரிக்கா.

வடகொரியா - அமெரிக்கா இடையிலான முறுகலில் தற்போது முழுவதுமாகத் தலையிட்டுள்ள சீனா, வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்று ரஷ்யாவுடன் சேர்ந்து தீர்மானமொன்றை ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டுவரவுள்ளது. அத்துடன் தாய்வானை சீனா ஆக்கிரமிக்க இம்மியும் இடமில்லை என்றும் அதற்கு அனுமதிக்கவே மாட்டோம். தாய்வானுடன் அமெரிக்கா துணைநிற்கும் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது. அதுமட்டுமல்ல ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைகுனிவதற்கும் தலிபான்களின் பேரெழுச்சிக்கும் பின்புலம் சீனாதான். இத்தகையதொரு பின்னணியில் அமெரிக்காவின் இந்த ஆயுத - இராணுவ பல மதிப்பீடு எத்தகையது என்ற ஒரு முடிவுக்கு நாம் வரமுடியும். சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் எதிராக அமெரிக்கா என்ன நகர்வு எடுத்தாலும் மேற்கத்திய நாடுகள் அமெரிக்காவின் முடிவைத்தான் தமது முடிவாகக் கொண்டிருக்கும். இதற்கு பல உதாரணங்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இதனால் அமெரிக்காவை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த மேற்கத்திய நாடுகளுக்கும் தம் எதிர்ப்பைப் பதிவுசெய்ய வேண்டிய ஒருவிதக் கட்டாய நிலை தற்போது சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் உள்ளன. இதனால், ஸ்கொட்லாந்தில் நடைபெற்றுவரும் 'கிளாஸ்கோ பருவநிலை உச்சிமாநாட்டையும்', ரோமில் நடைபெற்ற 'ஜி-20' மாநாட்டையும் சீனாவும் ரஷ்யாவும் புறக்கணித்துள்ளமையும் மேற்குறிப்பிட்ட மேற்கத்திய விவகாரத்தையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்த்தாலும் அதில் தப்பில்லை.

ஒன்று மட்டும் உண்மை. மூன்றாம் உலகப்போரின் போர்முனை அமெரிக்கா, சீனா, வடகொரியா, ரஷ்யா ஆகிய நாடுகளை மையப்படுத்தியே தற்போது சுழன்றுகொண்டிருக்கின்றது. ■

# உலகத்தின் அறிவும் உள்ளத்தின் உணர்வும்

○ ம.மயூரபாலன்

ஒரு கிராமத்தில் மனிதன் ஒருவன் கோழிப்பண்ணை ஒன்றை வைத்திருந்தான். திடீரென்று ஒருநாள் அவனது கோழிகளில் சில இறந்துவிட்டன. அவன் உடனடியாகக் கால்நடை வைத்தியரைக் காணச்சென்றான். அவன் போகும் வழியிலே அவனது நண்பனைச் சந்தித்தான். கோழிகள் இறந்த விடயத்தை கேள்விப்பட்ட நண்பன் தனக்கு தெரிந்த ஒரு சாமியார் ஒருவரிடம் சென்று அறிவுரை கேட்குமாறும் அந்த சாமியார் சகலவிதமான பிரச்சனைகளையும் தீர்க்கவல்லவர் எனவும் அவனிடம் கூறினான்.



அந்த மனிதனும் நேராக சாமியாரிடம் சென்று தனது கோழிகள் இறந்த விடயத்தைக் கூறினான். சாமியாரும் அவனது கோழிப்பண்ணை பற்றிய எல்லாத் தகவல்களையும் கேட்டு அறிந்த பின்னர் கோழிகள் சென்று வருகின்ற வாசலை மேற்கில் இருந்து கிழக்காக மாற்றுமாறு சொன்னார். அவனும் சாமியார் கூறியது போல வாசலை மாற்றி அமைத்தான். சில நாட்களில் மேலும் பல கோழிகள் இறந்து விட்டன. அவன் மீண்டும் சாமியாரிடம் வந்து முறையீடு செய்தான். அப்பொழுது சாமியார் " அந்தக் கோழிப்பண்ணையின் கூரையில் உள்ள தகரத்தின் மேலே ஓலைக் கீற்றுக்களை போடவேண்டும்" எனக் கூறினார். அவனும் அவ்வாறே செய்தான். சிறிது நாட்களில் மேலும் பல கோழிகள் இறந்துவிட்டன. இவ்வாறு ஒவ்வொன்றாக பல மாற்றங்களை செய்துகொண்டிருந்தான். ஒருநாள் அவனது எல்லாக் கோழிகளும் இறந்துவிட்டன. அவனும் நேராக சாமியாரிடம் சென்று "எனது கோழிகள் எல்லாம் இறந்து விட்டனவே" எனக் கூறி அழுதான். அதற்கு அந்தச் சாமியார் "என்னிடம் மேலும் பல யுக்திகள் உள்ளன ஆனால் அவற்றை உபயோகிப்பதற்கு உன்னிடம் கோழிகள் இல்லையே" எனக் கூறி வருத்தப்பட்டார்.

இது நான் அண்மையில் கேட்ட ஒரு கற்பனைக் கதைதான். ஆனால் இது நமது வாழ்க்கையுடன் ஒத்துப் போவது போலத் தெரிகின்றது. நமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பலரும் பலவிதமான ஆலோசனைகளை வழங்குகிறார்கள். அவ்வாறான ஆலோசனைகளை நம்பி ஏற்றுக்கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. நாம் ஒரு பொழுதும் இறக்கப் போவதில்லை என்றால் , நாம் அவை எல்லாவற்றையும் முயற்சி செய்து பார்க்கலாம். ஆனால் நம்மிடம் இருப்பதோ மிகவும் குறுகிய வாழ்க்கைக் காலம்தான். அதனால் நாங்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். உங்களது மோட்டார் சைக்கிள் இயங்க மறுத்தால் நீங்கள் அதனை உதைத்து உதைத்து இயக்க முயற்சி செய்வீர்கள். ஒரு தடவை, இரு தடவை அல்லது பத்து தடவைகள் உதைத்தும் அது இயங்கவில்லை என்றால் நீங்கள் வேறு எங்கு பிழை உள்ளது என பார்க்க ஆரம்பிப்பீர்கள். ஒருவர் இரண்டு நாட்களாக தொடர்ந்து மோட்டார் சைக்கிளை இயக்குவதற்காக உதைத்துக்கொண்டு இருக்கிறார் என்றால் அவரைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுவீர்கள்?

ஐன்ஸ்டைன் எனும் விஞ்ஞானி "செய்வதையே தொடர்ந்து செய்துகொண்டு வித்தியாசமான விளைவுகளை எதிர்பார்த்தால் அதுதான் பைத்தியக்காரத்தனம்" எனக் கூறியுள்ளார்.

உண்பது உறங்குவது இனத்தைப் பெருக்குவது போன்ற எல்லாவற்றையும் மிருகங்களும் பறவைகளும் கூட செய்கின்றன. அப்படியாயின் மனிதர்களான நமக்கும் மிருகங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம்தான் என்ன? "பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் கூட நன்மை தீமை என்ன என்பது தெரியும். ஆனால் மனிதனால் மட்டுமே தன்னைத் தானே அறிந்து உணர முடியும்" என ஞானிகளும் மகான்களும் கூறியிருக்கின்றார்கள். ஒருவன் தன்னைத் தானே அறிந்து கொள்வதற்கு மேலும் பல விடயங்களைக் கற்றுக்கொள்ளத் தேவையில்லை.

ஒரு தடவை ஒரு கற்றறிந்த பண்டிதரும் கல்வியறிவு இல்லாத ஒரு மனிதரும் ஒரு குருவிடம் சென்று தமக்கு ஞானோபதேசம் செய்து அருளுமாறு கேட்டுக்கொண்டார்கள். குருவானவர் அவர்கள் இருவருடனும் கலந்துரையாடிய பின்னர் அந்தக் கல்வி அறிவு இல்லாத மனிதன் ஞானோபதேசம் பெறத் தாயாராகுவதற்கு ஆறுமாதம் தேவை எனவும் அந்த பண்டிதர் ஞானோபதேசம் பெறத் தயாராவதற்கு ஒரு வருடம் தேவை எனவும் கூறினார். அப்பொழுது அந்தப் பண்டிதர் "ஐயா நான் பல வேத ஆகமங்களை கற்று அறிந்தவன். எனக்கு முதலிலே அதனை ஏன் உபதேசம் செய்யக்கூடாது?" எனக் கேட்டார். அதற்கு அந்த குரு "முதலில் உன்னிடம் உள்ள தேவையற்ற விடயங்கள் எல்லாவற்றையும் நான் அகற்ற வேண்டியுள்ளது. அதற்குத்தான் அந்த மேலதிகமான ஆறு மாதங்கள் தேவைப்படுகின்றன" எனக் கூறினார்.

உள்ளத்தில் உள்ளதனை உணர்வதற்கு உலகத்தின் அறிவு தேவையில்லை. அவை இரண்டும் வேறுபட்டவை . நம்மிடம் மனமும் உள்ளது, உள்ளமும் உள்ளது. இந்த உலகில் நமது அன்றாட வாழ்வை வாழ்வதற்கு, நமது உணவு உடை இருப்பிடம் என எல்லாவற்றையும் தீர்மானிப்பதற்கு மனம் மிகவும் அவசியமாக உள்ளது. ஆனால் இந்த வாழ்வை ஆனந்தமாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு உள்ளம் மிக மிக அவசியமாக உள்ளது. மனத்தை மேலும் மேலும் விரிவுபடுத்தி அறிவைக் கூட்டினால் நமது உலகியல் வாழ்வு மேம்படுகின்றது. ஆனால் உள்ளம் என வரும் பொழுது அங்கு ஏற்கனவே உள்ள தேவையற்ற விடயங்களை அகற்றும் பொழுது அமைதியும் ஆனந்தமும் தானாகவே ஏற்படுகின்றன. ஒரு முகம்பார்க்கும் கண்ணாடியின் மேலே அழுக்கும் தூசிகளும் படிந்து இருக்கின்றன. அங்கு நாங்கள் மேலும் பல விடயங்களை சேர்க்கத் தேவையில்லை. அந்த கண்ணாடியில் உள்ள அழுக்கை மெதுவாக நாங்கள் அகற்ற அகற்ற நமது விம்பம் தானாகவே அதில் வெளிப்படத் தொடங்குகிறது. அதனை திருமூலர் அருளிய திருமந்திரத்தில் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். வான்பற்றி நின்ற மறை பொருள் சொல்லிடின் ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே" எனக் கூறுகின்றார். திருமூலர் தான் பெற்ற ஆனந்தத்தை இந்த முழு உலகமும் பெறவேண்டும் என்ற மிகப்பெரும் நல்ல நோக்கத்துடன் இந்தப் பாடலை எழுதியுள்ளார். இதனை நாமும் அறிந்து உணர்ந்து நமது வாழ்விலே சாத்தியமாக்குவது நமது தலையாய கடமையாகும். ■

# திண்ணைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டை உருவாக்கக் கூடிய வாய்ப்புகள் பெருமளவுக்கு குறைவு என்பதே கடந்த 12 ஆண்டுகால அனுபவம் ஆகும். மாறாக தேர்தல் உள்நோக்கம் இல்லாத பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் முயன்றால் அவ்வாறான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்யலாம் என்பது கடந்த ஆண்டுகளில் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது விடயம், இந்தியாவை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை எந்த அடிப்படையில் முன்வைப்பது என்பது. 13 ஆவது திருத்தத்தை இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைப்பதா? அல்லது இந்தியாவை இனப்பிரச்சினைக்குள் மீண்டும் தலையிட வைக்கும் ஓர் ஊக்கியாக பயன்படுத்துவதா?

மேற்படி கட்சிகளில் பெரும்பாலானவை 13 ஆவது திருத்தத்தை ஒரு இறுதித்தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த பன்னிரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள் மிகக் குறிப்பாக 2015 க்கும் 2018 க்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஈழத்தமிழர்கள் ஒப்பீட்டளவில் அதிகளவு தீர்வு முன்மொழிவுகளை முன்வைத்திருக்கிறார்கள். மேற்சொன்ன கட்சிகள் யாவும் தாங்கள் சார்ந்த கூட்டுக்களுக்கூடாக அல்லது தமிழ் மக்கள் பேரவைக்கு ஊடாக அல்லது வட மாகாண சபைக்கூடாக அவ்வாறான முன்மொழிவுகளை முன்வைத்திருக்கின்றன. அந்த முன்மொழிவுகள் யாவும் 13 ஐக் கடந்து வருகின்றன. அவற்றில் பெரும்பாலானவை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு வெளியே வரும் கூட்டாட்சி முன்மொழிவுகள் ஆகும். எனவே மேற்கண்ட கட்சிகள் 13 ஐ ஒரு இறுதி ஏற்பாடாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயின் இந்தியாவை மீண்டும் இனப்பிரச்சினையில் தலையிடக் கோரும் ஒரு ஊக்கியாகத்தான் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்படுகிறதா?

அப்படியென்றால் அது மிக ஆழமான ஒரு விடயம். இனப்பிரச்சினையில் இந்தியாவை மீண்டும் தலையிட வைப்பது அல்லது இந்தியாவை அரவணைப்பதன் மூலம் தமிழ் மக்களின் பேரம்பேசும் சக்தியை அதிகப்படுத்துவது போன்ற அனைத்துமே நீண்ட கால நோக்கில் தமிழ் மக்களின் வெளியுறவுக் கொள்கை சார்ந்த விவகாரங்கள் ஆகும். இதுதொடர்பில் கட்சி நிலைப்பாடுகளுக்கு அப்பால் முழுத் தமிழ்த்தரப்பும் ஒருமித்த ஒரு பொதுக் கொள்கைக்கு - பொது அணுகுமுறைக்கு - போகவேண்டும்.

ஆனால் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒத்தகருத்துக் கிடையாது. அதே சமயம், இந்தியாவின் பிராந்திய நலன்களை, குறிப்பாக புவிசார் நலன்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற விடயத்தில் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் ஏறக்குறைய ஒரே நிலைப்பாட்டில் உள்ளன என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

பொதுவாக கடும்போக்காளர்கள் என்று கருதப்படும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது இந்த விடயத்தை மிகத்தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. இந்திய-இலங்கை உடன்படிக்கையை அந்தக் கட்சி ஏற்றுக்கொள்கிறது. ஆனால் 13 ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் விடயத்தில் அந்தக்கட்சியானது இந்தியாவோடு ஒத்துழைக்கும் என்பதனை அந்தக்கட்சியின் தலைவர் அழுத்தமாகக் கூறி வருக்கிறார். ஆனால் இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்காக ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனையும் அந்தக்கட்சி தெளிவாகத் தெரிவித்துவிட்டது.

தமிழரசுக்கட்சி 13 ஆவது திருத்தத்தைக் கடந்து சென்று 13 பிளஸ் குறித்து பேசிய ஒரு கட்சி. அந்தக்கட்சியானது தனது வெளியுறவுக் கொள்கை இதுதான் என்பதனை தெளிவாக வரையறுத்து கூறாவிட்டாலும் கூட அதன் பல தசாப்தகால நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால் அது இந்தியாவின் பிராந்திய நலன்களுக்குப் பாதகமாகச் சிந்திக்கும் ஒரு கட்சி அல்ல.

மற்றது விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி. இந்தக்கூட்டணி திண்ணைச் சந்திப்பில் பங்குபற்றியது. இந்தக்கூட்டணிக்குள் காணப்படும் பங்காளிக் கட்சிகள் இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பவை ,அத்தோடு இந்தியத் தலையீட்டை வரவேற்பவை.

எனவே தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ்ப் பரப்பில் தமிழ்த் தேசியக் நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளில் பெரும்பாலானவை இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு ஆதரவாகவே காணப்படுகின்றன. ஆனால் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்காக 13 ஆவது திருத்தத்தை ஒரு உச்சமான தீர்வாக ஏற்றுக் கொள்வதில்தான் கட்சிகளுக்கிடையே கருத்து பேதங்கள் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களின் அடிப்படையில் கொழும்பின் மீது இந்தியா அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதில் மேற்படி கட்சிகள் மத்தியில் பெரியளவுக்கு முரண்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவ்வாறு இந்தியாவை அழுத்தம் பிரயோகிக்க வைக்கத்தக்க ஒரு கோரிக்கையானது 13ஐ அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமா இல்லையா என்பதில்தான் கட்சிகளுக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் உண்டு.

இலங்கை இனப்பிரச்சினை என்பது சாராம்சத்தில் ஒரு புவிசார் அரசியல் பிரச்சினைதான். தமிழ் மக்கள் அனுபவிக்கும் எல்லாத் துயரங்களுக்கும் காரணம் அவர்களுடைய புவிசார் அமைவிடம் தான். ஈழத்தமிழர்களின் புவிசார் அரசியல் எனப்படுவது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புவிசார் அருகாமையின் ( Geographical proximity) அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இதில் சிங்கள மக்களுக்கும் இந்தியாவோடு அருகாமை உண்டு. தமிழ் மக்களுக்கும் உண்டு. ஆனால் சிங்கள மக்களை விடவும் தமிழ் மக்களுக்கு அருகாமையில் அதிகம் இருப்பது தமிழ்நாடு. மொழியால், இனத்தால், பண்பாட்டால் இன்னபிறவால் இருநிலத்து தமிழ் மக்களுக்கும் இடையே அருகாமை அதிகம். அந்த அருகாமையைப் பயன்படுத்தித்தான் இந்திய அரசு இந்திய-இலங்கை உடன்படிக்கையை நோக்கி கொழும்பை நிர்ப்பந்தித்தது. அதே அருகாமையை தமிழ் மக்களும் புத்திசாலித்தனமாக பயன்படுத்தலாம். பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் சிறிய தேசிய இனங்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது அருகில் இருக்கும் பேரரசுகளால்தான் அதிகம் தீர்மானிக்கப்படுகிறது என்பது ஒரு வரலாற்று அனுபவம் ஆகும். பின்லாந்தில், திபெத்தில், கிரீமியாவில், சைபீரியாவில், கிழக்குத் திமோரில் அதுதான் புவிசார் அரசியல் யதார்த்தம்.

எனவே ஈழத் தமிழர்களுக்கு இப்பொழுது தேவையாக இருப்பது கட்சிகளுக்கு அப்பாற்பட்ட, ஒரு தேசமாகச் சிந்திக்கின்ற வெளியுறவுக் கொள்கைதான். அதை அமுல்படுத்தத் தேவையான ஒரு வெளியுறவுப் பொதுக்கட்டமைப்புத்தான். அப்படியென்றால் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தலைவர்கள் உள்ளடங்கலாக தாயகத்திலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் அக்கறையுள்ள எல்லோரும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். தமிழ்மக்கள் அரசியலை அரூபமாக சிந்திக்காமல் தூலமாக, பிரயோக வடிவத்தில் சிந்திக்க வேண்டும். அதாவது கட்டமைப்புக்குள்ளால் சிந்திக்க வேண்டும். ஒரு பொதுவான வெளியுறவுக் கொள்கை; ஒரு பொதுவான வெளியுறவுக் கட்டமைப்பு போன்றன இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் இந்தியாவை நோக்கி எப்படிப்பட்ட ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைப்பது என்பது தொடர்பில் தெளிவற்ற நிலைமை காணப்படுகிறது.

பொருத்தமான கட்டமைப்புகள் இருந்தால் எந்த ஒரு நெருக்கடிக்குள்ளிருந்தும் விடுபடலாம் என்பதற்கு சிறிலங்காவில் அண்மைக்கால உதாரணம் உண்டு. டெல்டா திரிபு வைரஸ் நாட்டின் கழுத்தை நெரித்தது. ஒருபுறம் பொருளாதார நெருக்கடி. இன்னொரு புறம் வைரஸ் நெருக்கடி. மூன்றாவதாக ராஜதந்திர நெருக்கடி. இம் மூன்று நெருக்கடிகளையும் சமாளிப்பதற்கு அரசாங்கம் அதன் வெளியுறவு அணுகுமுறைகளில் சுதாகரித்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதற்குரிய கட்டமைப்புகளையும் நிபுணத்துவ அறிவையும் அவர்கள் பயன்படுத்தினார்கள். அந்த மாற்றங்களை முன்னெடுக்கக்கூடிய நபர்களை உரிய பதவிகளில் நியமித்தார்கள். அதன் விளைவாக அண்மை மாதங்களில் அரசாங்கம் அதன் வெளியுறவு அணுகுமுறைகளில் ஒப்பீட்டளவில் மாற்றங்களைக் காட்டியிருக்கிறது.

அவர்கள் ஒரு அரசுடைய தரப்பு. அவர்களிடம் எல்லாவற்றுக்கும் கட்டமைப்புக்கள் உண்டு. ஆனால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களிடம் உரிய பொருத்தமான வெளியுறவுக் கொள்கையும் கிடையாது ; ஒரு பொதுவான வெளியுறவுக் கட்டமைப்பும் கிடையாது. இவ்வாறான ஒரு வெற்றிடத்தின் பின்னணியில்தான் மேற்படி கட்சிகள் இதுவரை சந்தித்தன ; இனியும் சந்திக்கவிருக்கின்றன.

## தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவுக்கு...

ஐயா, ஞாபகம் இருக்குதோ?

"அரசியல் தீர்வு வரும். வராமலும் போகலாம். வலு நிதானமாகச் செயற்பட வேணும்" எண்டு நீங்கள் சொன்னதாக 20 செப்ரெம்பர் 2017 அண்டு பேப்பரிலை செய்தி வந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கோ இல்லையோ எனக்கு இருக்கு. அண்டு துவங்கின "வரும் ஆனால் வராது" எண்ட உங்கட கதை இன்னும் முடிஞ்சபாடில்லை. 'உரிய தீர்வு கிடைக்காவிடில் தமிழர் தம் வழி வகுப்பர்' எண்டு 25 ஏப்ரல் 2018 அண்டைக்கு நீங்கள் சொன்னதாப் பேப்பர் செய்தி வந்ததெண்டாதாவது ஞாபகமோ?

'சர்வதேச ஆதரவுடன் சமஷ்டி கிட்டும்' எண்டு சொன்னதாவது ஞாபகம் இருக்கோ?

'எமது உரிமைகளைப் பெறுவதற்கு கோத்தாபயவிடம் மண்டியிட்டு பிச்சை எடுக்க முடியாது' எண்டு திருகோணமலையிலை வைச்சுச் சொன்னது தன்னும் ஞாபகமோ?

'தீர்வு கிடைக்கும்வரை தொடர்ந்து போராடுவோம்' எண்டு சொன்னதும் 'அரசியல் தீர்வு தவறினால் மீளவும் வன்முறை வெடிக்கும் 'எண்டு பிரிட்டிஷ் அமைச்சரிட்டை நீங்கள் இடிச்சுரைச்சதாக பேப்பருகளில வந்த செய்தியாவது உங்கட மூளையிலை பதிஞ்சிருக்கோ?

'தாமரை மொட்டினாலேயே தமிழீழம் மலரும்' எண்டு நீங்கள் சொன்னனீங்கள். அதுக்குப் பிறகு ' ஜனநாயகத்தை மீறியதாலேயே புலிகள் வீழ்ச்சியடைந்தனர். சர்வதேசப் பின்னடைவுக்கு இதுவே காரணம்' எண்டும் இடித்துரைச்சனீங்கள்.

மஹிந்தவே தேசியத்தலைவர் எண்டு நீங்கள் ஒருக்காப் பார்லிமெண்டில புகழ்ந்தனீங்கள். அதுமட்டுமில்ல, நீங்கள் எதிர்கட்சித் தலைவரா இருந்த காலத்திலை 'அடுத்த தைப்பொங்கலுக்குள்ளை நிரந்தரத் தீர்வு கிடைக்கும்' எண்டு சாத்திரம் சொல்லியே இப்ப நாலைஞ்சு வருசமாச்சு.

'சர்வதேச உதவியுடன் தீர்வு 2014 இல் கிடைக்க வாய்ப்புண்டு - தமிழ்தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை 'எண்டு செய்தி வரேக்கையும் கட்சித் தலைவர் நீங்கள்தான்.




அதோடை நீங்கள் நிப்பாட்டேல்லை. 'இவ்வாண்டுக்குள் எப்படியும் தீர்வு. ஜனாதிபதியை நேரில் சந்தித்தபோது அவர் இணங்கினார்' என்கிறார் சம்பந்தன் எண்டு தமிழரசு மத்திய குழுவிலை அறிவிக்கேக்கையும் நீங்கள் ஊமைத்துரைபோலத்தான் கட்சியிலை இருந்தனீங்கள். அதுக்குப் பிறகும் நீங்கள் சும்மா இருக்கேல்லை 'இரண்டு வாரங்களுக்குள் நல்ல செய்திவரும்' எண்டு ஒரு மேதினக் கூட்டத்திலை தொண்டை கிழியக் கத்தினியள். 'பெப்ரவரிக்கு முன் புதிய அரசமைப்பு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ரணில் எழுத்து மூலம் உறுதி ' எண்டும் ஒரு செய்தியை 30 நவம்பர் 2018 அண்டு பாத்திட்டுச் சந்தோஷத்திலை வழக்கைத்தைவிட அரைப்போத்தல் கூட அடிச்சனான். மற்ற நாள் வெறி முறியேக்கைதான் தெரியும் நீங்கள் பகிடிக்குச் சொன்னனியள் எண்டு. இன்னும் அந்தாள் சொல்லுறதை நம்பிக்கொண்டு இருக்கிறியளோ எண்டு என்ரை மனுசி என்னைப் பாத்து என்ரை காதுச் சவ்வு கிழியக் கேளாத கேள்வி கேட்டவள். அண்டு நான் கள்ளை விட்டிட்டுப் பொலிபோல் குடிச்சிருக்க வேணும். ஆனால் குடிக்கேல்லை. ஏன் எண்டு தெரியுமோ...?

2017 இல எண்டு நினைக்கிறன். நீங்கள் சொன்னமாதிரி ஒருக்கா மஹிந்தாவும் சொல்லி மாட்டினவர். அடுத்த போயா தினத்துக்கு முன்னம் அரசாங்கத்தைக் கைப்பற்றி விடுவோம் எண்டு சொல்லிப்போட்டு போயாவும் வந்து போனாப் பிறகு சிங்களச் சனம் கேட்டுது 'என்ன அரசைப் பிடிக்கக் காணேல்லை?' எண்டு . 'இஞ்சை சும்மா பகிடி விடாதையுங்கோ நான் அடுத்த போயா எண்டு தான் சொன்னனானே ஒழிய திகதி சொல்லேல்லை. ஆனபடியாலை நான் சொன்ன போயா இன்னும் வரேல்லை 'எண்டு மஹிந்த சமாளிக்கப் பட்டபாடு பெரும்பாடு.

நீங்கள் 'அடுத்த தீபாவளிக்குள்ளை தமிழற்றை பிரச்சினைக்குரிய தீர்வை வேண்டிப் போடுவம்' எண்டு சொல்லேக்கை உங்களுக்குப் பக்கப் பாட்டுப்பாடுறமாதிரி உங்கடை சகா சுமந்திரனும் ' தமிழற்றை பிரச்சினைக்குத் தீர்வை எட்டிப் பிடிக்கிறதுக்குக் கிட்ட வந்திருக்கிறம். அதாலை தேவை இல்லாத குழப்படியளைச் செய்து காரியத்தைக் கெடுத்துப் போடாதையுங்கோ' எண்டு மற்ற ஆக்களுக்கு வகுப்பெடுத்தவர். கடைசியா ஒண்டும் நடக்கேல்லை. பிறகு கொஞ்ச நாள் மென்வலு, வன்வலு எண்டு கதையைப் பிரட்டிப் பிரட்டிப் பேசிக் கொண்டிருந்தார். எல்லாம் மழையிலை நனைஞ்ச புஸ்வாணமாப் போச்சுது. இப்ப கிட்டடியிலையும் "சீண்டிப் பாத்தால் சிதறிப் போடுவீங்கள். கோத்தாவுக்குச் சம்பந்தன் எச்சரிக்கை" எண்டு நீங்கள் சொன்னதாப் பேப்பரிலை பாத்தன். இப்ப கோத்தாவை ஒருத்தரும் ஒண்டும் பண்ணேலாது. ஆள் ஸ்ரோங். அதோடை எழும்பி நடக்க இயக்கமில்லாமல் இப்ப நாங்கள் இருக்கிறம். அதுக்கை எங்களுக்குள்ளை ஆயிரம் பிளவு. ஆயிரம் ஆப்பு. ஆயிரம் எதிரியள். அதுக்கை நிண்டவன் கண்டவனுக்கெல்லாம் பதவியைப் பிடிக்கிற ஆசை வந்திட்டுது. சும்மா கிடந்த பல சங்குளை சிலபேர் தங்கடை சொந்த அரசியல் இலாபத்துக்காக ஊதிக் கெடுத்துத் தெருவிலை எறிஞ்சிருக்கினம். அந்த இலட்சணத்திலை வீறாப்புக் கதை கூடாது கண்டியளோ.

ஆப்புக்கை வாலை விட்ட குரங்கைப் போலை பல வழியிலையும் மாட்டிக் கொண்டிட்டம். தேவை இல்லாமல் பல சிக்கல்களை கொண்டு வந்திட்டம். அதுகள்ள கிளியர் பண்ண வேணுமே ஒழிய, இப்ப வீர வசனம் பேசிக்கொண்டிருக்கிறது அவ்வளவு நல்லதில்லை. ஆனபடியாலை தயவுசெய்து எங்களுக்கு இனிமேல் உப்பிடி ஒண்டும் சொல்லாதையுங்கோ. காதைக் குடுத்துக் கேக்கேலாமல் கிடக்கு.

இப்படிக்கு,

அப்பாவி அன்னமுத்து

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

# எங்கே...



## சன்மானத்துக்காக கையெழுத்துவேட்டை

சிறுமி கிளியோ ஸ்மித்தை, தங்களது விசாரணைகளின் விளைவாகவே மீட்டதாக கூறியுள்ள பொலிஸார், அரசு அறிவித்த சன்மானம் யாருக்கும் தரப்படமாட்டாது என்று கூறுகிறார்கள். ஆனால், சிறுமியைக் கடத்திவைத் திருந்தவனின் வீட்டுக்கு பக்கத்து வீட்டிலிருந்தவர், தான் பொலிஸாருக்கு முக்கிய தகவலொன்றை சொன்னதாகவும் தங்களது வீட்டுக்கு பக்கத்தில் தனியாக வசித்து வந்த நபரின் நடத்தைகளில் தான் சந்தேகம் கொண்டதாகவும் அவர் அங்காடியில் சென்று சிறுவர்களுக்கான பம்பஸ்கள் வாங்கியதை கண்டதாகவும் ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார். ஆக, இந்த நபருக்குத்தான் பத்து லட்சம் டொலரைக் கொடுக்கவேண்டும் என்று தற்போது சமூக வலைத்தள ஆதரவு அமைப்பு ஒன்று கையெழுத்து வேட்டையை ஆரம்பித்திருக்கிறது.

இதேவேளை, சிறுமியை கடத்தியவன் யார்? 18 நாட்களாக சிறுமியை கடத்திவைத்து என்ன செய்தான்? சிறுமியை கடத்திய 36 வயதான ரெர்றி கெல்லி (Terry Kelly) தனது பாட்டியோடு குறிப்பிட்ட வீட்டில் வசிந்து வந்தவன். பாட்டி அண்மையில் இறந்துபோன பிறகு ரெர்றி கெல்லி தனிமையில்தான் வாழ்ந்து வந்திருக்கிறான். கிளியோ ஸ்மித்தை ஏன் கடத்தினான் என்பதை முப்பது மணிநேரமாக விசாரணை செய்து, அவனை நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறார்கள் பொலிஸார்.



## ஏன் கடத்தினான்?

ரெர்றி கெல்லியின் வீட்டை முழுமையாக சோதனை செய்தபோது, வீட்டின் ஒரு அறை முழுவதும் பொம்மைகளையும் பொம்மைப் படங்களையும் பொலிஸார் மீட்டிருக்கிறார்கள். சுவர் முழுவதும் பொம்மைப் படங்களை ஒட்டியும் அவற்றுக்குக் கீழ் இணையத்தில் ஓர்டர் செய்து வாங்கிய அழகிய பொம்மைகளை அழகாக அடுக்கியும் வைத்திருக்கிறான் ரெர்றி கெல்லி. இவனுக்கு பல சமூகவலைத்தள கணக்குகள் உள்ளன என்றும் அந்தக் கணக்குகளில் சென்று தேடியபோது, பொம்மைகளோடு சேர்ந்து நின்று எடுத்த படங்களை ரெர்றி கெல்லி பதிவேற்றியிருக்கிறான் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுமி கிளியோ ஸ்மித்தும் பொம்மை போல அழகாக இருந்ததால் , உயிருள்ள அந்தப் பொம்மையைக் கடத்தியிருக்கிறான் ரெர்றி கெல்லி.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது ரெர்றி கெல்லி பிணை கோரவில்லை. முழுமையான விசாரணை முடியும்வரைக்கும் அவனைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

தடுப்புக்காவலில் கொண்டுபோய் போட்டபோது, ரெர்றி கெல்லி யார் என்பதை அறிந்த சக கைதி, அடித்து மண்டையை உடைத்துவிட்டான். ரெர்றி கெல்லியை உடனடியாக, மருத்துவமனைக்கு கொண்டுபோய் சிகிச்சையளித்தபிறகு, தடுப்புக்காவலில் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள் பொலிஸார். இரண்டாம் தடவை, இன்னொரு கைதி, இவனை அடித்துக் காயப்படுத்தியிருக்கிறான். தற்போது, ரெர்றி கெல்லி காயத்தோடும் விசாரணையோடும் போராடிக்கொண்டிருக்கிறான்.

**கொசுறுத்தகவல் :**

ரெர்றி கெல்லி என்ற அதேபெயருடைய அவுஸ்திரேலிய அபொறிஜினல் ஆதிக்குடியைச் சேர்ந்த மேற்கு அவுஸ்திரேலிய நபர் ஒருவர், “சிறுமியைக் கடத்தியது நான்தான் என்று நம்பிக் கொண்டு, கொஞ்சப்பேர் எனக்கு தொடர்ச்சியாக கொலை அச்சுறுத்தல் விடுக்கின்றனர் . எனது பெயரும் சிறுமியைக் கடத்தியவன் பெயரும் ஒன்றாக இருப்பதற்கு நான் என்ன செய்வேன்?” என்று பொலிஸ் பாதுகாப்பைக் கோரியுள்ளறாம்.

# விளையாட்டு

ஆர்.லயனல்



டுபாயில் இடம்பெற்றுவரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் பல்வேறுபட்ட அற்புதமான அம்சங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரை அந்த அணியைப்பற்றி நினைக்கும் எவருடைய இதயத்தையேனும் கலங்க வைக்கக்கூடியதாக இந்தத் தொடர் அமைந்துள்ளது என்றால் அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில், அந்த நாட்டின் கொடியைப் பயன்படுத்தவும் தேசிய கீதத்தை இசைக்கவும் தடைசெய்துள்ளனர். ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானின் தேசிய கீதத்தையோ கொடியையோ பயன்படுத்தக்கூடாது என்று தலிபான்கள் கோரியபோதும் ஐ.சி.சி. அதை மறுத்துள்ளது. இதனால் ஆப்கானிஸ்தானின் தேசிய கீதம் சர்வதேச அளவில் இறுதியாக இசைக்கப்படும் சந்தர்ப்பமாக ரி-20 அமைந்துள்ளது. ஆப்கானின் தேசிய கீதம் இசைக்கப்படும் போதெல்லாம் அந்த நாட்டின் வீரர்கள் கண்கலங்குவதும் இதனால்தான்.

இது ஒருபுறம் இருக்கையில் மறுபுறம் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான அஸ்கர் ஆப்கான் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். அஸ்கர் ஆப்கானின் இயற்பெயர் அஸ்கர் ஸ்ரானிக் ஷை என்பதாகும். தனது நாட்டின் மீதிருந்த பற்றுக் காரணமாக அவர் தன்னுடைய பெயரை அஸ்கர் ஆப்கான் என்று மாற்றினார். அதாவது தன் நாட்டின் பெயரையே தன் பெயராகவும் கொண்டிருந்தார். அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த வீரர்களை ஒருங்கிணைத்து ஒரு அணியாகக் கட்டியெழுப்புவதில் அஸ்கர் ஆப்கானின் வகிபங்கு பெரியது. இன்னும் சொல்லப்போனால் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் அடையாளமாக இவர் இருக்கின்றார். அவ்வாறு ஆப்கானுக்கு என்று ஒரு புதிய முகத்தைக் கொடுத்த அஸ்கர் ஆப்கான் சர்வதேச அரங்கில் இருந்து விடைபெற்றுள்ளமை அந்த அணிக்குப் பெரும் மனத் தாக்கத்தைக் கொடுத்திருக்கும் என்றால் அதை மறுப்பதற்கில்லை.

ஜனநாயக ஆட்சியின் பின்னரான அதாவது அமெரிக்க ஆதரவுபெற்ற ஆப்கானிஸ்தான் அரசின் சர்வதேச அங்கீகாரமாகவும் அஸ்கர் ஆப்கான் விளங்கினார். இன்னும் சொல்லப் போனால் இவர் அணிக்குள் இருப்பதை தலிபான்கள் விரும்பியிருக்க மாட்டார்கள். ஆக, தலிபான்களின் அழுத்தமும்கூட அஸ்கர் ஆப்கான் சர்வதேச அரங்கில் இருந்து விடைபெறுவதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## இலங்கையின் எழுச்சி



நடைபெற்றுக் கொண்டிருக்கும் ரி- 20 உலகக்கிண்ணம் இந்தியா -மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தாலும் இலங்கை அணியைப் பொறுத்த வரையில் பேரெழுச்சிமிக்க தொடராக அமைந்துள்ளது என்பதுதான் உண்மை. எதிர்பார்த்ததை விட இந்தத் தொடரில் மிகச் சிறப்பான பெறுபேற்றை இலங்கை அணி வெளிப்படுத்தியுள்ளது.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தகுதியாட்டத்தில் விளையாடியே பிரதான சுற்றுக்குள் செல்ல வேண்டிய இக்கட்டான நிலை இலங்கை அணிக்கு இம்முறை ஏற்பட்டிருந்தது. அத்துடன் கடந்த காலங்களில் இருந்த தடுமாற்றங்கள் காரணமாகவும் இலங்கைக்கு கெட்ட கனவாகத்தான் இந்தத் தொடர் அமையும் என்றே கருதப்பட்டது. ஆனால் அனைத்தையும் தகர்த்து மிகப்பெரியளவில் சாதித்துள்ளது இலங்கை அணி.

இலங்கை அணி அரையிறுதிக்குத் தகுதிபெறவில்லைதான். ஆனால், தகுதிச் சுற்றில் எந்தச் சிரமமும் இன்றி அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிபெற்றது. அத்துடன், பிரதான சுற்றில் பங்களாதேஷ் மற்றும் நடப்புச் சம்பியன் மேற்கிந்தியத் தீவுகளை வென்றது. தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளுடன் தோல்வியடைந்தாலும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தோல்வியைத் தவிர ஏனைய போட்டிகளில் இறுதிவரை இலங்கை அணி தன் பலத்தையும் போராட்ட குணத்தையும் வெளிப்படுத்தி, போராடித் தோற்றது.

இன்றைக்கு ஆறு மாதங்களின் முன்னர் இலங்கை அணி இருந்த நிலைமையுடன் ஒப்பிட்டால் இது பேரெழுச்சிதான். தம் அணியில் உள்ள வீரர்களின் பெயர்களே ரசிகர்களுக்குத் தெரியாத நிலைகூட இருந்தது. 9 மாதங்களில் 6 முறை அணித்தலைவர்கள் மாற்றப்பட்டனர். இவ்வாறிருக்கையில் தற்போது 11 வீரர்களும் சரிவர அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆரம்ப இணையைத் தவிர்த்து ஏனையவர்கள் தம் பங்களிப்பைச் சரிவர வழங்கியுள்ளார்கள். இதுவரை காத்த பொறுமையை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு வெளிப்படுத்தி வீரர்களுக்கு வாய்ப்புக்களை தொடர்ந்து வழங்கினால், சர்வதேச அணிகளுக்குச் சவால் விடக்கூடிய இலங்கை அணி வெகுதொலைவில் இல்லை.